47. உண்டான முன்டெலும்பு வர்மம் கொண்டால் உணர்ச்சைகெட்டு மயங்கிவிடும் உண்மையாக தண்டான சீதமோடு தளர்ச்சைபுண்டாம் தவறுது இன்னமொரு குறியைக்கேளு முண்டாமல் சுமத்திடுகில் பெத்தம் காணும் முக்கியமாய் காலமது ஊச்சங்கொள்ளில் வண்டாடும் பல பிணிரோய் உண்டாமென்று வகுத்திடுவேன் மூன்றைருறைத்த வழமைதானே.

48. வண்மையாய் பெரிய அத்திச்சுருக்கி கொண்டால் மைந்தனே உடல் குழுகிக்கூனிப்போகும் அம்மை என அறிவிழுந்து செய்யாதேதீ அஷ்டமத்தில் இண்டிலும் விஷமுண்டாகும் துன்மை என கடிகை பதிமுறுக்குள்ளே துஞ்சுமுயிர் துஞ்சுமே சிறிய அத்திச்சுருக்கி கொண்டால் உண்மையே வர்மம் இரண்டும் குணம் ஒன்றுகும் இளகிடினும் மண்டலத்திலசாத்தியமாமே.

49. ஆமென்ற சுருதிவர்மம் கொண்டால் கேளு அடிவயறு கொழுத்து வலிஊளவு சன்னி ஓமென்ற பாதாதிகேச மெண்சாண் உடம்பெல்லாம் வீக்கமுண்டாம் ஒன்றுபோலே காமென்ற சாகாதமூலியப்பா காசினியில் அழுதுவள்ளி என்று பேருமேவமென்று பரித்துவந்து கசக்கி தேகமீதிலிட ஓடிப்போகும் விள்ளொண்ணுதே.

50. விள்ளாதே இன்னமும்தான் காலம் கொண்டால் மெய்கவரும் புறமொதுக்கி வலிக்கும்பாரு விள்ளாதே முள்

Digitized By Roja Muthiah Research Library

ளாக்காலத்துவும் பெருக்கமிலறும் முதிர்ந்து போகும் சன்னிவருும் சாத்தியமாகும் முள்ளவே பள்ளவர்மம் கொண் டதாலுல் உடல் குன்னும் வயறு குன்னிப்பிடிக்கும்பாரு கொள்ளுமிதல்லால் முதுகுதாரை நீளம் கொழுத்து வலித் திடும் காலம் கொண்டாலென்றே.

51. கொண்டதொரு உடல் சுழுக்கி வர்மம் கொண் டால் கொண்டவுடன் வயறாதும் வாய்வு விம்முமம் விண்ட உடன் உள்ளுக்கு நோயும் காட்டும் வெகுநாளாய் குறிகுணங் கள் காட்டிடாமல் கண்ணடைக்கும் மணியசைக்கும் நடக்கவும் கூசும் கைகாலும் அசர்ந்து வீளும் கடிதாய் மீளும் வள்ள முருங்கபாலமதில் நீரிளைப்பு வருத்தும்தான் தனிக்குணத்தை வகுத்துப்பாரே.

52. குத்தும் தும்மிக்காலமதின் குணத்தை கேளு, கொண்டவுடன் வலம்பிடிக்கும் தேகம் கூனும் பத்தியுடன் இளக்கிவிடு இளக்காவிட்டால் பதினெட்டு நாளிகைக்குள் பதைக்கும் சிவன் அற்றமே சாத்தியமானாலும் கேளு ஆனந்த வாய்வுடனே அதிகாரமுண்டாம் புத்தியுடன் பின் சொல்வேன் இதற்குப் பின்னல் பெருநோயும் சயநோயும் இளகும்பாரே.

53. இளக்கவே கைக்காலம் கொண்டதாலல் புசம் விழுந்து மதிமயங்கும் போதக்கேடாம் உளக்கவே சட்டப் பிரக் காலம்கொண்டால் உடல் மயங்கும் கண் விளித்திருக்கும் கன்னல் வளைந்த பதினெட்டிற்குள் இளக்காவிட்டால் மாறும் மேலில்வலி குடலில் வாய்வுண்டாகும் விள்ளவே முன் கூட் டிக் கூரைப்பார்த்து மெய்யானகிருதமுடன் தைலம்கொள்ளே.

54. கொள்ளவே குளிப்பிரக்காலம் கொண்டால் கோணி ஒரு சிரிசிரிக்கும் வாய்பேசாது மெள்ளவே கொண்டவுடன் மயங்கிடாது மைந்தனே கடிகை பதினெட்டாம் பாரு குண மாம் குளிமேக வர்மந்தானும் கொண்டவுடன் கூவென்றுகூவும் விள்ளவே மதிமயங்கும் கடிகை நாலில் வெறிவிட்டுப்பதினெட் டில் இளகும் பாரே.

Digitized By Roja Muthiah Research Library

55. கூமம்பா பூணூல்காலம் குணமேதன்னில் கொண்ட வுடன் மதிமயங்கும் தீரும் நன்றல்லா குற்றமது செய்யும் சொன்னேனும் நாள் சென்றால் வண்டு ஓணன் வம்பிலே விழுந் ததுபோல் நரம்புகூடி வலுவாகி இருந்தயர்ந்து புயமும் வீழ்ந்து தம்பவே சன்னியொடு கைகால் கோச்சு சரீரமதை ஒருபக்கம் திருட்டும்தானே.

56. தானை வரலாறு அறிந்துணர்ந்து தவறுமல் மருந்துசெய்தால் பிணிகள் நீங்கும் கூரான இருபுறமும் ஒரு போல் கொள்ளில் கூறு தசவாய்வதுவும் அடைத்துப்போகும் கோனை சீதமுண்டாம் கொழுத்தவலியுடனே சயமுங்காணும் காணுவே குறிகுணத்தைக் கூர்ந்து நீயும் மேலான மருந்து பல செய்தாலும்தான் மீளாதென்றே உலகில் விளம்பலாமே.

57. ஆமப்பா நட்டெல்லுவர்மம் சொண்டால் குறுக்குக் கூனும் நடப்பதுவே ககூடியாகும் வேமப்பா கீல் வாதத்தில் கொண்டுவிடும் எண்ணைகள் தைலமது விரைந்தே பார்த்து ஏமப்பா பலவிதமாய் சிகிச்சை செய்து எண்ணையிலிட்டே சவட்டுவாயே. கச்சைவர்மம் கொண்டால் தாமப்பா உந்தி தனில் உளைச்சலுண்டாம் தம்பிக்கும் மலஜலமும் தளர்சை யுண்டாமே.

58. கைக்கூட்டுக்காலம் தளைத்துமே கைப்புஜம்விழுந்து தாழும் மதிமயங்கும் பன்னிரெண்டு சென்றால் விளைந்திடவே சாத்தியத்தின் குணம்போல் மேவும் வேண்டியதோர் பரிபாகம் செய்துபாரு, அளைத்தவண்ணம் காலமெட்டில் முளமீயாதே அடித்திட்டால் காச்சல் குளிர்பனியுண்டாமே. இளைத்திடவே வாய்வு குணம் பிரந்தாலாகும் இருபுரமும் ஒரு குணமாய் இசைத்துப்பாரே.

59. பாரப்பா அடங்கல்தன்னைச் சொல்லக்கேளு பரன் கிருபை அனுதினமும் பரிந்துபோற்றி பேரப்பா தடவுமுறை பேணிச்செய்து புறமிருந்து எல்லுமுறை பேணிச்செய்து வாரப்பா நரம்பெல்லாம் இழுத்துப் பின்னிவாங்கு தைலம்

Digitized By Roja Muthiah Research Library

நடவிவிட்டு முன்னும் பின்னும் மூரப்பா செவிக்குழியில் ஊனி ஏந்தி உள்தாரை புறதாரை தவிக்கோரே.

60. தடவியே வலது கையை அகத்தேதகட்டி வாங்கியே சட்டமதில் சவட்டிக்கொண்டு உலாவியே இருத்துவிட்டு முன் துடங்கி திருச்சுக்கட்டி ஓங்கியே உதரிவிடத் தீருமப்பா சடம் தன்னில் விடுவதற்குத் தைலம் சொன்னேன் சிறிதென்று எண்ணுதே ஜெகத்தில் செய்யே.

61. சிறப்பான நல்லெண்ணை படிதானென்று எய்யவே பசுவின் நெய்படி காலாக நிம்பன் எண்ணையுடன் இசங்கின் நீர் படிதானென்று உய்யவே அதிமதிரம் கிரும்பிவேடு உர் பனமாய் முத்தம் ஜாதிக்காய் தாளிசபத்திரி வெய்யவே அரைப் பலமாய் அரைத்துக் காச்சி வருத்தமண் பருவத்தில் வரிசை யாமே.

62. வரிசையாய் கண்டமுதல் நாபிமட்டும் வகுத்தேதார் வர்மமது நாற்பத்தைந்து வரிசையாய் தலமதுதான் வெவ்வே ராக படுதலமும் குறிகுணமும் பகர்த்தெல்லாம் கரிசனையாய் இளக்குமந்த அடங்கலோடு கைமுறையும்செய்முறையுங்கண்டு கூறி பிரியமாய் தைலமது பிரித்துச் சொன்னேம் பொய் என்று எண்ணுதே புரிந்து செய்யே.

63. எண்ணறிய மூத்திரக்காலம் கொண்டால் எண் ணுதே மூத்திரம் நீர் கழிந்துபோகும் மண்ணில் வறண்டு சுறு சுறு என்று மோளரும் துள்ளிப்போகும் ஈரெட்டு நாளிகைக்குள் கொன்றுபோடும் கல்லிடைக்காலம் உடம்பு வேர்த்து குளிர்ந்து தான் பார்க்கும் முன்னே தளர்ச்சையாகும் திண்ணமுடன் புரிகடிகை எழுமூன்றிர்க்குள் திடமுடனே மறுக்காலம் நோக்கிக் கொள்ளே.

64. மருகிய வலம்புரிக்காலம் கொண்டால் மறுவு சிறு நீர் பேதிகழியாதப்பா நெருவியே வயரூதும் கால்கள் இரெண்டும் நிமிர்ந்துபோய் கைக்கடங்கி நின்றிடாது தருகியே இடம்புரிக்காலம் கொண்டால் தண்டுவலி உளைச்சல் குத்துச்

Digitized By Roja Muthiah Research Library

சரீரம் சிறும் அருகுநீர் ஓழுகும்படி. பேதிமோக அடுத்தடுத்
கல் பார்த்து நீ இளங்கிக்கொள்ளே.

65. அடவாக வெல்லுருமி அன்னரம்பில் அசவு கொண்
டால் குணத்தைக் கேளு, அடிவயற்றில் நோவுகொண்டு சன்னி
சிதம் அடவாக மண்டையிலே மயக்கமுண்டாம் பொடியது
போல் அமிர்தமது கலங்கும் மெத்த போதக்கேடு பித்தரை
போல் ஆட்டம் பாதிடமாக நரம்பதுவின் கூறுதன்னை தெளி
வாகச் சொல்லிவிட்டோம் தெளிந்து பாரே.

66. விட்டிடவே நரங்கு குந்திக்காலம் கொண்டால்
வீங்குமடாசரீரமெங்கும் மூச்சாடாது காட்டிடவே முறைக்கு
முறை செய்யாதே நீ சாத்தியமென்றெண்ணாதே அசாத்திய
மாகும் கட்டிடவே அணில் வர்மம் கொண்டகாலல் கை
முறிந்து மெத்தம்மாய்ந்து இறந்திபோகும் தொட்டிடவே
வேண்டாங்காண் அசாத்தியமாகும் சொற்பிரமன் வந்தாலும்
மீளாதென்றே.

67. எண்ணவே ஆந்தைவர்மம் கொண்டதாலல் இயல்
பாக செய்குணத்தை இயம்பக்கேளு அன்னமே தளர்ச்சை
யுண்டாம் உணர்வுண்டாகும் அடுத்தடுத்து மூச்சடங்கும்
போதக்கேடாம் மிள்ளவே சாந்தம் வரும் ஏழாம் நாளில்
புத்தியுண்டாம் மயங்கினாலும் புகழ்ந்துகேளு உன்னவே வர்ம
மது ஒன்பதிற்கும் உத்தமனை அடங்கல்தன்னை உற்றுக்
கேளே.

68. உற்றுநீ அடங்கல்தன்னைச்சொல்லக்கேளு உறுப
டவே கீழ்நோக்கி தடவிக்கொண்டு அற்றுமே சவட்டுமுறை
ஆட்டிச்செய்து அதன்மேலே நரம்பிளக்கி வலித்துப்பின்னி
ஓத்தகோதார் காலிரண்டும் திரிச்சுக்கூட்டி உள்த்தாரை குருக்
கடக்கி உகந்துசெய்து ஏற்கவே கைநோக்கி இருக்கிச்செய்ய
இயல்பாக கீழ்நோக்கி தடவிக்கூட்டே.

69. கூட்டியே இருபுறமும் அசைத்துக்கொண்டு கன
மாக வேலவனை இருக்கச்செய்து திட்டமுடன் நீரடங்கல்

Digitized By Roja Muthiah Research Library

ஞன்னில் ஊன்றிசேர் ஜென்னி அடங்கலும் திடமாய் செய்தால் கட்டமதாய் இந்த உயிர் மீளுமப்பா கைமுறைகள் தவறுமல் கருதிப்பாரோ வட்டமுடன் குருவருளை மனதிலுன்னி வர்மத்தின் அடங்கலிலே வகையாய் செய்யே.

70. செய்யவே எண்ணையதின் விபரந்தன்னை செப்புகிறேன் நல்லெண்ணை படிதான் ஒன்று பொய்கை என்னும் போர்கொண்ட எண்ணை பாதி (பேரண்டத்தெண்ணை) புளியம் பழச்சாறுவிட்டு மத்தித்து நெய்கையுறும் சூரியனில் வற்றக் காய்ச்சி நீர் சுண்டத்தானெடுத்து குப்பிக்கேற்று பொய்கையுறும் நிறப்பறிந்து இதம்போல் செய்யே எடுத்தபிணி சுகமாகும் இயல்புதானே.

71. கண்டாயோ பேர்தலமும் குணமும் பேரும் குறியாக அடங்கல்தன்னை நாபி முதல் மூலம் மட்டும் கலந்தவர்மம் ஒன்பதையும் கருதிப்பார்த்து கொண்டிடவே காலங்களின் குணமும் பேரும் குறியான அடங்கல்முறை இழக்கும் பாகம் விண்டிடவே தைலத்தின் விபரந்தானும் விரித்துரைத்தேன் என் காதில் கேட்டமட்டும் மன்றி நிறை குணமதனை இதன் மேலாக வழுத்துகிறேன் மாணக்கா மகிழ்ந்து கேளு.

72. மகிழ்வான மொழியதனில் காலம் கொள்ளில் மைந்தனே மொழிகளன்று களைப்புண்டாகும் திகளவேதரிப்பிளைப்பும் உளைச்சல் விக்கமுண்டாம் தெச்சனைக்காலமது செப்பக்கேளு கவுளவே அசாத்தியம் களைப்புநோவு கண் புகைச்சல் ஜன்னியொடு சீதமுண்டாம் திகளவே தினம்நாலில் மரணமாகும் தெளிவாக செய்குணங்கள் சூட்சப்பாரே.

73. சூட்சமாம் சுண்டோதரிகுணமேதன்னில் துடிக்குமப்பா சரீரமொடு விக்கமுண்டாம் விச்சப்பா சொல்லுகிறேன் விரும்பிக்கேளு ஷிஷம்கொண்டி கொல்லுமப்பா பதிஞ்ஞாம் நாள் காச்சப்பா சுண்டோதரி குளிர்வெதும்பி பனியிளகி கைகால் வீங்கும் தடித்துமே இக்குறிகள்தன்னைக்கண்டால் கைமுறையாய் தைலமிட்டு இளக்கிக்கொள்ளே.

Digitized By Roja Muthiah Research Library

74. தடவுகின்ற காம்தனிலே வெள்ளை வர்மங்கொண்டால் தவறுது களைப்புடனே நரம்புளைச்சல் வடவிலிய கபமூலனே புகைக்சலுண்டாம் மாறிவிடுமே நோய்களெல்லாம் மணிக்கட்டில் மணிபந்தவர்மங்கொண்டால் கைகளைத்து வீக்கமுண்டாம் குளிரும் தேகம் அடவிலிய தைலம்விட்டுத்தடவிக் கொண்டு அடவாக இளக்குமுறை செய்துகொள்ளே.

75. கொள்ளவே ஆந்தை வர்மம் கொண்டதாலல் கொண்டவுடன் களைப்பிளகி வீங்கிப்போகும் விள்ளவே முன் சொன்ன தைலம்விட்டு முறையாகத்தடவுமுறைசெய்துபாரு கள்ளவே முடக்குவர்மம் வீக்கமுண்டாம் களைப்பிளகி சாத்தியமேமே.

76. சாற்றியதேதார் முட்டுக்குள் முறிந்துபோனால் சாகாமல் கடுப்புடனே நோவுண்டாகும் போதிப்பாய் ஜன்னியொடு சீதமுண்டாம் பெரு நரம்பு இளகியொருவர்மம் வலிக்கும் மாற்றியதேதார் நசவுவர்மம் குணமேதன்னில் வந்தேதார் புஜம் வீரும் களைப்புண்டாகும் விதியென்றே வீக்கமுண்டாம் விதனம்காணும் வீரிருகரமிரண்டும் குணமொன்றுமே.

77. ஆமப்பா அடங்கலது சொல்லக்கேளு அப்பனே தடவுமுறை தடவிக்கொண்டு தாமப்பா வலித்திருக்கித்தடவிக்கொண்டு தறுகாமல் கையதனை நீட்டியே கைக்குறியில் நரம்பிளக்கி இசைவாகவேதான் விரலெல்லாம் இழுத்துவிட்டு ஓமப்பா உள்ளடங்கல் முறையும் செய்து உதறிவிடு தண்ணீரில் மூன்று நாளே.

78. மூன்றுன எண்ணெயது சொல்லக்கேளு முக்கியமாய் நல்லெண்ணெபடிதான் ஒன்று தோணடா சம்பளச்சாறுளக்குடனே துலக்கமென்றமுத்தைத்துப்போட்டு குன்றுத அடுப்பேற்றி அனலைமூட்டி உறவான பூதம்பார்த்து இருத்துவாங்கு குன்றுமல் நரம்பிளக வேண்டுமென்றால் நுணுக்கமாய் எண்ணெயிட்டுத்தடவிப்பாரே.

Digitized By Roja Muthiah Research Library

79. பார்த்திடமேவ ஈரேழுகாலமப்பா பகர்ந்தபடிசெய் குணங்கள் மேபர்சலங்களோடு தீர்த்திடமேவ அடங்கல் முறை யானதெல்லாம் செப்பிவிட்டோடம் தைலமது தீரும் சொன்மேனும் வார்த்திடமேவ பாதமதிலே மூன்றுனவர்மத்தின் உயிர் தலமும் உரைத்தோமிங்கேகோத்திடமேவ செய்குணமும் மீட் சைதானும் கூறுமேவன் நாள்முறையும் கூர்ந்துகேளு.

80. நாளான கால்வெள்ளைவர்மம் கொண்டால் நரம்பு வலி இடுப்புவலி மண்டைக்குத்து பாழான தேகமது நிமிர வொட்டாது பாதமது களைப்புளைவு பணிக்கும் மேதகம் கோளான உப்புக்குத்திக்காலம் தானும் கொண்டவுடனே மயங்கும் அசாத்தியமாகும் ஆளானகாலமது லகுவாய்கொண் டால் அடிபொத்தி வைத்திடுவதரிதுதானே.

81. அடவான குண்டிவர்மங்கேளு அப்பனே மொளி பிசகும் களைப்புண்டாகும் பாழான விஷம்போலே குத்தல் வீக்கம் பாங்கான தைலமதை விட்டுப்பாரு விரிவான வர்த்தி வர்மம் கொண்டதானல் மைந்தனே களைப்புடனே ஜன்னி சீதம் பெரிதான தளர்ச்சையுண்டாம் மயங்கும் மேதகம் பேணியே காலமுறை பிரித்துப்பாரே.

82. பார்க்கமேவ சுண்மேடாதரி குணத்தைக்கேளு பட் டவுடன் களைப்பிளகி வீக்கமுண்டாம் நேரான மூன்றுக்குள் அசாத்தியம் காட்டி நிச்சயமே எழுந்திருக்கும் நிஜமே சொன் னேன் சொன்னேனே கிழ்ப்படவர்மம் கொண்டால் சிந்தை கெடும் நரம்புவலி உளைச்சல் வீக்கம் ஆறுத அத்தலத்தில் முறிந்ததானல் அப்பனே காயமது ஆறுதன்றே.

83. ஆறுத கண்ணுப்புகைக்காலம் கொண்டால் அப் பனே சீதம் வரும் வீங்கும் கைகால் சாறுகத்தடவிவிட்டு முன்னே சொன்ன தைலமது விட்டிட சாந்தமாகும் தானுக தண்ணீரில் மூன்றுநாள்தான் தடவிவிட மாறிவிடும் தகமை தானே வீரூக்குத்திவர்மம் கொண்டதானல் உடன்தானே மயங்கிவிழும் விதனம் மெத்த உண்டாகும் விரைந்து பாரே.

Digitized By Roja Muthiah Research Library

84. விரைவாகக்குதிரைமுகக்காலம் கொண்டால் மிக்க தோர் களைப்பிளகி வீங்கும் தாரைமீது ஜன்னி கொழுத் தலைவு காய்ச்சல் தணுப்புடனே சூலநீர் பயங்கள் மெத்த உவப்பான பொருள்களை விரைந்து சொன்னேனும் உத்தமனே பார்த்தறிந்து உகந்து செய்யே.

85. உகந்திடவே முட்டுவர்மம் கொண்டதாலல் உத் தமனே சிரட்டையது கழன்றுபோகும் புகைந்திடவே வித னமது பொறுக்கொண்ணுது போதமது கெட்டுவிடும் தளர்ச் சையாகும் மகிழ்ந்திடவே சிரட்டையதை இழுத்துநேரே அதின்மேலே வசைமெழுகு பற்றுப்போட்டு இளக்கிடவே கெட்டி முறைசெய்து பின்னே எண்ணெயிட்டுப்பாகம் இத மாய் செய்யே.

86. கையானை உருமிவர்மங் கொண்டதாலல் கதறி டவே கால் களைப்பு நோவுண்டாகும் துய்யவே ஏழாம்நாள் அசாத்தியமாகும் தூக்குமுறை காலம் மூவஞ்சுமாச்சு வைய கத்தில் பிணிநோக்கித்தடவினுக்கால் மைந்தனே தீராப்பிணி களெல்லாம் பையவே தைலமது வடித்துப்போட்டால் பற்றி யதோர் நோய்களெல்லாம் பறக்கும்தானே.

87. பறந்திடவே தைலமது சொல்லக்கேளு பறிவான நல்லெண்ணெ படிதானெனன்று தேர்ந்ததொரு நிம்ப விளக் கெண்ணெ கால்காற்படியே சமுதாளைச்சாறும் கூட்டிச்சிறந் திடவே ஜாதிக்காய் வசம்பு ஓமம் சீரகம் ரெண்டீடலமொடு தேவதாரம் நிறைந்திடவே வகையொன்று களஞ்சிரெண்டு சேர்த்தரைத்து பதம்பார்த்து வடித்துக்கொள்ளு

88. வடித்ததொரு தைலமாதல் வசவுண்டாகும் வலு நாம்புரைவொடு முடமும் தீரும் படித்திந்த நூல்முறையைக் கண்டு பகர்ந்தபடி தைலமதைப்பதனம்பார்த்து பிடித்த இந்த நோய் கண்டு தைலம்கொண்டு பிசகாமல் இடமதுவின் பேதங் கண்டு அடித்ததொருமூலம் கைகால் ஐந்துவகைப்பிரிவைநீ அறிந்துபாரே.

Digitized By Roja Muthiah Research Library

89. பாரப்பா பாதாதிகேசமுதல் பற்றிநின்ற வர்மத் தைப்பகுதிசெய்து சீரப்பா பீரங்கி பிரித்துச்சொன்னேன் சீர்குணமும் திருப்புமுறை தைலம் வைக்கும் சிறப்பான் கைமுறையும் செய்முறையும் கூட்டிச்செப்பினேன் இன்ன மொரு சூஸ்திரம்தான் வர்மத்தின் நரம்பினிற்குணங்கள் கண்டு குறிகுணத்தை கூறுவேனே.

90. கூறுவேன் பிலமானதல்லல் கொண்டால் குணமு டனே கட்டியுண்டாகும் வீருடன் சுணைபங்கம் விக்கலும் அஸ்திதாகம் தேறிடவொட்டாதப்பா சுரமுடனே சன்னி தோன்றும் நீரிழிவும் தேகமெல்லாம் நிமிரவும் குனியவுமி ஒட்டாதே.

91. ஓட்டவே ஓர்வர்மம் உண்மையாய் தீரவென்றால் பட்டிசநினைவுசொன்ன பரிந்தநெய் எள்ளின் எண்ணை கட் டிடும் தேங்காய் எண்ணைகொண்டு வகைக்கு நாளிவிட்டு குன்றிதொட்டால் வாடியும் விரலிச்சாரே செப்பிடும் மணி தக்காளி சிறந்திடும் கண்டம்கத்திரி பார்த்திடும் தாளியொடு பகர்ந்திடும் சாறு நாளி லறிடும் வகையாய்ச்சேர்த்து.

92. இணங்கிடும் கற்கம் சுக்குமாறிடும் அரத்தை திங்கிவளர் சீரம் மதுரமாமே.

93. ஆமென்னும் மிளகுசெண்டும் அக்கரூவலத்தோடு தாமதமில்லாமூலம் தனிப்பலம் சென்டதாமே வாமெனும் தூணிநீரில் வகை நாளியாகவற்றி நீமென்னும் கற்கமொன்று களஞ்சியாய் அரைத்துச்சேரே.

94. சேர்த்திடு தாளியொன்றில் திறமுடன் கலந்து காய்ச்சி பார்த்திடு வெம்பருவம் பதமுடன் வடித்து மைந்தா யேற்றியே நோயைக்கண்டு இளங்கிய காண்டி நெய்யை நீத் திடும் சிறுகயிட்டு தீர்த்திடும் நோயை எல்லாம் நிமலரானை சொன்னேன்.

Digitized By Roja Muthiah Research Library

95. சொல்லுமேவன் முடங்கள் எல்லாம் துரிதமாய் தீர்வதற்கு வசவெண்ணை வெல்லமேவ இலுமிச்சம் சாறு வீரமிய கூவளத்தின் சாறும் நில்லுமே உண்டதேங்காய் தெண்டோடப்பா அல்லமேவ பாதாளமூலி அரையிசை நாகமேவந்தன்.

96. வெந்தயமொடு ஒக்கச்சேர்த்து விரவித்து களித்த பின்பு போட்டுடன் பதமாய்க்காய்ச்சி முறிவுதன்னிலிட்டால் கயிந்தரி நல்மனம்தானே கருதிலுல் தீருமெபன்று உந்தனுக்கு உரைத்தேதனப்பா உகந்துநீ அறிந்துசெய்யே.

97. வாய்த்திடுமோர் கஷாயம் வளுத்துமேவன் மாது சொல்லுள் நீத்திடும் மாட்பொடம்நீர் பலம் நூறுமூலம் செய்திடும் பானியிம் நூறு சேர்த்திடு கஷாயம் வற்றியே பொய்த்திடா சோடமங்கள் புலனது இருக்கக்கண்டோம்.

98. கண்டத்தில் கருக்குவெள்ளம் கருதிடும் சோடயம்தான் நீக்கவே கூட்டியொன்றுய்சேர்த்து விண்டிடவே குலாவிவிடு பசப்பியேதான் வாரிவிட்டுமே வியந்து கண்டு கொள்ளே.

99. கொள்ளடா பத்தியம்தான் கூர்மையாக மகத்தான தொண்ணூறுவர்மமதில் கொண்டகாலம் ஏமம் ஈடு விலக விள்ளவே வேண்டாமிந்த விதமுள்ள வித்தையப்பா கள்ளமொன்றுமில்லையட்டா கார்முகில் வர்ணணுணை.

100. ஆணை சொல் வசனம்தான் அறிந்துநீ செய்தாக்கால் பிசகாமல் பலிக்கும்நீ நிலம் தன்னில் பேணிநீ செய்ததெல்லாம் பிசகாமல் பலிக்கும் சொன்னேன், நீ நிலம் தன்னில் சொன்ன நிச்சய நூலிதென்று பேணியே வந்திச் சொன்னேன் பிசகில்லை நூலும் முற்றே.

டீரங்கி வர்ம சூஸ்திரம் முற்றே.

குருவே துணை.

Digitized By Roja Muthiah Research Library

வர்மகண்டி.

1. காப்பான ஜனனத்தில் மனுமேவார்க்கெல்லாம் கை கண்ட தலம் குறிகள் கருத்தாய் சொல்வோம் தாப்பான கஷாயமொடு கிருதம் எண்ணை தயவான தடவுதட்டு அமர்த் தலோடு குணக்கேடு அகக்குறியும் பிறக்குறியும் கூர்மையாக ஆப்பான ஆணியைப்போல் அறைவேனப்பா ஆயுள்பாதம் சீர்பாதம் நெற்றிக்காப்பே

2. பாரப்பா கணடதியும் கந்தன் பாதம் பரிவான சந்திரரை தலைமேல் கொண்டேன் சீர்பாதம் மறவாமல் வர்ம கண்டி சிறப்பிடனே அறுபதையும் குறுக்கிப்பாட நேரப்பா இருதயம் கலங்காமல் தான் நீங்காமலே இருந்து குடி கொண்டேதான் சீர்பாதம் குருமுனிக்குப்புத்தி சொன்ன சிறந்த மயில் வாகனனே காப்புத்தானே

3. நெற்றி நடுப் புருவத்திலிருந்து தானே நேராக நெல்லிடைக்குத்தாள்வதாக உற்றதொரு திலர்தவர்மம் கொண்டால் கேளு ஆரப்பா அடி கொண்ட ஆளுதானே அண்ணாந்து நிமிர்ந்திருக்கும் அறிந்துபாருமுற்றுமே நாளிகைதான் மூன்றே முக்கால் என்று முனி பொழிந்தார் தானே

4. தானான நாழிகைதான் கழிக்குமுன்னே தய வுடனே இளக்கு முறை தன்னைக்கேளு காணன சிரசில் ஓர் அடியடித்து கண்டமுடன் தடவிக்கருணை கூர்ந்து ஈனன நெஞ்சியிலோரடியடிக்க எளுந்திருக்கும் என்று முனி இயம்பினரே.

5. செப்பினேனின்னமொரு செய்திகேளு செயலான கடைக்கண்ணின் இரைக்குக்கீழ நயம் பெறவே அதில் தானே நட்சேத்திரக்காலம் நன்மையுடன் அடிபட்டால்

Digitized By Roja Muthiah Research Library

குணத்தைதக்கீகளுஜயம் பெறலீவ கண்ணிரெண்டும் சிவந்து கொண்டு சீராக நாசியில் நீர் ஒழுகும் பாருநயம் பெறலீவ நாழிகைதான் பதினெட்டிற்குள் பார்த்து நீயறியவென்று பாடினமே

6. பாடினமேதார் நாழிகைக்கு முன்னதாக பண்பாக இளக்குமுறை பகரக்கீகளுநாடியே மறுபுறத்தில் கைவிரித்து நன்றுகவேயடிக்க மாத்திரைகேளுஓங்கியே ஒருசாண் அளவில் தானும் அடித்திருத்தி எடுத்துக்கொண்டு தேடியே சுக்கு லைத்து காதுரெண்டும் திடமாக ஊத உயிர் திரும்பும் பாமே

7. பாரப்பா காது சிறு தண்டில் தானே பண்பாக அருகுபத்தி செவிக்குத்திக்காலம் காரப்பா குத்திடிகள் அடிகள் கொண்டால் கண்ணிரெண்டும் தள்ளியே சோரைகாணும் தீரவப்பா இதற்குநாழிகை கேளுதிறமாக நாலைந்துமுன்றே யாகும் ஏறப்பா மறுபுறத்தில் விரல் மடக்கி ஏந்தியே குத்தி நீ இளக்கிக்கொள்ளே.

8. கொள்ளவே பிடரியதின் குழியில்தானே குணமாக முடிமுகுந்த தலத்திலப்பா மெள்ளவேயதில் பிடரிக்காலமென்றே விசையாக இடியடிகள் பட்டால் கேளுவிள்ளவே முகம்சீறி முகமும் கோணும் விசையான நாழிகைதான பதினெட்டிற்குள் முன்னப்பா உச்சியிலார் அடியடித்து உதறியே விட்டுவிட உறைத்தார்தாமே.

9. உறைத்தபடி கழுத்தின்மேல் சீழ்நாடிதன்னில் உத்தமனே அருகுபற்றி உரக்கக்காலம் உறைத்திடுவோம் அதில்பட்டால் குணத்தைதக்கீகளுவாய்பிளந்து நாக்குத் தள்ளி முரட்டைபிட்டு உரங்குமப்பா தனக்கடங்கா நாளிகை தான் தப்பாது தொண்ணூறு களிக்குமுன்னே கைமுறையாய் சொல்லுகிறேன் கண்டுபாரே.

10. கண்டுகொண்டு இளக்குதற்கு முறையைக்கீகளுகை மடக்கிப்பிடரியிலே அடித்துக்கொண்டு திண்டுமுன்

Digitized By Roja Muthiah Research Library

ாய் செய்யாதே அதற்குத்தானே திறபான கைமுறைதான் சொல்லக்கேளு விண்டுகொண்டு இருசாண் நீளத்தில் தாணும் விதமாகவே தடவி இளக்கிக்கொள்ள உண்டுமடா இன்னமொருசெய்திகேளு உச்சியிலோரடியடித்து உதறித்தூக்கே க.

11. தூக்கிவிட்டு இன்னமொரு அடவிகேளு சுகமான காரை எலும்பருகுபற்றி தாளவே திவளக்குளி என்று பேரு தயவாக இதில் திவளக்காலமாகும் பார்த்துமே அதை யிளக் குமுறையைக்கேளு டண்டாக உச்சியிலோரடியடித்துமூளவே முதுவரியில் புறங்கால்கொண்டு முறையுடனே தட்டிவிடு சத்தியம் தானே.

12. சத்தியமாய் இன்னமொரு அடவுகேளு தயவான நெஞ்சின் கும்பெலும்பில்தானே நேர்த்தியாய் இருவிரலின் கீழே நேருவர்மமிதில்கொண்டால் குணத்தைக்கேளு வெற்றி யுடன் உடல் குன்னும் உடல் விசர்க்கும் வெதுவான வாயில் நீர் ஒலிக்கும்பாரு பத்தியமாய் நாளிகைதான் பதினைந்திற்குள் பழமையுடனிருக்குமென்று பகர்ந்து சொல்லே.

13. சொல்லவே இளக்குமுறை சொல்லக்கேளு சுக மாக முதுவரியில் புறங்கால் கொண்டு அல்லுடன் ஒரு தட்டும் தட்டிக்கொண்டு அப்பனே நெஞ்சியிலோரடியும் போடே வலுவாக உச்சியிலோர் தட்டும் தட்டி வாங்கியே உதரிவிட பிடிகள் போச்சே.

14. போச்சப்பா நேரு வர்மத்தின் குணம் குருக் கெலும்பில் நால்விரல் கீழ் அடப்பக்காலம் ஆச்சப்பா அதில் வர்மம் கொண்டால்கேளு வாயினில் பல்லதுவே பூண்டு போகும் ஓச்சப்பா ஒரு தலமே தான் துடிக்கும் உரப்பாக கண் பொடுபொடுப்பாய் அடைக்கும் திறக்கும் காச்சப்பா இதனுடைய குணத்தைக்கண்டு கனமாக நாழிகைதான் கண்டு கொள்ளே

Digitized By Roja Muthiah Research Library

15. கண்டுகொள்ள நாழிகை முப்பதுவேயாகும் கருத்தாக அதற்குள்தான் இளதும் காலம் உண்டு கொண்டு ஒரு முளத்தில் புறங்கால் கொண்டு உத்தமனே மறுபுறத்தில் தட்டொன்று தட்டி கால் முட்டுக்கொண்டு முதுவரியில் தடவி தாழ்த்து உத்தமனே உச்சியிலோரடியும் போடு கொண்டை முடி தூக்கியே உதரிவிட்டால் குணமாக எழுந்திருந்து நடப்பான் பாரு.

16. நடத்தவே கொப்புள் நால்விரலின் மேலாய் நன்றுகவே உருமிக்காலமாகும் அடக்கமாய் அதில் கொண்டால் குணத்தைக் கேளு, ஆள் அழைத்தால் கேளாது மதிமயக்கம் அடங்குமாய் உறுமியே அமரல் காணும் மானிடனே விளித்திருக்கும் பாரு கிடக்கவே நாளிகைதான் அதற்குக் கேளு கள்ளவே ஆறுடனே பத்துமாச்சு.

17. ஆச்சப்பா ஒருமுளத்தின் சிரதானே அடவாக தட்டொன்று உள்ளங்காலில் பேச்சப்பா முதுவரியில் பேசாமல் ஓமப்பா ஒருதட்டு தட்டியதான் இடது நாசியிலேயும் இதமாகவே இறக்கி ஊதிக்கொண்டால் மூச்சப்பா போகுமடா மூர்க்கமுடனே இருந்து திரும்பும்தானே.

18. போகவே விலாவில் முன்டெலும்பின் கீழே புகழாக இருவிரலின் கீழேதானே எகவே வலிய அத்திச் சுருக்கிக் காலம் எக்கமுடன் இதில் கண்டால் குணத்தைக் கேளு, சாணவே பிடித்து ஒரு முளத்தில்தானும் தயவாகவே குருக்கி மூலம் தள்ளும் ஆகவே நாளிகைதான் பதினெட்டாகும் அப்படனே இதற்குமுன் இளக்கிக்கொள்ளே.

19. கொள்ளப்பா எடுத்திருத்தி விலாவில் தானும் குணமாக மறுபுறத்தில் புறங்கால்கொண்டு சூடப்பா ஒரு தட்டு தட்டியதான் சுகமாக உச்சியின்மேல் கைபிணைத்து வாளப்பா ஓடி-தான் அடித்துக்கொண்டு மைந்தனே கைகால் கள் தடவியேதான் கேளப்பா உதரிவிட எழுந்திருந்து கொல்வமுடன் போவானென்றறிந்துகொள்ளே.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 104

Digitized By Roja Muthiah Research Library

20. அறிந்துகொள்ள அதில் ஓரிரையின் முன்னே அப்பனே சிறிய அத்திச்சுருக்கிக்காலம் முறிந்துகொண்டால் காலம் இரண்டும் குணம் ஒன்றுகும் முறையுடனே நாளிகையும் அதுபோலப்பா தேர்ந்து நீ மறுபுறத்தில் புறங்கால்கொண்டு தீர்க்க உரைதேர்ந்துகொண்டு பதரி நீ போகாமல் இளக்கிக் கொண்டு பாலகனே நீயதனை உதரிப்போடே.

21 உதரவே கொப்புளின் நால்விரலின் கீழே உத்த மனே மூத்திரத்தின் காலமாகும் சிதரவே அதுகொண்டால் குணத்தைக்கேளு, சுறுசுறுப்பாய் மூத்திரம் விடும் துள்ளி போலே சிதரவே கண்விளித்துப் பார்க்கும்பாரு சிறப்பாகவே செவியும் கேளாதப்பா இதம்பெருகும் நாளிகைதான் இருபத் தொன்பதாகும் இயலுடனே இருந்ததென்று இயம்புவீரே.

22. இயம்பவே இளக்குமுறை தன்னைக்கேளு இயல் பாக அச்சவ்வில் மறுபுறத்தில்நயம்பெறவே நாய்க்கால்பொருத் துதன்னில் புறங்கால்கொண்டு பயம்பெறவே சமட்டியே இரக் கிக்கொண்டு பண்பான உச்சியிலோரடியும் போடே.

23. போடவே கல்லிடையின் காலம்கொண்டால் வித்து மேலெரித்தான் இருந்துதாலல் சாடவே குணமதுதான் சொல்லக்கேளு, சணத்திலே வித்துரெண்டும் தலம்காணது தேடவே செத்ததுபோல் கிடக்கும் பாரு, திடமாக வாயில் நுரைதள்ளிக்காணும் ஆடவே அசையாமல் உயரமாக அண்டை கூட்டியே மேலே நீ எடுத்துவையே வையப்பா உச்சியின்மேல் கைபிணைத்து வலுவாக அடித்துவிட்டால் வித்து தாழும் செய்யவே உடன் இடதுகையைக்கொண்டு சிறப்பாகவே பிடித்து தண்ணீர்கொண்டு வையப்பா மூன்றுவிரல்வீதியுள்ள பழந்துணியைத் துவைத்ததிலே சுற்றிப்போடு மெய்யப்பா விதையதுவும் அடியில் நிற்கும் விதமாக சுக்கிட்டுக் கஞ்சி கொள்ளே.

24. கொள்ளப்பா எந்த வர்மம் கொண்டாலும்தான் குணக்கேடாய் அடிகள்பட்டு மயங்கிலுலும் தெள்ளவே பயங் கொண்டு கிடந்தாலும்தான் திடரென்று சென்றிளக்க உபாயம்

Digitized By Roja Muthiah Research Library

கேளுரு, விள்ளவே இதற்கெல்லாம் அடக்கக்காலம் விபரமுடன் தானெடுத்துச் செய்துகொள்ள விள்ளவே எடுத்திருத்தி விலா வரெண்டும் விதமாக பிடித்திருத்தித் தூக்குவாயே.

25 இருத்தியே பிலத்தில் ஒரு இடி இடித்து இதமாக கைமேலே கைபிணைத்து வருத்தியே உச்சியில் மெண்டடியடித்து வாகுடனே பிடரிக்கும் மூலத்திற்கும் வரியிலேதான் புறங்கால் மடக்கியடித்து நிறுத்தியே நெஞ்சுதனில் கை கொடுத்து நினைவாக உறங்க ஓர் அடியும்போடே.

26. போடவே காதுமெண்டும் சுக்காலுதி பொட்டெனவே உடம்பெல்லாம் தடவிக்கொண்டு தேடவே காலு ரெண்டும் கீழே நோக்கி திடமாகத் தூக்கியே உதரிவிட்டால் அப்பனே சற்குருவைப் போற்றிக்கொண்டு அன்பாகும் பிரம னுட கடாக்ஷத்தாலே திடமான காலமெல்லாம் இளகுமென்று செப்பினர் தெரிந்துகொண்டு சீரைப்பாரே பாரப்பா இந்த முறை ஒருவருக்கும் பண்புடனே கொடுக்காதே பாவம் பாவம்.

27. ஆமப்பா கொடுப்பதற்கு வருஷம் பன்னிரெண்டு அடைக்கலமென்றுன் பாதம்பணிவாராகில் சிர்பாதம் மறவாமல் அவனுக்கிந்து சிறப்புடனே அவனை நீ சிஷனுக்கி காரப்பா வித்தையெல்லாம் அவனுக்கிந்து களிப்புடனே இளக்குமுறை அவனுக்கியே.

28. இளக்கவே யாருக்கென்றால் செப்பக்கேளு, இன்ப முள்ள மனிதருக்கும் பொருள் தந்தோர்க்கும் பழக்கம் உற வுள்ளோர்க்கும் பகையுள்ளோர்க்கும் பண்பான சண்டாளர்க் கும் இளக்கவேணும் இளக்கமுள்ளான் பொருள் தந்து சரண மென்றால் மெலிவகற்றி அவன் தனையும் விளிக்கிக்கொண்டு களங்கமில்லா மனதாக இருந்துகொண்டு கையடங்கல்தனை யறிந்து அறிந்துதேறே.

29. தேறப்பா குருவினுட பாதம் போற்றி தினதோறும் சிவபதத்தை மறந்திடாமல் தேரப்பா பாலமது போட்டாற் போல சிறப்புடனே சொல்லிவிட்டேன் தலங்களப்பா வீரப்பா

Digitized By Roja Muthiah Research Library

செய்யாமல் அடக்கிக்கொண்டு விதமுடனே சாத்திய மசாத்தியம் பார்த்து நிறம்போலே வெண்மையாய் சொல்லிவிட்டேன் நினைவுகெட்ட மானிடனே உற்றுக்கேளே.

30. காணவே சொன்னதெல்லாம் மெய்யென்றெண்ணி கருத்தாக வர்மமதுகொண்டபோர்க்கு தாணவே பிழைகுறியும் சாகுறியும் பார்த்து சுருக்காகவே நமசிவாயவென்று வேணவே ஜலமேந்தி முகங்கெளித்து வெற்றிபெற அன்னப்பால் அடுப்பிலேற்றி எணவே திறை வளைந்து அகத்திலாக்கி ஈசன் பதம்தனை நினைத்து இளக்கிக்கொள்ளே.

31. கொள்ளவே கருங்காழி இடித்தசாறும் குணமுடனே மதுசேர்த்து மத்தித்ததான் விள்ளாத உள்ளுக்குக் கொடுத்துப்போடு விதம் விதமாய் அகன்றுவிடும் மாறிப் போகும் கள்ளமில்லை இதுபோலே சூட்சம் பாரு கரைகண்ட முனியோர்கள் சொல்லமாட்டார் சுள்ளையிலே தீயது பிடித்தாப்போலே எண்ணையொன்று சொல்லுகிறேன் சூட்சம்பாரே.

32. சூட்சமாய் பசுவின் நெய் சென்னைக்காய் எண்ணை துணையுடன் இலுப்பை எண்ணை வீட்டையில்லா நல்லெண்ணை விருப்பமுடன் தேங்காய் எண்ணை இதமுடன் மேல்மருந்து இயம்பக்கேளு, பட்சமுடன் தொட்டால்வாடு பாதமுட்டில்லா தாளி அச்சதுரதூதுவளை வேலிச்சார் வகையது படிகாலாமே.

33. ஆமை கேள் கிரும்பு சிங்கி சீரம் எலம் அன்பான மதுரமொடு அரத்தை சுக்கு நாமே கேள் திப்பிலியும் கோரோசனை நலமுடனே குங்குலியம் வகைகளஞ்சாப்தாமே கேள் முன்சாறும் எண்ணையோடும் தபவாக பொடி தூவி அடுப்பிலேற்றி போமேகேள் குவளத்தின் சாறும் சேர்த்து புகழாகவே யதனை புகட்டிக் காச்சே.

34. காச்சியே மணப்பருவம்தனில் வடித்து கருத்துடனே வடிகலசம் தன்னில் கேளு இயல்புடனே வெள்ளை குங்குலியம் சேர்த்து இரக்கியே கரண்டியிடை உள்ளே கொண்டால் போச்சுதடா சயமொடு இருமல் கக்கல் பொல்லாத

Digitized By Roja Muthiah Research Library

வர்மமொடு ஈளை ஈடுவரட்சையொடு உள்கொளுத்தும் விரைத்
குடம் வாதம் விள்ளாதே உடம்பு பொன்னும் விளக்கம்
மாதே.

35. கொள்ளப்பா கூடாரத்தைதலம் ஒன்று விளம்பு
கிறேன் சகல ஈடும் தானகல ததும்பியதோர் கருங்கோழி
கொண்டுவந்து தலை முடி கால் நீக்கியே எண்ணாளி தண்ணீர்
விட்டு நழுகாமல் எட்டொன்றுப் வற்றக்காச்சி நலமுடனே
இருத்ததின்மேல் கசாயம் கேளு, அருந்தவே நாயுருவி உளிஞ
வேரும் மயமான குருந்தோட்டி பலம் பத்தாமே ஆமே கேள்
முத்தாணி நீரைவிட்டு அடவாக எட்டொன்றுப் இருத்து
வீர்ந்தே.

36. வாங்கியே தோன்றிய கசாயம் ரெண்டும் ஒன்றுப்
சேர்த்து தக்க கடைமருந்துதனை சாற்றக்கேளு, கேளப்பா
திரிசாதிவிடையம் சிரம் திரமான அரத்தையொடு ஏலம் மல்லி
பூணிவே மதுரமொடு வெந்தயமாம் புகழாகவே களஞ்சாய்
இடித்துக்கூட்டே.

37. கூட்டுவாய் ஆவின் நெய் படிதானென்று குண
மான நல்லெண்ணை படி அரைதான் கூட்டுவாய் சித்திதண்ணை
படி அரைதான் புகழாகமுன் சாறும் எண்ணைசேர்த்து ஆட்டு
வாய் கற்க்கவகைமேலே தூவி அடவாக அடுப்பேற்றி மெளுக
தானல் நாட்டுவாய் வடித்திருத்துக் காண்டி வீதம் நாயகனை
பிணிதனக்கு உள்ளேகொண்டால்.

38. கொள்ளவே மூன்றுநாலாறு நேரம் குணமாக
முறுங்கையிலைசாறுமல்லால் எச்சாமல் எண்ணையதைக்குடித்
துக் காத்தால் எருகின்ற பிணியதனை இயம்பக்கேளு மூச்சு
விடாதிருந்தகோரு கொழுத்தக் காலம் முறைகேடாய் வந்த
சயம் இருமல் சத்தல் போச்சுதடா பழையனடனத்துமப்பா.

39. இயல்பாகவே இன்னமொரு சகாயம் கேளு,
போகவே கொழுத்து முதல் வரட்சை தீரப்புகலுகிறேன்
குருந்தோட்டி இரங்குவில்லை ஆக்கமுடனருகன்வோராடா

Digitized By Roja Muthiah Research Library

தோடை அடப்பதியின் கிழங்கு நன்னரி உளிஞெ வெள்ளைக் குன்றி வேகமுடன் சூரிசிறுநெருஞ்சி கடலாடிவேர் சமூலம் வகையொன்று பலம் ஒன்றுக பாகமுடன் கடைமருந்து திரி சாதி சுக்கு மிளகு கற்கடகசிங்கி எலமடா கடைமருந்துகளஞ்சி யொன்று இடித்துவிடு இருநாளி எட்டொன்றுக்கி வேறையடி சீனிமேல் பொடியும் போட்டு வெல்லுகின்ற கசாயமது திரி நாள் மட்டும் ஜாலமதுசெய்யாமல் குடித்துக் காத்தால் சார் புடனே சயரோகம் கக்கல் விக்கல் வேதாந்த பொதிகை முனிக்குரைத்தவிதி விதமாகக் கசாயமது விளம்பினேன்காண்.

40. காணவே அருகுசங்கு உளிஞெவில்லை கைக்களவாய் குருந்தொட்டி தாதுவேளைவேர் வேணவே பலம் பத்து ஐகை யொன்றுக்கு விட்டுவிட சலம்தூனி இளநீர் வெள்ளம் தோணவே ஒக்க ஒன்றுய் அடுப்பிலேற்றி அனல மூட்டி காணவே மூவிரெண்டுபடியாய் வற்றிக்கட்டி வடிகசாயமதை இருத்துவையே.

41. வைத்தமிதாரு கசாயமதில் நாளிவாங்கி வள்ளநீர் வெள்ளமது நாளிசேர்த்து செய்திடவே கொம்பரக்கு களஞ்சி சேர்த்து சிருடனே கிழிக்கட்டி கசாயத்திலிட்டு கைதிடமாய் திரும்ப எட்டொன்றுய் வற்றக்காச்சி கண்டுகொண்டு சீனி சேர்த்து பொய்த்திடா தந்திசந்தியிருவேளை திரிநாள் கொள்ளே.

42. உண்மையிலே புகையிலை புளியுப்பும் கள்ளு உத்த மனை பச்சை ஜலம் தொட்டிடாதே கண்ணை கசாயமது குடித்துவந்தால் காணுது தலைச்சுற்றல் கக்கல் விக்கல் ஈளை புண்ணை உடம்பெல்லாம் பொன்போலாகும் மெய்கொடுக்கும் பலம்கொடுக்கும் வலுவுண்டாகும் சண்ணுமடா உடல் கொழுத்து புறக்கொழுத்து சதிகேடாய் வந்த ஈடும் அகன்று போமே.

43. போகுமே இன்னமொரு கசாயம் கேளு புகழாக மதுரம் நற்சீரகம் மாஞ்சில் தேடவே களஞ்சதுதான் ரெண்

Digitized By Roja Muthiah Research Library

டாய் வாங்கி திடமான உளிஞெ வேருடம் ஆடவே செந்தட்டி சாறணைவேர் அடவாக இருநாளி எட்டொன்றுக்கி ஆட்டமாய் தூத்திட நல் ஈளை விக்கல் நடுநடுங்கி ஓடிவிடும் நவிலக்கேளு.

44. நவிலுகிறன் கண்டங்கத்திரி நொச்சிதோடை நயமாக சார்வகைக்குப் படிகாலாக கோவின் நெய் உளக் கதுவே தேங்காய் எண்ணை குணமான நிலவேறும் களஞ்சி பத்து நவிலுகிறன் முசர்முட்டை களஞ்சி ஐந்து நண்பனே கடைச்சரக்கு எலம் சீரம் நவிலுகிறன் பத்திரிமாஞ்சி நணுகாமல் வகைகளஞ்சி மூன்றதாமே.

45. மூன்றுன சாறுடனே எண்ணை நெய்யும் முறை யுடனே மருந்தெல்லாம் சேர்த்துப்போட்டு நன்றுன மெலுகு பதம் தன்னில் காய்ச்சி நலமுடனே எண்ணைவடி கலசம்தன் னில் குன்றுத கோமேதகம் புனுகு சட்டம் குணமான குந்திரிக் கம் கொட்டம் வைத்து நன்றுன நெய்யதுதான் கரண்டி வீதம் நாளாறு பொழுதாக உண்டுபோக்கு.

46. போகந்த வயர்காந்தல் உளவுகுத்து பலமான கை கால்கள் உளவுநோவு போகென்ன உடல் வாட்டை தலைநோய் வெர்னவ பொல்லாத இருமலுடன் நெஞ்சிளைப்பு தாக்கென்ன நம்புப்பிடி உள்முறிவு தகர்ந்துவிடும் எண்ணையுட புதுமை யாமே யார்க்குமே சொல்லாத எண்ணையப்பா அறிவான பத் தியமும் அறிந்துசேரே.

47. தேவேவ முருங்கைவேர் தோடைவேரும் திகழ் உளிஞெ டேய்புடலம் அருகன்வேரும் மீரவே வெண்குன்றி தக்காளி சூரிமிளகாறு சிற்றமுட்டியுடன் திரிகடுகு ஏறவே சிறுநாகம் அமுக்குராதிரிபலசிங்கிகூட ஒன்றுன மூலமது பலம் ஒன்றுக வகைவகைக்கு களஞ்சி மூன்றுய் வாங்கே.

48. வாங்கியதோர் மருந்தையெல்லாம் தரித்துப்போட்டு வரைபுனல் இருநாளில் எட்டொன்றுக்கி தாக்கியே இருத்து வைத்து சினிபோட்டு தளமாக அருந்திடுவாய் பத்தியமாக வங்கியே குடித்துவர சயம் வாட்டை ஏற்றிதோரு நெஞ்சிலிடி

Digitized By Roja Muthiah Research Library

வலியும் தீரும் தேங்கியதோர் வலச்சிக்கல் தொகுப்போடே தான் தீருமென்று இதுவகையை அணுக்காய் செய்யே.

49. செய்யவே தோடைவேரு கசாயமொன்று சொல்லுகிறேன் தோடைவேர் பலம் நாரப்பா யையவே இரு தூணி அத்திப்பூவும் பாங்காகப் போட்டதிலே அனலே மூட்டி நையவே மூனிரு நாளியாக்கி நாயகனே இருத்சதிலே வைத்துக்கொண்டு கையோடே கொம்பாக்குக்களஞ்சி ஏழு கட்டளகி இருநாளி எட்டொன்றுக்கே.

50. ஆக்கியே இருத்தசனை நாளொன்றுக்கு இருபோ காக மூன்று நாளுண்ணு பத்தியமும் முருங்கையிலை சருகா டாகும் தப்பாது வேலறென்றுமாகாதப்பா நீங்குமடா கும்புப் பிடி இளுப்பு குத்துவேதனையும் குடலதிலே நோயும் தீரும் போக்கிவிடும் சயநோயும் வாட்சை தீரும் பொல்லாத முடம் தீரும் பேணிப்பாரே

51. பேணிப்பார் கோவின் பால் படிதான் பெண்டு பிசகாமல் புனல் இரண்டு அரிசி ஆறு வணிப்பார் சித்தமுட்டி பலம் இரண்டு எடுத்திடுவாய் அதனரிசி படிதான் காலு நாணயலை இதொக்க வாங்கிக்கொண்டு நலம் பெறவே குடித் திடுவாய் திரிநாள்மட்டும் வேணவே உளைச்சல் மதி கெட்டி டாது வெற்றியாம் எண்ணை யைத்தமெளுகுவாயே.

52. மெளுகிடவே வசவெண்ணை சொல்லக்கேளு முத் தெண்ணை ஆவின்நெய் பன்றிநெய்யே களுகுவாய் பழச் சாறும் சரியாய் வாங்கி சங்கை பெற வெந்தயமும் களஞ்சி வீதம் நளுகாமல் வெந்தையத்தைக்குமறிச்சாற்றால் காயகற்ப தானைத்து ஒன்றுய் சேர்த்து வாங்காமல் குமறிச்சார் வற்றும்போது வார்த்தெடுத்து தைலமதை முறிவில் போடே

53. போடவே தைலமது வற்றிடாமல் புண்ணியனே தினந்தோறும் கடனி வாங்கி நாட்டிலுள்ள மானிடர்கள் நாற்கால் ஜெந்து நாயகனே கோழி முதல் முறிவு கட்டே உள் முறிவு கொண்டதொரு ஈட்டுக்கெல்லாம் கூராடத்தலம்

Digitized By Roja Muthiah Research Library

முன்னேபாடிமேலேமோ செவென்று எண்ணியதேதார் முறிவுத் தெல்லாம் பாலகனே எண்ணையது திடமாய்ப்போடே.

54 அப்பனே மாமேறி முறிந்ததாலும் திடமுடனே தன்னறிவால் வந்தாலும்தான் திட்டிடறி திடுமேவறிமுறிந்தாலுந்தான் பட்டனமேவ அண்ணார்ந்து ஓடிந்தாலும்தான் பனை ஏறிவிழுந்தொடிந்து சிதறினாலும் இடப்பிசகாய் வந்துவிட்ட முறிவுக்கெல்லாம்ஏற்றமாய் எண்ணையொன்று கூறுவேனே.

55. கூறுவேன் ஆலம்பால் படிதான் ஒன்று, குருந் தொட்டி நன்னரி கெற்றி வேருடம் தேருவேலன் காட்டுச்சி நிறைச்சிநாளி தேன் படிகால் சிவதைவிளாம் பிசினுமாமே வேறு கையான் மீனைகளஞ்சியொன்று வாலுளுவை படியரைக்கால் எண்ணைநாளி பிறகிந்த எண்ணையால் அலகுவைத்து பிசகாமல் வடித்திருத்து வைதுக்கொள்ளே.

56. கொள்ளடா கூராடக்கஷாயம் ஒன்று குருந் தொட்டி அருகன் வேர் அழுதவல்லி விள்ளடா வில்லேவேர் செந்தட்டி வேரும் விதமான கொத்தான் வேர் ஆமணக்கும் நாளடா வகை பலம் தான் தரித்துப்போட்டு நாயகமே கற்க வகை திரிகடுகு சொல்லடா திரிசாதி யரிசியாறு சுகமான களஞ்சிவகை கூடப்போடே.

57. போடப்பா முத்தூணி புனலிலப்பா புதுமையாய் அருநாளியாகவற்றி நாட்டப்பா முட்டையிடப்பருவமுள்ள நல்கோழி முடி குடல் கால் களைந்துபோட்டு ஆடாமல் கஷாயமதில் நொறுக்கிப்போட்டு அடுப்பேற்றி உளக்காக்கி இருநேரம்தான் தேடியே கொடுத்துவரத்தீரும் நோய்களள்.

58. தீராத நரம்புப்பிடி இடுப்புக்குத்து துடிதுடித்தல் ஆயாசம் மயக்கம் வீக்கம் குணமான, ஈளை சயம் மாந்த தோஷம் சத்தியுடன் சயம் வாட்டாசை நெஞ்சிக்காந்தல் தளர்ந்த விந்து பலத்துடனே சோரைவரும் வித்தான தேகமது வலுவுண்டாகும்.

Digitized By Roja Muthiah Research Library

59. விள்ளுகிறேன் இன்னமொரு கஷாயம் கேளு சாறுன அவுரிவேர் வெந்தயமுடன் சுகமான திப்பிலியும் மிளகு மாச்சீச ஆச்சப்பா முப்பலசிங்கிகோடை கீர்புடலம் வெண் குன்றி அருகு கொத்தான் ஆளப்பா அமுக்குரு அரத்தை கொட்டம் ஆனதொரு உள்ளி சிறுநெருஞ்சிவேரும்

60. கோரப்பா கருஞ்சுண்டை சூரிவேரும் நினைவாக வகையொன்று பலமொன்றுக பாரப்பா முப்பத்திரண்டெட் டொன்றுக்கி பாங்காக சீனியிட்டு திரிநாளுஞட்டே ஊட்டுவாய் பத்தியமாய் கொண்டபோது உள்சுமேமோடறுபத்துமூன்றும் போமே போகுமப்பா குறிகுணங்கள் கடவுதட்டல் அமுந்த் தல் கட்டல் கைபாகம் செய்பாகம் கண்டுதேறி ஆசான அடுத்து வைத்து அறிந்துகொள்ள குறுக்கியே சொன்ன கண்டிகவி அறுபதுவும் முற்றே.

குருவேதுணை.

Digitized By Roja Muthiah Research Library

நாலு கை மாத்திரை உரை.

1. கணிதமுடன் ஆணும் பெண்ணும் கலந்து போகம் செய்யும்போது விந்துவும் நாதமாகி விர்த்தாதி என்ற விம லக்குழியில் விழுந்து உந்தி முக்கோணிற்கு மேலே நாற்கோ ணில் ஒரு இதழின் மேல்வசமாய் துடர்ந்துகூடி கீழே எறி கலையென்ற இரு பைகளாகும்.

2. என்ற எறிகலையில் நின்று பிரிந்ததுதான் ரசகலை என்பதாகும் சொன்னதொரு கலையில்தான் இதழ் நூற் றெட்டு பைகளையே சுற்றியேதான் வளைந்திருக்கும் இருக்கு மப்பா, இதுகூடே இதழ் ஐந்துண்டு.

3. ஐந்தான இதழதுவில் பிராணவாயுவும் கூடியே மூலவாயுவும் முக்கோணல் மத்தியில் யோனிவாயில் உள்ளான எட்டு விரலுக்குமேலே என்றறிந்து கொள்ளே.

4. அறிந்ததொரு யோனிவாய் எட்டு விரலின் மேலே இரண்டு சமபாகம் ஒரு குழி நீளூற்றும் அதே குழிக்கு நாலு விரல் மேலதாக இருப்பதுவே ரசகலை என்று சொல்வோம் ரசகலையில்நின்று இதளதுவின் மத்திடத்தில் கீழ்நோக்கி வரு வதுவே கூசேநாளம் நாளமது குழியினும் ஒருவிரல் வரை வழியாகவே தானிருக்கும் வசதியாக.

5. இந்த ஒரு விரலளவின் மேலேதானே உள்வட்டம் இதழ்கள் எல்லாம் வளைந்திருக்கும் இதில்தானே சரச சுகமேவும் தோற்றம் அதேகுழிக்கு பக்குவமுன்கால தோற்ற ஊதான ஜவ்வதுவும் காவலாமே.

6. ஆனதிலல் அதனுள்பாகம் இரண்டு வாசல் தளம் இதனருகில்தானே சலாசயமும் அதுவழியே வந்துதானே இன்டமென்ற இடப்பாகம் கிழிந்து தோன்றும் சொன்ன தொரு குழியதுவின் இருவிரல்மேல் நகாளபடி என்றதொரு தளமுண்டப்பா உண்டான முக்கோண ஒருகோணத்தில் வலப்பாகம் தனஞ்செயனின் வாசமப்பா சொன்னதொரு

Digitized By Roja Muthiah Research Library

தனஞ்செயன்தான் கவர் ஆறுக முழுப்பாகம் முக்கோணில் எழுந்துநின்று வழிபிரிக்கும் சலாசயத்தின் வசதிபோல வசதி என்ன கொப்புளின் வலதுபாகம் எரிகலையில் நின்று சுருண்டு சீங்குழலின் இதழ்போல்வந்து குண்டலி ஸ்தானத்தில்கூடி முக்கோணில் பிரிந்த சங்கு முகக்குழியில் நிற்கிறது.

7. பிச்சதுவின் மலர் இதழ்போல் முக்கோண் வாயில் ஒட்டியிருக்கிறது என்றால் எரிகலையில் நின்றுசுற்றியசைந்து நாபியின் உள்ளரையில் கூடி சங்கமுக குழியின்பிலனால் மலாசயம் என்னப்பட்டது வெளியாகிறது.

8. இப்படி மாதாவின் உந்தியில் பூவட்டமாய் பொரியசர்ந்து சாவானந்தம் பெலக்கின்றது விந்துநாதமானது கதிர்போலே சென்று சுரோணிதப்படி என்ற கருக்குழியில் விழும்போது உதானனின் பலத்தால் சுரோணிதம் சேர்ந்து விந்துமணியாகி இதழில் ஒட்டி அரைமாப்போல் கரு அமைகிறது.

9. விந்துசென்றால் ஏழுநாளும் முப்பத்தாறு நாழிகையும் சென்றால் பின்தான் மணியாகிறது ஆகி வாளையுடைய கூம்புபோலையும் இதழ் போலையுமிருக்கும் இருந்து அபான வாய்வு நின்று உருவாக்கி இதழ்மூடி வளருகிறது.

10. அதே சமயத்தில் மூன்று மாதத்தில் வாளையுடைய பொதி வருவதுபோலே வளர்ந்து தணல் உண்டாகிறது பின்னீடு உடலும் பறந்து பஞ்சேந்திரியங்களும் கைகாலும் பஞ்சபூதங்களும் உண்டாகிறது என்றால் தலை உண்டானதன்பின் அங்கே ஒரு வட்டம் உண்டாகிறது.

11. அந்த வட்டத்தன் கீழே குமிழம் பூவின் இதழ்போலே தணல் மூடுகிறது அதுகட்டியாகி சுரோணிதம் சேருகிறது அப்போது சுரோணிதத்திலும் அபானனே நின்று சிரசிலும் ரசகலேபிலும் சேர்ந்து இதழ்களின் வட்டங்கள் மூடுகிறது.

Digitized By Roja Muthiah Research Library

12. அவை கண் செவி வாய் கீழ்நாடி கன்னம் உதடு நாக்கீக இவைகள் வட்டத்தின் உள்ளேதானே அச்ச பிராண கலை என்ற உபவாய்வினாலும் அபானனதில் பலனும் கூடி அச்சதிவின் பதிவுபோலே அங்கங்கள் அமைகிறது.

13. ஆகையால்தான் இதழ் ஒதுங்கி சூடுபிடித்து பிறை என்னப்பட்ட ஒருநாளம் கீழ்நாடியின்கீழ அருகில் பதிகிறது அதுவே தலையில் நாலுதுண்டும் ஐந்துகாலங்களும் ஒன்பது தொடுவர்மங்களும் உண்டாக காரணமானது.

14. பிறகு எட்டு துண்டெலும்பும் ஆறு பொய்கையும் மூன்று சுழியும் காதில் அறுபத்தினாலு அரையும் பின்னே புறகாதில் ஒன்றரை விரலுக்குக்கீழ அரைவிரல் சதுரம் இரண்டினும் இரண்டு சுழியும் உண்டு.

15. காதில் மோடெலும்பிலிருந்து மூளையின் அருகில் வந்து பிறே என்னப்பட்டநாளமே உச்சியில் வெளி உண்டாக்குகிறது புறகாதில் இருபுறமும் முன்னும் பின்னும் அரை விரல் ஆளப்பதிந்து நாலுசுழியாகி இருக்கின்றது.

16. அதேகுழியில் ஒருவிரலிற்குள் இரண்டுபக்கமும் இரண்டு சுழியும் உண்டு அந்தச்சுழியில்தான் சப்த எந்திரம் விசிறிபோலே உள்காதறையில் தட்டுகிறது அதனால் சுழி யசைந்து தொனியுண்டாகிறது.

17. முகத்தின் முன்னே மூக்குவாய் நாடி உள்நாக்கு புற அருகில் தொண்டையின் அலகும் மண்டை சோற்றில் உள்ள பிச்சுவின் மத்தியிலிருந்து இரண்டு பொட்டி எலும்பும் மூன்று அடுக்கும் ஒரு சுழியும் மூக்கில்மேல் ஒரு துவாரமும் கீழ் இரு துவாரமும் மேல்பாலமும் உண்டென்று அறியவும்.

18. அதில் இரண்டு வர்மங்களும் முகத்தில் ஐந்து காலங்களும் மூன்று வர்மங்களும் நாலு துண்டெலும்பும்

Digitized By Roja Muthiah Research Library

இரண்டு மோடெலும்பும் ஆறுமொளியும் நாலு சீப்பெலும்பும் உண்ணுக்கில் இரண்டு தண்டும் அதில் இரண்டு சுழியும் உண்டு.

19. அதில் இரண்டு வர்மங்களும் முப்பத்தாறு சிறு நரம்பும் நாடியில் கீழும்மேலுமாக காதினுடைய அருகு சென்னியில் வந்து சுற்றுகிறது இதில் அதிக நரம்புகள் புஜத்திலும் சங்கிலும் பிடரியிலும் மார்பிலும் கீழ்நொக்கி சிசுவினுடைய சர்வாட்சிதட்வமை உண்டாகின்றது பிரையில் கழுத்தண்டாகி முப்பத்தாறு நொருக்கெலும்பும் ஆறு சுழியும்.

20. மூன்று இசைவும் ஆறு கண்டமும் நூறு உருப்பும் கொக்கியின்கீழ் அரைவில் சவுக்கம் ஒருகுழியும் நாளமும் சங்கெலும்பில் தொண்டைக்குளியும்.

21. அதற்குமேல் உச்சந்தலைவரை தேன் குழலின் துவாரம்போலே மண்டையில்வந்து செவிரெண்டிலும் இரண்டாகப்பிரிகிறது தலையில் நடுவட்டத்தின்மேல் தலைப்பிச்சும் தவக்குழல் வெளியும் அதின்கீழ் சீப்பெலும்பு இரண்டும் நொருக்குத்தண்டு இரண்டும் சீப்பெலும்பிலேயே ஒட்டி அதிலிருந்துதான் முக்கோணின் துவாரங்கள் உண்டாகும் உற்பனமாகிறது.

22. முக்கோணில் இரண்டு அடுக்கும் ஒரு சுழியும் உண்டு இதின முன்வசமாக கண்ணினுடைய குழியும் இமைகளும் இருக்கிறது கண்ணினுடைய குழி இரண்டு விரல் ஆழம் உண்டு பின்னே சிமிளினுடைய சோணைய குழியிலும் மாமிசம் பொதிந்திருக்கும் இதில் சூட்சாதி வந்திரங்கள் ஒளியாகி தேயு சேர்ந்து ஒளி உண்டாகின்றன.

23. கண்ணினுடைய சதையிலிருந்து பதினேழு சிறு நரம்பும் சுண்டு ஜன்னி இரண்டிலும் காதுகளின் அருகிலும் வருகிறது.

Digitized By Roja Muthiah Research Library

24. நரம்பின் உள்ளறையில் முக்கோணின் தலைமை மென்ற குழியும் தொண்டைக்குழியும் உள்நாக்கும் சங்கெலும்பில்தான் ஒட்டி வருகின்றன என்றால் குருக்கினுடைய தாரை எலும்பில் புறக்கழுத்தில் பொன் நட்டெல் வளைவில் தான் இசைவும் அசையும் சுழியும் மூன்று தண்டும் உண்டு.

25. சரீரத்தினுடைய விபரம் தலைமுதல் நரம்புகளும் வர்மங்களும் எலும்புகளும் இசைவுகளும பிரிந்து முதுகில் ஐங்கோணத்தில் புஜங்களோடு கூடுகின்றன அங்கே நக்கள் உருண்டை சிப்பிக்கு ஆறு எலும்பும் இருபத்தாறு பொடி எலும்பும் ஐந்து சுழியும் நாலு பொய்கையும் கழுத்தினுடைய அசை அடங்கல்களும் உண்டென்றறியவும்.

26. பின்னேபுயத்தில் சிப்பியின் குறுக்கே வரியில் இரண்டு வர்மங்களிலும் நாலு பொய்கையுண்டு அதிலிரண்டு காலங்களும் ஆறுவர்மங்களும் உண்டாகி பொய்கை நாலிலும் நாலு சுழியும் அரை விரல் ஆழம் குழியும் உண்டு.

27. கைப்பூட்டு என்பது ரவு அந்தச்சுழி என்றறியவும் அதே சுழியின் யந்திரங்கள் கொண்டுதான் கைகளுக்கு அசைவு உண்டாகின்றன அதற்குமுன் வசமாயிருக்கப்பட்ட ஐங்கோணில் அறுபது சிறுநாளமும் இருபது பொடி எலும்பும் தாரை எலும்பிலிருந்து பதிறு வாரெலும்பும்.

28. கும்பினுடைய கூட்டிலிருந்து பன்னீரெண்டு சிப்பிவாரும் எட்டெலும்பும் பாம்பின் படம் ஆடியது போல் குருநாடியும் அருகோணில் இருப்பு என்றறியவும்.

29. என்றால் அதின் பறைவு இரண்டிலும் இரண்டு பொய்கையும் கும்பில் நடுமத்திபம் ஒரு குழியும் சுழியும் அதிலிருந்து இடம் வலம் ஒன்றரை விரல் நீக்கி இரண்டு பொய்கையும் சுழியும் பின் காலை எலும்பிற்குக்கீழ் இரண்டு மார்பிலும் அகமாக இரண்டு பொய்கையும் உண்டு.

Digitized By Roja Muthiah Research Library

30. என்றுல் அதில் உண்டாகும் துடிப்பு அறு கோணமார்பினுலும் அதினுடைய இருப்புஉந்தியிலாம் அதின் மேலே இரண்டு சுழியும் தொண்டைக் குழியிலிருந்து மூன்று விரலுக்குக்கீழ் ஒரு சுழியும் இருக்கின்றன.

31. பின்னே அருங்கோணில் முலைக்காம்புகளைச் சுற்றி எட்டுச் சுழியும் மூன்றுபதரும் பன்னீரெண்டு சுற்று நரம்பும் ஊக்கெலும்பினுடைய குழலும் தொண்டையின் கீழ் நரம்பி னுடைய அருகும் மய்யத்தில் ஒரு துண்டும் உண்டு பின்னும் அதில் தானே புத்தியிருப்பிடமும் ஒரு நாடியில் சேர்ந்து அசைகிறது அறியலாம் அங்கேயிருந்துஒன்றரை விரல்உயரத் தில் வலப்பாகம் அரைவிரலில் காரிரலில் ஒருகூடு தோன்றி கூம்பின் வலது வசம் பம்பரச்சுடரயந்திரத்தில் அமலாசயம் என்னப்பட்டது காரிரலிலிருந்து ஓட்டாயிருக்கிறது.

32. கூப்பிலிருந்து ஒரு சிறுகுழல் போலேவந்து சங்கி னுடைய குழலில பதிந்திருக்கிறது அதில் சம்பந்தப் பட்டு அன்னக்குழல் சங்கு தொண்டை குழாயிலும் பிறயின் முகத்தி லும் சென்று முக்கோணிலும் ஐயங்கோணிலும் தாலையுண் டாகி கூடுபோன்று வாலெலும்பும் நொறுக்கெலும்பும் உண் டாகின்றன.

33. என்றுல் அறுகோணில் மேல்நோக்கி குருநாடியை தொட்டு மேல்வசமாய் ஆறு பிராண பையுண்டாகி பிராண சுவாசத்திலும் வாயிலும் மூக்கிலும் தட்டுகின்றன அதிலி ருந்து அறுகோணில் மேல்நோக்கி குருநாடி தொட்டு மேல் பாகம் ஆறிலும் பிராண பையுண்டாகின்றன.

34. காரிரலின் வலது பாகம் கூடி நகர்வதுபோல முது கினுடைய தாலையொடும் நாற்கோணில் கொண்டையின் அருகில் பக்கவாசத்தின் இடது பாகத்தோடுகூடி குருநாடி பின்னலாகி வருகின்றன.

Digitized By Roja Muthiah Research Library

35. அது அறுகோணில் முன்சொன்ன சுளி எட்டிலும் எட்டு வர்மங்களும் உண்டென்றல் குருநாடியின் உள்ளுரை வானது நேர்வர்மமாகும் இதிலும் இதன் இடது வலது பாகங்களிலும் வர்மங்கள் கொள்ளக்கூடாது.

36. என்றல் பக்கமிரண்டு வர்மங்களும் எட்டும்போக நாலுகாலங்களும் இதல்லாமல் காரை எலும்பின்கீழ் இரண்டு காலமும் இரண்டு மார்பிலும் இடத்தும் வலத்தும் கைக் குழிக்கு ஐந்து விரலின்கீழ் இரண்டு காலங்களும் உண்டு.

37. பிறகு குருக்கினுடைய காரையில் பதிந்து பன்னி ரெண்டு சுளியும் கைரெண்டிலும் பன்னிரெண்டு வசையும் கைமுட்டில் இரண்டு பாரெலும்பும் ஆறு ஒட்டு நரம்பும் உண்டு.

38. இன்னும் கைமுட்டில் நாலுமோனெலும்பும் இரண்டு பொய்கையும் நாலு சுளியும் உண்டு அதன்கீழ் மொளியிலிருந்து இரண்டு கவறுக நாலு பொடியெலும்பும் கைக்கோட்டின் மொளியில் வருகிறது.

39. பின்னே கைபின் மணியில் குன்றிமுத்துப்போலே நாலுமணியும் இரண்டு சுளியும் நாலுபொய்கையும் திருகும் உண்டு அதிலிருந்து இரண்டு கோரெலும்பும் பத்துசுளியும் நரம்பும் அந்த நரம்புகள் பத்துவிரலிலும் இருபத்தெட்டு மொளியிலும் கலந்திருக்கின்றன உள்ளங்கையில் ஆறுவர்மங் களும் அறுபது சிறுநரம்பும் கவளிவர்மங்கள் எட்டும் உண்டு.

40 அதில் தொடுகாலங்கள் எட்டும் எண்ணூற்றுப் பத்து சிறுநரம்பும் அதில் தடுக்குவர்மம் மத்தியிலும் இரண்டு கையிலும் படுகாயவர்மங்களும் தொடுகாலங்களும் உற்பவமாம் பின்னே கால் இரண்டிலும் தண்டையில் மூலவாசலின்பொறியில் வலுவாக ஆறு எலும்பும் அங்கே இரண்டு குழியும் சுளியும் உண்டு.

Digitized By Roja Muthiah Research Library

41. பின்னே முக்கோணினுடைய ஒருகோணத்தில் தண்டினருகில் எண்கோணமென்றறியவும் அதில் தனஞ்செயன் பலம்கொண்டு தண்டை அசைக்கிறதும் அதன் இருப்புஸ்தானம் உருளைசிப்பி மத்தியில் கம்பின் முனைபோல் காண்பதிலாம்.

42. குருக்கின் தானரை எலும்பின் பொருத்தும் அங்கே இடந்தான். அது லிங்கத்தின் வித்தின் பைக்குள் விருச்சகத்தில் மூலம்போல இருக்கின்றது.

43. ஆதலால் உருளையும் சிப்பியும் இருக்கப்பட்ட மொளியிலிருந்து ஆறுசிப்பெலும்பும் இரண்டு பொடி எலும்பும் சிப்பியின் கீழ்கோணிலிருந்து எட்டு விசைநரம்பும் இரண்டு காலுக்கும் பலமாகிறது.

44. ஆதலால்தான் முட்டின் சிரட்டையில் பிடிக்க அசைய ஏதுவுண்டாகி கீழ் எலும்பும் முகடுபோல் உண்டை லட்சணம் காட்டுகின்றன.

45. அங்கே நாலுகரண்டையும் இரண்டு பொய்கையும் நாலுசுளியும் உண்டு முட்டில் மேல் சிரட்டையும் அதன்கீழ் வளைவாக இரண்டு சுளியும் முளங்காலின்கீழ் இரண்டு எலும்பும் கீழ்கரண்டை என்ற மொளிக்கண்ணும் இந்தவகை எலும்பிலிருந்தென்றறியவும்.

46. முட்டெலும்பு இரண்டிலும் நாலுகரண்டையும் இரண்டு பொய்கையும் இரண்டு சுளியும் உண்டு குதிங்காலினுடைய நரம்பு கரண்டைக்காலின் மொளியின்மேல் காணப்படுவுதாகும்.

47. அங்கொரு நறுக்கெலும்பும் பன்னிரண்டு சிறு எலும்பும் பாதத்தில் மொளியினுடைய கண்ணும் அதன் கீளருகில் மிதியடிபோல் இரண்டு வளையெலும்பும் உப்புக்குத்தியில் சுளியும் உண்டு இதில் கூடிய நரம்புகளும் அதிகம் உண்டு.

Digitized By Roja Muthiah Research Library

48. அதே இடத்தில் வலதுபாகமாக அந்தந்த இணைவு களின் பிரிவு நரம்புகள் தோன்றி அதனதன் விரல்களையும் மோளிகளையும் அசையச்செய்கின்றன இதன் உற்பவம் காலெலும்பிலும் குதிங்காலிலுமிருந்து பத்து நரம்புகள் உண்டாகி விரல்கள் அசைகிறது.

49. அடங்கல்களுக்கு மார்பு தொண்டையில்இரண்டும் அமர்த்தும் அமர்த்தி பின்காலங்களின் குணம் குறி வயறாதி நாக்கு தள்ளி வாசனையறியாமல் கிடந்தால் தொப்புளின் கீழ் நோக்கிப்பிடித்தால் பேதிபோகும் நாக்கு உள்ளிரங்கும் போதமுண்டாகும் மேல்போட்டு பிடித்தால் பேதி நிற்கும் அதன்பின் எட்டெலும்பினுடைய மூணுவது பொய்கையில் குத்தினால் காரீரல் சுருங்கும் கோச்சல் கொளுத்தல் குளிர் சுரம் உண்டாகும்.

50. நாலாவது எலும்பின் பொய்கையில் குருந்தில் குத்தினால் வெள்ளீரலில் குத்தும் வேதனையும் உண்டாகி ஈரல் சுருங்கி பல்லு நெருநெருப்பாய் கடிக்கும் வாய் பூண்டு கொள்ளும் ஐந்தாவது எலும்பின் பொய்கை குருத்தில் குத்தினால் தொண்டைக் குழியில் குத்தும் வேதனையும் கபமும் உண்டாகும் கால் அசைக்கமுடியாது. ஆறுவது பொய்கை குருத்தில் குத்தினால் வலதுகால் அசையாது வித்து சுருங்கி கொட்டாளிபோடும் நடுமூச்சுண்டாகும் வலது மூக்கில் நீர் ஒலிக்கும்.

51. ஏழாவது பொய்கை குருந்தில் குத்தினால் அபானம் திறந்து பேதிபோகும் சுவாசம் கீழ்வாங்கும் ஓர்மையில்லாமல் துடிக்கும் மூக்கை சுளிக்கும் கண்ணு மூடும் பதினெட்டாம்நாள் மரிக்கும் எட்டாவது பொய்கையில் குத்தினால் கைதுடித்துக் கைவிளங்காதிருக்கும் நாக்கு சுருங்கும் சென்னி நரம்புகள் துடிக்கும் கைகால் வெட்டும் விக்கல் வரும் வேர்வையுண்டாகும் ஏழில் மரிக்கும் செய்யாதே பாவம்.

Digitized By Roja Muthiah Research Library

52. கையசைக்கிற தூங்குசகைப் பொய்கையில் குத்தோ தல்லோ கொண்டால் கை விளங்காது கை குத்தி திமிரும் சோச்சலும் நரம்புவெட்டும் சிறு காச்சலும் குளிரும் உண்டாகும் இதற்கு நிதானம் கண்டு இளக்கவும்.

53. கைசீப்பெலும்பிலிருந்து இரண்டு விரல்கீழே கையேற்றிக் குத்தினால் கவிழ்ந்து விழுந்து மண்ணை நக்கும் அலறும் பைத்தியம் பேசும் இதற்கு கைமுட்டிற்குள்ளும் மூணும் பொய்கை சுளியிலும் கீழ்மணியினுடைய அசைவு சுளியிலும் பெருவிரலின் கவளியிலும் மாத்திரை கண்டு கடவிப்பிடிக்கத் தீரும்.

54. கைக்குழியினுடைய பூட்டில் கூர்தாரியில் கொண்டால் கை அசர்ந்து சிப்பி நழுகி கைதாழ்ந்து காரீபலில் ரத்தம் உறைந்து குத்தும் வேதனையும் சரீரத்தில் தரிப்பும் முகமும் கோணி ஜன்னியும் உண்டாகி கண் மஞ்சள்போல் தோன்றி மரிக்கும்.

55. என்றால் கைப்புஜத்தில் வரி எலும்பில் மூணுவது பொய்கையில் வர்மங்கொண்டால் தலசுற்றுண்டாகி வயறு மந்திக்கும் சரீரம் குன்னும் குளிர்சுரம் சுவாசமடைப்பு மூலாதாரத்தில் வேதனை கைகால் பலக்கேடு ரத்தம் கக்கி பதினெட்டில் மரிக்கும் இருபுறமும் இதுவர்மம் உண்டு.

56. உந்தியில் குத்தோ பிடியோ அடியோ கொண்டால் சரீரம் துடிக்கும் இதில் வர்மங்கொண்டால் தாரை எலும்பு வளைந்துகூனும் குரலை அடைக்கும் நாக்குத் துடிக்கும் கண்மூடி, ஜன்னியுண்டாகி பொறி அசர்ந்து சுவாசம் முட்டி மலஜலம் அடைத்து மூக்கில் சளிவந்து விக்கு பதைத்து ஆந்திரத்தில் திமிர் தோன்றி இருபத்து எட்டில் மரிக்கும்.

57. காலின்பின் உரலை அடுக்கில் இடமும் வலமும் இரண்டு பொய்கையுள்ளதில் இரண்டு வர்மமுண்டு இதில் இடியோ குத்தோ தள்ளோ கொண்டால் அசைந்து நடக்க

Digitized By Roja Muthiah Research Library

முடியாமல் சரீரத்தில் குத்தும் வேதனையும் இடுப்பிற்கு மேலக்கேடும் சலாசயம் விழுகிறதுபோல் இளத்தரிப்பும் உண்டாகி மந்தம் குறைந்து ஜலத்தைக்கெட்டிப்பிடித்து தொண்ணூரில் மரிக்கும்.

58. பின்னை கண்ணுதிரி என்ற சீப்பெலும்பின் உள்ளே குதிங்காலின் சிறுநரம்பு இடையில் இரண்டு சுளியும் நாலுபொய்கையும் ஆறு பொடியெலும்பும் நாலு சீப்பெலும்பும் உண்டு பெருவிரலின் நரம்புதான் மேல்பிரயில் வந்து அங்கிருந்து பூவின் இசைகள்போல் நாலாயிரமாய் பிரிந்து கபாலத்திலும் சென்னிமெண்டிலும் சங்கெலும்பினுடைய ஸ்தானத்திலும் அடிநாக்கிலும் சுற்றுவது இந்த நரம்பினுடைய தொடர் என்றறிவும்.

59. அச்சுப்போல் உற்பவித்த எண்சாணில் பொருத்துகளிலும் செவியிலும் சுழிகளிலும் நரம்புவெலும்பு சேர்ந்ததுபோல பின்னலான சிறு நரம்புகள் உண்டாகி பாதத்தில் பதினெட்டு வர்மமும் உண்டாகி எழுபத்தீராயிரம் நாடியும் இருபத்திரண்டு சிப்பியும் அதில் நாற்பது வாதெலும்பும் பன்னிரெண்டு உருளையும் ஆறு பொய்கையும் உண்டாயிற்று.

60. ஆகபத்து வாயுவும் பொருத்துகளில் சுவாசப் பொருக்கத்துவாரமும் அதித்தியசூரிய சந்திரமண்டலங்களும் குழிகளும் மூலஸ்தானங்களும் தருத்தியும் பஞ்சேந்திரியங்களும் இரும்பங்கங்களும் சாலோப சாரூப சாமீப சாயுட்சியமும் அழியாதகலையும் குடலினுடைய பையரைகளும் பஞ்சபூதங்களின் இருப்பிடங்களும் அறுபது நாழிகைக்கு இருபத்தீராயிரத்தறுநூறுசுவாசங்களும் இடபிங்கலை சுழிமுனை என்ற தேசங்களின் வளர்ச்சியும் வாதபித்தசிலேற்பனமாகி அதனுடைய உதாரணம் குருநாடியும் இடைஏந்திரமும் நட்டெலும்பினுடைய சுழிபோக நூற்றெட்டு வர்மங்களும்.

61. ஐந்து கண்டங்களும் மூன்றரைக்கோடி ரோமங்களில் நாலாயிரம் வலுரோமங்களும் நற்சுழிகளும் தொண்ணூற்றுறு தத்துவாதிகளும் ஆறு ஆதாரமும் ஒன்பது துவா

Digitized By Roja Muthiah Research Library

ரங்களும் ஆறு கலையும் நாலுமடக்கும் பன்னிரண்டு முடிச்சும் ஐம்பத்தோராச்சரங்களும் கூடி பாலைபோல உண்டாகி முதலில் ரத்தம் தோன்றி மாம்சமுண்டாகி பின்னே ரோமாதிகள்உண்டாகின்றன இப்படி உண்டாகி தொப்பிளின்துவாரத்தின் வழியாய் தாயினுடைய அன்னமயம்சென்று சிசுவை வளர்க்கின்றன பின்னே ரசகலை என்பதில் உருண்டு திரும்பி தலை கீழ்நோக்கி கொடிகள் தொடர்ந்து சிசுவினுடைய உச்சியில் ஜலம் கும்பம் போலே பையில் தங்கியிருக்கும் அதின் பக்கத்தில் இரைப்பையின் வலது பாகத்தில்தான் உதானனுடைய இருப்பு.

63. பிற்பாடு மாதாவின் சர்வாயுச்சிதம்பூரணவேதனையுண்டாகி உதானனில் பலத்தால் அசைந்து சிசுவினுடைய இருப்பிடம் படிகளர்ந்து பூமியில் பிரசவிக்கின்றன உற்பவத்தின் துடக்கிறமவயணமாகி வளர்ந்து நரம்பிலும் எலும்பிலும் ரத்தம் கலந்து சரீரம் பெருத்து தன்னுடைய அளவில் எட்டுச்சாண் நீளமும் நாலு சாண் பருமனும் வழுமறைவாசல்களும் உண்டாகின்றன மனுஷன் தலையில் சீறுங்கொல்லி ருத்திரக்காலம் சொர்ணக்காலம் துடிக்காலம் இப்படி ஐந்து காலங்கள் உண்டென்றறியவும் பின்னே உச்சியில் துடிக்காலமும் அதன்பின் ஒன்றரை விரலில் தலையோட்டின் நேர்பொய்கை வலதுபாகம் கொம்பேரிக்காலமும் இடதுபாகம் சீறுங்கொல்லியும் இப்படி ஐந்து தொடு காலங்களும் மேல் ஒரு வர்மமும் உண்டு.

64. துடிக்காலம் கொண்டால் தலைக்கு போதக்கேடும் உளறவும் செவிக்குத்தும் மேகனையும் தலையில் பிசின்போல் கசிவும் கண்ணில் சதையும் படர்ந்து காணும் இதற்கு உப்பும் வெற்றிலையும் சுக்கும் சிதைத்து உச்சியிலிருந்து கழுத்து வரை பூசி காதினுடைய மேல்வசம் பொய்கைநோக்கி இரண்டு பக்கமும் விரல்கொண்டு ஊன்றி உச்சியில் பதினாறு தடவை தடவ போதம் உண்டாகி இளகும் பின்னல் சீனியும் குக்கிலும் கூகை நீரும் வெள்ளறுத்தையும் கொம்பரக்கும் கடுகு

Digitized By Roja Muthiah Research Library

ரோகணியும் வகைக்கு களஞ்சி மூன்றுவீதம் மலைதாங்கிச் சாறுநாளி வேலிப்பருத்திச்சாறுநாளி உரிதேங்காய்எண்ணெ நாளி மெலுகுபதம் வடித்து தேய்க்கவும் தொண்ணூற்றாறு தினம் ரோகிச்சு தேய்த்தால் சுகம் உண்டாகும் ருத்திரக்காலம் கொண்டால் கண்ணுருண்டு மூக்கிலிருந்து நுரையும் காதில் ரெத்தமும் கண்ணில் காயமும் புலப்படமும் தலையுருட்டி வேதனையும் புத்தி மந்தமும் உண்டாகும் இதற்குப்புறங் கழுத்தில் பேன் குழியில் விரல் வளன்றிப்பிடித்து சுற்றிலும் வட்டம் முழுவதும்தடவ சுகமுண்டாகும் இதற்கு நாழிகை இருபது

65. இதற்கு யெதல் கிழங்கு சதாவேலி நன்னாரி கண்டங்கத்திரி வல்லாரக்குச்சார் உளக்கு வீதம் சேர்த்து சீனியும் சித்தமூலக்கிழங்கும் களஞ்சி சேர்த்து எண்ணெயில் காச்சி மெலுகுபதம் வடித்துத்தேய்க்கவும் சுகம் உண்டாகும் கொம்பேரிக்காலம்கொண்டால் மூக்கு சுளிப்பு ஜன்னியும் அரைலும் முகத்தில் வேர்வையும் தலைக்கு விசையலும் கிருகிருப்பும் காதினுடைய குழியில் துடிப்பும் உண்டாகும் இதற்கு மூடில்லாதாளி இடித்துப்பிளிந்து பலாக்காயை அரைத்துத் தலையில் போட்டு சென்னிவட்டம் தேய்த்து சுக்குத்தூள் காதில் ஊத தீரும்.

66. இளகினலும் இதற்கு நாளிகை பத்தொன்பது இதுகழிந்து மூன்றரை நாளிகைக்குப் பின்தான் இளக்க வேண்டும் வர்மம் இரண்டிற்கும் இப்பிரகாரமேயாகும் மூக்கினுடைய பாலமும் கண்களின் இமையும் இதுபோன்ற பொருத்துகளாகும் அதில் மேல்பொருத்தில்தான், திலர்தக் காலமென்னும் சூழிமுஷ்ஸ்தானம் அதில் முறிந்து ரெத்தம் கொட்டினல் வாய் பிளந்து கண்ணைடைத்து ஜன்னியுண்டாகும் வாயில் நுரைபாயும் சென்னிரப்புகள் துடிக்கும் புறந்தலையில் சூடு பிடித்து சுபம் உண்டாகும் பொறி தாழ்ந்திருக்கும் கழுத்து வினைக்கும் மூன்மீறு நாழிகையில் மரிக்கும் நிச்சயம்.

Digitized By Roja Muthiah Research Library

67. நட்சேத்திரக் காலம் என்றது கண்ணின் கடைப் பீகம் குழியிலாகும் அதுகொண்டால் மூச்சு உண்டாகி உறக்கம்போலிருக்கும் கண்ணுருண்டு செவி இலைச்சலும் தலைக்கு மேபோதக்கேடும்கழுத்தில் நம்பு துடிப்பும்உண்டாகும் இதற்கு நாளிகை ஏழு கடந்து தடவி இளக்கவும் தடவு முறை நாடியை ஏந்திப்பிடித்து புறங்கழுத்தில் மேன் குழியில் விரல் ஊன்றிப்பிடித்து சென்னி இருபுறமும் இப்படியே செய்து கீழ்நாடியை கீழ்நோக்கித் தடவ தீரும் அதிலும் தீராவிட்டால் தொண்டையில் கொக்கிக்கு அரைவிரல் உள்ளே வலதுகை பெருவிரல்கொண்டு ஊன்றவும் ஊன்றிய பின் மேல் அலகில் அரைவில் விரல் ஊன்றி அமர்த்தவும் இளகும் நிச்சயம்.

68. பின்னே இந்த வர்மத்திற்கு கழுத்தில் ஓர் நரம்பு அசைவுண்டாகும் அதற்கு சூரிவேர் தொட்டிசங்கு மலை தாங்கி மூடில்லாத்தாளி காட்டுநாரத்து இலைத்தரி கூவளம் வேரு கண்டங்கத்தரி குமரி வகைக்கு களஞ்சி மூன்று வீதம் சேர்த்து முன்னுளி ஜலம் வற்றவைத்து மூன்றுநாள் ஆறு நேரம் கொடுக்கவும்.

69. சென்னிக்காலம் கொண்டதாலல் ஒருபக்கம் சரிந்து திமிர்த்துவிழும் அலறும் மூக்கில் நீர்வடியும் வாய் பூட்டி உணர்ச்சைகெட்டு கிடக்கும் இதை இளக்குவதற்கு தலையை ஏந்திப்பிடித்து கழுத்தை அசைத்து காதுப்பொய் கையில் விரல் ஊன்றி இளக்கவும் இளகும் உபதேசப்படி பொய்கை அறிந்து பிடிக்க வேண்டும் நெற்றியில் தடவி உச்சி யிலமர்த்தவும் பதைப்பின் அருகு பொய்கையில் ஊன்றிப் பிடிக்கவும் மன்றல் முழங்கை அடங்கலும் விரலினுடய நிதான நிச்சயமும் கண்டு ஊக்கோபாமல் பிடிக்கவும்.

70. செவிக்குத்திக்காலம் என்பது காதின் கீழ்தானே சுழி என்ற பொய்கையிலாகும் அதிலிருந்து ஒன்றரை விர லுக்கு மேலே அலவாடி என்ற வர்மமாகும் அலவினுடைய களுவள எலும்பு வந்த பொய்கையில் சுளி ஒன்றரை விரல் ஆளமும் தொண்டை திறக்க அலவாடியும் அறியலாம்.

Digitized By Roja Muthiah Research Library

71. பின்னே காதினுடைய அருகில் தலையோடெலும்பும் நெற்றியும் வந்து சேரும் மொருத்தாகும் அதில் ஒரு மஞ்சாடி பீதிய ஒரு குழியும் சுளியும் திருக்கும் உண்டு அதனருகில் அரைவிரலில் நாலு அடங்கல்கள் உண்டு அடிகளின் ஊக்கத்தால் கண்வெளியில் தள்ளினால் பொய்கைக்காலம் இரண்டிலும் விரல்கொண்டு மேல்நோக்கி அமர்த்த கண் உள்ளே போகும் கைமுட்டுக்கொண்டு முதுவரியில் ஊன்றவும் கண்மெட்டில் சரியாகும்.

72. இந்த வர்மங்கள் கண்ணு தாழ்ந்து விசையிடை ஏந்தி விழுந்து பொங்கினால் பொய்கையைப் பிடித்து புருவங்களைத், தடவவும் தடவ இருப்புக்கு சரிவந்துசேரும் பிறகு மூக்கு சுளித்து அலகு கோணி இழுக்கின்ற ஜன்னியானாலும் கபம் உண்டாகி முகம் வியர்த்து விரைக்கிற ஜன்னியானாலும் அதேசுளியில் விரலதின் வெள்ளைமேல் தெரிய மலத்தி இடது பாகத்தில் சுற்றினால் இக்குணங்கள் தீரும் பின்னே இதனுடைய லட்சணங்கள் கண்டு உறக்கக்காலத்தில் சுளியிலும் கழுத்தின் கீழ்க்கோணில் இருத்தி உச்சியில் அடிக்க இளகும் நிச்சயம்.

73. கழுத்திற்கு மேலுள்ள வர்மங்களுக்கு அடிபட்டுக் கிடக்கும் மனிதரின் அருகில் சென்று உண்டாகியிருக்கும் குறிகளைப்பார்த்து சாத்தியம் அசாத்தியம் கண்டு இளக்கவும் சுவாசம் அடைத்து கண்ணிலும் வாயிலும் நீர் ஒலித்து நாக்கு வரண்டு கண் மஞ்சள் போல் சிவந்தோ கண் இருண்டோ கறுப்பு வர்ணமாயோ இருந்தால் அசாத்தியம் என்று கண்டு கொள்ளவும்..

74. பின்னும் மற்ற லட்சணங்களுக்கு இடது கைகொண்டு கீழ்நாடி ஏந்திப்பிடித்து அடங்கல் கண்டு சுளியிலும் கோரி ஏந்திப்பிடித்து தன்னுடைய தேகத்தோடே அணைத்து மூக்கினுடைய சுவாசங்கண்டுபிடித்து அலகு கீழ்நாடியும் மேல்மூணிலும் புருவங்களிலும் தடவவும்.

Digitized By Roja Muthiah Research Library

75. பின்னே செய்யவேண்டிய மருந்துகள் சவுக்காரம் திருசு சுக்கு வெள்ளுள்ளி கொட்டம் சிறுசிரகம் முருங்கைப் பிசின் குன்னி பாலச்சார் உளக்கு காட்டு நாயத்தின் இலைச் சார் உரிம்வலிப்பருத்தி தொட்டால்வாடி கொடிவேலி வெற் றிலை இலுமிச்சம்பழம் சார் வகைக்குளக்கு கொட்டம் ஜாதி லிங்கம் கசகசா செண்பகமொட்டு தாரம் கூகைநீர் தகரம்.

76. மீரை சன்னல் வகைக்குக்களஞ்சி ஒன்று வீதம் பொடித்து வேப்பெண்ணை தேங்காய் எண்ணை வகைக்கு உறி கலந்து சார்விட்டுக்காய்ச்சி மெழுகு பருவத்தில் வடித்து தலை யில் மத்தித்து வெந்நீர் தாரையிடவும் மூன்று நாளைக்கொரு தடவை காலையில் தேய்த்துசாயங்காலம் வெந்நீர் முழுகவும்.

77. திருமேனி எண்ணை வைத்து மூக்கிலும் செவியி லும் ஊதவும் மண்டையில் உள்ள வர்மங்கள் தீரும் பின்னே முகவர்மங்களுக்கும் அதிலுள்ள பொருத்துகளுக்கும் இளநீர் விட்டுத்தடவ தீரும்.

78. கார்தல் அரையிலும் பிரையில் நின்றுள்ளேயுள்ள பிரிவுகளும் உள்வர்மங்களும் விதினுடைய இருப்புக்குழாயி னுடைய நாளத்தில் ஓட்டு தொடர்ச்சியாயிருக்கின்றன கழுத் தில் மூன்று கண்டமும் இரண்டு தாரை எலும்பும் அதில் சேர்ந்து நாலு பொடி எலும்பும் இருப்பின் அபியத்தாயும் இருபது சிறு நரம்பும் இரண்டு கதிர்நரம்பும் பிரையில் இரண்டு சுழியும் அலகினுடைய மீகாணில் என்றறியவும்.

79. பின்னும் புஜவர்மமும் பிடரிக்காலமும் அந்தச்சுழி யிலிருந்து பிரிந்த நரம்பிலை என்றுலும் பின்கழுத்தில் நெட்டி யின் அகத்தில் ஒரு பொய்கைபுண்டாகி சுழியில் ஓட்டு நரம் பைப்பற்றியிருப்பதால் பொய்கை சுழியே பிரதானம் என்ற றியவும் அந்த சுழியில் வர்மங்கொண்டால் பொரி அசர்ந்து கழுத்து விரைத்து தேகம் கோணும்கை திரிக்கும் கண்ணு மூடு சன்னிபுண்டாகும் அது அசாத்தியமுமாகும் இளக்க வேணு மென்றால் இடதுகால் கொண்டு முதுகில் பொய்கை நோக்கி

Digitized By Roja Muthiah Research Library

சுழியில் ஊன்றி கையுடைய குழியிலும் பிரபுடைய சுழியிலும் விரலூன்றி அமர்த்திக்கொள்ளக் கண்திறந்து உடன் சுகம் கொடுத்து எழில் மரிக்கும்.

80. பின்னும் உள்ளுக்கு முறிந்தாலும் வர்மம் பன்னி ரெண்டிலும் கொண்டாலும் அறிபும் லட்சணம் குருநாடியிலி ருந்து பிரிந்த பன்னிரெண்டு நாடிகளில் முக்கோணில் இரண் டும் பெட்டியில் ஒன்றும் தொப்புளினுடைய உள்ளரையில் ஒன் றும் இரப்பையில் ஒன்றும் சிறுகுடலில் ஒன்றும் ஐங்கோணில் இரண்டும் அருங்கோணில் நாலுமாய் ஒதுங்கியிருக்கின்றன.

81. இந்த வர்மங்கள் கொண்டவுடன் குரு நாடிக்கு குளிர்ச்சை உண்டாகி பதுங்கி அசைகின்றது அப்போது பன் னிரண்டு நரம்பும் யந்திரத்தினுடைய துடர்போலே சுற்றி அது கொண்டு பின்பாகம் துடித்து குருநாடியுடைய துடிப்பும் வாத பித்த சிலேற்பனங்களும் போகமற்றுப்போகின்றன.

82. என்றால் இருப்புக்காலமும் மூத்திர மண்டிக்கால மும் ஆறுதிரைக்காலம் பெரிய சடைக்காலம் சிறிய சடைக் காலம் யோகக்காலம் மதியடப்பன் பெரிய மட்டரக்கம் அடியரக் காலம் இவைகள் சனியினுடையதாகும் இவைகளெல்லாம் என்றேக்கனுகி பரீட்சை நோக்கினால் அசாத்தியம் செய்யாது.

83. இந்த வர்மங்களுக்கு பரீட்சை தீர்ந்து சாத்தியம் என்று கண்டால் அடங்கல்களில் பிடித்தால் இளகும் வேதனை நீங்கி சுகம் உண்டாகும் நிச்சயம், கைவிரல்களிலும் பின்னும் மஞ்சாடிக் குழிபோன்ற அடங்கல்களிலும் பிடித்து இளக்கயில் கைக்கும் பிடிகொள்ளாவிட்டால் பயறு நெல்லு காணம் இவை களை சந்தர்ப்பம்போல் அந்தக்குழிகளில் வைத்துப் பிடிக்கவும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் மாத்திரை நாலுவிதமாகும் சங் கெலும்பினுடைய முகடு என்னும் இடத்தில் கையசைத்து குத்தினால் குளிர் சுரம் கபம் ஜன்னி உண்டாகும் அதே வசத் தில் மஞ்சாடிக் குறைத்து மற்றடங்கல்களிலும் மேல்நோக்கி அமர்த்த தீரும்.

Digitized By Roja Muthiah Research Library

84 பின்னே சங்குதிரி என்பது கழுத்தின் முன்பாகம் மூன்றுவது எல்கையினுடைய பொய்கையிலாகும் அவ்விடத்தில் கையேற்றிக்குத்தினுல் தேகத்தில் குத்தும் வேதனையும் கைக்கு துடிப்பும் புஜத்தில் வீக்கமும் உண்டாகும் கீழ்நோக்கி அசைத்து சுளிக்கும்.

85. வலது பாகத்தில் கொண்டால் புஜம் வீங்கி சுவாசம் முட்டி கண்ணு திறந்து குத்தும் அனலும் உண்டாகி கைக்கு கோச்சலும் கொளுத்தும் தாரையெலும்பிற்கு குளிர்ச்சையும் வெள்ளீரலில் வேதனையும் உண்டாகும்.

86. பின்னும் சிப்பெலும்பின் பொரி அசர்ந்து கை தளர்ந்து சக்தியிழந்து கை உன்னுசரீரத்தில் மாம்சமிழுத்து சிப்பிக்கு விதனம் உண்டாகுமென்றறியவும் இதற்கு மறுவசமாய் சிப்பியின் ஸ்தானம் நோக்கி மாத்திரை கண்டுபிடிக்கத் தீரும்.

87. கண்ணுதிரி என்பது கைமொளியினுடைய குளியிலாகும் அதில் வர்மங்கொண்டால் கைக்குழி மடக்கும் பொய்கையில் பையும் ஜலமும் உண்டு அதில் இடியோ தள்ளோ கொண்டால் ஜன்னியும் சரீரத்தை முருக்கவும் செய்யும் இதற்கு மாத்திரை அடங்கல்.

88. கைமுட்டினுடைய பொய்கையில் விரல்கொண்டு கீழ்நோக்கி அமர்த்தினுல் மொளியானது தனது இருப்பில் வந்து சேரும் பின்னும் விரலினுடைய வெள்ளைமலத்தி கீழ்நோக்கி நெருக்கிப் பிடிக்கவும் புறமணிக்கெட்டில் கொண்டாலும் சுளிவிட்டு விலகி கைவிரைக்கும் சக்தியிழந்து திமிர் உண்டாகும் சரீரம் உள்வளைந்து சுரம் குளிர் கபம் ஜன்னியும் உண்டாகும்.

89. இதற்கு முதலில் அடங்களில் அமர்த்தி சிலேற்பன நாடியும் கண்டு அமர்த்தினுல் பெருவிரல் அசைந்து குளிரும் கோச்சும் கொளுத்தீம் குத்தும் கைசிப்பியின் வீக்கமும் உளைவும் சேர்ந்து கைக்கு சக்தியுண்டாகும்.

Digitized By Roja Muthiah Research Library

90. பின்னே சிறுவிரல் இடதுபாகம் சுளிந்து நகக்கண் னில் ஊக்கேறி வளைந்துபோலல் ஊனை ரோகம் ரத்த வாட்சை உண்டாகும் இதிலுள்ள வர்மங்களெல்லாம் மேல் நோக்க ஏற்றல் சங்கை திருகி இளகி துடி-த்து சிப்பிதளர்ந்து உள்நாக்குணர்ந்து போஜனம் வெறுத்து.

91. கைக்கு வேதனையும் குத்தும் கோணலும் உள்ளங் கைக்கு ஊனமும் வீக்கமும் கைசரிவான தோற்றமும் உண் டாகும் இருகைகளிலும் இதுபோல் என்றறியவும் இவைகளுக் கெல்லாம் அடங்கலும் மாத்திரையும் வில்லும் விசையிலும் சொல்லப்பட்டிருக்கின்றன.

92. விரலின் இடப்பாகம் உள்ளங்கையில் சுளியில் கண்ணுதிரியாகும் இவைகளெல்லாம் இளக்கும் மார்க்கம் இந்த நாலுகை மாத்திரை பிரமாணம் பார்த்து செய்துகொண் டால் தீராததொன்றுமில்லை பிடரியில் வலதுபாகம் பெருநரம் பில் விசையற்றுப்போலல் வித்து உள்ளிழுக்கும் அசதி கபம் அடைக்கும் அலரி பெருமூச்சுவிடும் மலந்து கிடக்கமாட்டாது ஒரு கண் அடைத்து மறுகண் திறந்திருக்கும் மாத்திரைப் பிர காரம் இளக்கிக்கொள்ளவும் இளகும் பதிமூன்றில் மரிக்கும் இந்த நாலுகை மாத்திரை பிரமாணம் பரீசந்தம் கண்டு பரீட் சிக்கவேண்டும் இப்பிரமாணம் தன்னுடைய பிள்ளைகளுக்கல்லா மல் பிறருக்குக்கொடுத்தால் குடிபவனத்திற்குத் தோஷம் உண்டாகுமென்றறியவும்.

93. இப்பிரகாரம் சூட்சமாய் காலநிதான பிளைகுறி சாகுறி கண்டுகொண்டு இளக்கவேண்டும் மாத்திரை நாலு என்பது ஈடு ஏமம் காலம் வர்மம் என்று சொல்லப்படும் விசை சரியாய் ஏற்றுப்போலல் விசைநரம்பினுடைய குற்றம் தீர்ந் தாலும் ஆறுவருஷத்திற்குள் சயம் உண்டாகும் குருவினிணை சத்தியம்.

94. பின்னே தன்தேகம் அளவிற்கு எண்சாணுள்ள மனிதசரீரம் அடங்கலும் பின்னலும் பொய்கையும் மாத்திரை யும் வர்மங்களும் உள்வர்மங்களும் துண்டு சுளிப்பொருத்து

Digitized By Roja Muthiah Research Library

களும் இசைவும் சிப்பெலும்புகளும் சொல்லப்பட்டிருப்பது போல் நிச்சயம் அறியவேண்டும் வர்மங்களினுடைய லட்சணங்களும் பரிசை அறியக்கூடிய ஸ்தானங்களும் மருந்துகளும் ஓடி முறிவிற்கு செய்யவேண்டிய முறைகளும் அறியவேண்டும் இசைவில் எலும்பு ஒடிந்து எலும்புகளின் கீரலும் சிதரலும் உண்டானால் உள்விரையல் ஆதாரத்தில் குத்து ஜன்னி நடுக்கம் புலப்படம் ஆங்காரம் ரவாசம்பிதம் முகம் கோணி இழுக்குதல் இக்குறிகள் கண்டால் பன்னிரெண்டில் மரிக்கும் என்றாலும் ஆறமடக்கில் நீளத்தில் சினிலவத்து எலும்பினுடைய உள்ளுக்கும் வைத்து சுற்றிக்கட்டவும் சதகுப்பையும் கரியபகழமும் வேப்பன் பிசினும் குக்கிலும் செஞ்சந்தணமும் வகைக்குக் களஞ்சி மூன்றுவீதம் சேர்த்து நல்லெண்ணை நாளியில் காச்சி முறிவில் தாரயிடவும்.

95. பின்னே உச்சிக்கு அக்கரா சூரணம் சேர்த்து ஒற்றளம் போடவும் முட்டினுடைய கீழ் எலும்பில் இரண்டு வில்லிற்கும் மேல் எலும்பு ஒடிந்து விழுந்துபோனால் கண் னையர்ந்து அறிவுகெட்டு பொறியசைந்து சரீரத்தில் உருமலும் கபஜன்னியும் வலியுமுண்டாகி தொண்ணூற்றொன்பதில் மரிக்கும் இதைத்தடவி எலும்பு சரிபட வைத்து கிளிகொண்டு பிடித்து துணியிட்டுக்கட்டி பச்சை நல்லெண்ணையில் பருக்காயும் ஜாதிக்காயும் சதச்சிட்டு வேலிப்பருத்தியும் அறிந்து போட்டு ஊறவிட்டு தாரையிடவும் பின்னே சீனிபலம் ஒன்று கடுக்காய் சிவதை அழுக்குறு ஆசாளி திப்பிலி சிறுசீரகம் பூவத்துமீரை வெண்காரம் அரிசிதிப்பிலி கொம்பரக்கு மாஞ்சி இவை வகைக்குக் களஞ்சி ஒன்று வெள்ளைநொச்சி குப்பை மேனி ந்தவளை இசங்குதாடை தூதுவளை சிறியானங்கை விராலி ஓரிலை பொன்னுவரை இந்தவகை சாறுளக்கு வீதம் சதைத்து வடிகொண்டு சாறும் சேர்த்து கோழிச்சாறும் சேர்த்து தேங்காய்நெய் உரிநல்லெண்ணை உரிமருந்தும் சாறும் எண்ணையில்கலந்துமெழுகுபதம் வடித்து கொடுக்கவும் கரண்டி வீதம் நாளிருபோதாக ஒன்பதுநாள் கொடுத்து லட்சணம் நோக்கவும் முட்டுகள் எல்லாம் இவ்விதமென்றறியவும்.

Digitized By Roja Muthiah Research Library

96. பின்னும் மணிக்கட்டிற்குமேல் சமீபம் பொய்கையில் வர்மம் கொண்டால் கை திரிமிர்ந்து வீக்கமுண்டாகி கைக்கு வசைவில்லாமல் உளைவும் வேதனையும் குத்தும் ஜன்னி சரீரத்தை முறுக்குவதும் மலஜலம் விழுந்து உள் வேதனையும் மயக்கும் கோச்சலும் இப்பிரகாரம் எல்லாக்குறியும் உண்டாகும்.

97. பெருவிரல்நகவெள்ளைக்குமேல் ஒரு நெல்லைவைத்து அமர்த்திப்பிடிக்கவும் பிடித்தவுடல் கைக்குவசைவுண்டாகும் மறுபுறமும் சுழி இசைவில் அமர்த்தவும் உடன் வீக்கம் வற்றி கை உளைச்சலும் சலாசயத்தின் பரிவகங்களும் சரீரம் முழுகுதலும் ஜன்னிகளும் தீர்ந்து சுகம் உண்டாகும் இதற்கு குருந்தொட்டி அழுதவல்லி தாரூவேர் குடங்கல் அவரி சரியாநங்கை நஞ்சறுத்தான் விஷ்ணுகிரந்தி வகைக்குச்சார் உளக்கு ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி ஏலம் சந்தனம் மாஞ்சி மதவதாரம் அழுக்குருவும் கொம்பரக்கு ஆசாளி ஆமணக்கெண்ணை வகைக்குளக்கு கடைமருந்து வகை கலாஞ்சி மூன்றுயாவும் சேர்த்து மெனுகு பருவம் வடித்து இருவேளை ஆறுநாள் உள்ளுக்கும் வெளியிலும் தேய்க்கவும் பின்னை முறிவெண்ணை சாறணை வேர் எழுத்தாணிப் பச்சிலை ஆடுதின்டாப்பாளை கையாந்தகரை பொடுதலை ஓரிலை ஈரிலை மலைதாங்கி மூடில்லாத்தாளி தும்பை வேலிப்பருத்தி வகைக்குச்சாறுளக்கு திப்பிலி கரியபகழம் கண்டங்கத்தரி இலவங்கம் சன்னம் கிராம்பு கவயம் அதிமதுரம் யானையரிசி அழுக்குரா சிறுநாகப்பூ வெள்ளரத்தை அக்கிராகாரம் பளுக்காய் இவை வகைக்குக்களஞ்சி ஒன்று விதம் நல்லெண்ணை நாளியில் காச்சி முறிவிலிடவும் பூணை சுகப்பட்டு குழிவிழுகும்.

98. பின்னும் கவளிக்காலத்தில் நெல்லிடை விலகி கவளியில் மேல்நோக்கி ஊனிப்பிடித்தால் கைக்கு கோச்சும் குத்தும் வேதனையும் வீக்கமும் உண்டாகி துள்ளி விரைக்கும் இதற்கு பச்சை நரம்பை தடவிப்பிடித்து கிழ்நோக்கி நீர் கொண்ட நரம்பிலமர்த்தவும் கையை அளந்து இடம் கண்டு

Digitized By Roja Muthiah Research Library

அமர்த்தவும் அப்படி அமர்த்துகையில் அதில் ஒரு சிறு நரம்பும் அசையும் அதைப்பிடித்து முறிவெண்ணை தாரையிடவும் மறுகையிலும் இதுபோலாகும்.

99. உள்ளங்கையில் தெச்சணைக்காலம் கொண்டால் அதினுடைய அடங்கல் கைமடக்குக் குழியிலாகும் அதில் விரல் ஊன்றி மேல்நோக்கி அமர்த்துவாய் விறயல் மாறும் சுற்றிக்கிறக்கினால் உட்சுரம் மாறும் கீழ்நோக்கி அமர்த்தினால் சன்னி மாறும் கீழ் சுவாசம் உண்டென்றால் கைவெள்ளை மறுபுறம் அமர்த்தவும்.

100. இதற்கு குக்கில் ஊதுப்பை யாளியரிசி கொம்பரக்கு நருக்குமூலம் வெள்ளரத்தை சிறுநாகப்பூ கச்சோலம் மாங்கம் கற்கடகசிங்கி இத்தனையும் நல்லெண்ணையில் மெழுகு பதம் வடித்து தாரையிடவும் கோச்சலும் கொளுத்தும் குத்தும் வேதனையும் வீக்கமும் சன்னியும் சுவாசம் பெருக்கமும் குளிர்காச்சலும் சுகமாகும்.

101. இன்னும் பெருவிரல் நகக்கண்ணிலிருந்து ஒரு விரல் உயர அசவுதிரியில் உளுக்கு என்னும் சுளுக்கு வர்மம் கொண்டால் கண்ணு கரிக்கும் கண்ணில் சதையுண்டாகும் பின்னே இளகிவெட்டும் அலகு கோச்சும் இதற்கு பேன் குழிக்கு. இரண்டுவிரல் வலதுபாகம் பெருநரம்பின் இடையில் காணும் சிறுநரம்பே அடங்கலாகும். அதைப்பிடித்து மேல் நோக்கி அமர்த்துகா கண்ணில் சதைமாறும் கீழ்நோக்கி அமர்த்துகா கலிப்புமாறும் கைவிரல் வெள்ளையை மலத்திக்கொண்டு அமர்த்தினால் பனி குளிர் கபம் மாறும்.

102. இதற்குக் கொடுவேலிக்கிழங்கும் காட்டுள்ளியும் சாரணைக்கிழங்கும் வேலிப்பருத்தி சாறிலரைத்து முலைபாலில் தாரையிடவும் வெள்ளரத்தையும் கரியபகழமும் பாலிலரைத்து தாரையிடவும் இதற்கு எண்ணை கடுகு கொட்டம் கொத்தமல்லி திப்பிலி மூலம் கொப்பரக்கு மீரை கார்கோலரிசி சிரகம் மாஞ்சி வகைக்குக் களஞ்சி ஒன்று நல்லெண்ணையில் கடுகுபதம் காச்சி சேவிக்கவும் சுகம் அந்த வர்மத்திலிருந்து

Digitized By Roja Muthiah Research Library

ஒன்றரைவிரல் மேலே அசவுதிரிக்காலம் அதில் கொண்டாழ் உடன் ஜன்னியும் சரீரத்தில் நடுக்கமும் கைக்குக்கோச்சலும் குத்தும் வெள்ளீரலில் வேதனையும் உண்டாகும் இதற்கு அடங்கல் மாரில் நாலுவிரல் உயர விசை நரம்பில் பிடித்துக் கீழ்நோக்கி அசைக்க ஜன்னி மாறும் மேல்நோக்கி அசைக்க நடுக்கலும் விரயலும் தீரும் விரல் வெள்ளை சுற்றிக்கிரக்க கைக் கோச்சலும் தரிப்பும் மாறும் இதற்கு நெய் குருந்தொட்டி வேர் கருஞ்சுண்டை வேர் வெள்ளைக்குன்றி வேர் கூவளத் தின் வேர் வேலிப்பருத்தி வேர் உளிஞை வேர் மணப்புல்லு வேர் அருகன் வேர் வகைக்குக்களஞ்சி ஒன்று சதாவேரிக் கிழங்கும் கொடுப்பை கைதோனி இவை வகைக்குச்சாருளக்கு கொம்மாக்கு கொத்தமல்லி அமுக்குரு திப்பிலி தேவதாரம் முருங்கைப்பிசின் இவை வகைக்குக்களஞ்சி ஒன்று வேப் பெண்ணை நல்லெண்ணை பசுவின் நெய் இவை வகைக்கு உரியில் மெளுகுபதம் வடித்துக் குடிக்க சுகமுண்டாகும். பின்னே காட்டு ஜீரகத்தை காடியிலரைத்து வெதுப்பி வேலுக்குப்பூசவும் மூடில்லா தாளியும் உளிஞை சாறும் பசுவின் பாலில் சாலித்து தாரையிடவும் இவைகளில் தீரா விட்டால் மூலத்தில் மோனெலுப்பில் மேல் நோக்கி விரல் அசைத்துக் கொடுக்க சுகமுண்டாகும்.

103. இன்னும் பெருவிரலசைக்கிற குழியில் மொழி வர்மம் அந்தப் பொய்கையில் ஊன்றிப்பிடிக்கவோ குத்தோ தல்லவோ கொண்டால் பித்த நாடிக்கு சூடுண்டாகி கை விரலுக்கு வேதனையும் கோச்சலும் குத்தும் அனலும் உண்டாகும் இதற்கு பித்தநாடியிலிருந்து மன்னிரெண்டு விரலுக்கு உயரே ஒரு சிறு நரம்பு போகும் அந்த நரம்பைப் பிடித்து கீழ் இழுத்து அமர்த்தவும் கையின் அசையாடங் கள் உடனே நிற்கும் மேல் நோக்கி அமர்த்தவும் அலகு கோச்சலும் சீதம் ஜன்னியும் தீரும்.

104. பின்னும் இரெண்டாம்விரல் நகக்கண்ணிலிருந்து ஒரு விரல் உயரே கோச்சல் வர்மம் அதைப்பிடித்து கையை

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளை மாற்றி திருப்பிணல் விரல் துள்ளி விடயலும் கோச்சும் குத்தும் விஷமேறுவதும் பதிணைந்து நாளிகைக்கு மேல் ஜன்னியும் உண்டாகும் இதற்கு கைப்புடத்தில் சுளி நாம்பில் பிடித்து கீழ்நோகாகி அமர்த்திணல் விரல் துள்ளி விரைப்பது நிற்கும் மேல் அசைத்துப் பிடித்தால் கோச்ச லும் தரிப்பும் தீரும் அல்லது மாரின் வலது வசம் பிடித்து அமர்த்திணலும் தீரும் பின்னை பதிணைந்திற்குமேடல் உண்டா கின்ற ஜன்னிக்கு காதிற்கு ஓரு விரலுக்கு உயமே மோணெலும்பில் அமர்த்தவும் சுகமுண்டாகும் இதற்குக்கை யாந்தகரையும் நீர் நெறுப்புச்சாரும் புங்கினுடைய பாடதா ளியும் சதைத்திட்டு பசுவின்பாலில் தாளையிடு சுகம் மாதுளம் பூவும் தேங்காய்பூவும் பாலிலரைத்து உச்சியில் தப்பழும் போடத்தீரும்.

105. பின்னும் மூன்றுவது விரலில் மோணு பொய் கையில் சுளுக்கோ குதேதா தல்லலோ கொண்டால் கண்ணில் காசம் கபாலம் இடித்து மந்தம் செவி இரைச்சல் உள்ளங்கை விக்கம் இவைகள் உண்டாகும் இதற்கு நாடி கூடுகின்ற இடத்தில் அடங்கல் அதில் பெருவிரல் கொண்டு கீழ் நோக்கி அமர்த்திணல் செவியிரைச்சல் உள்ளங்கைவிக்கம் சுகமாகும் அதில் விரலை சுற்றிக்கிடக்கிணல் சகலமும் சுகம் பின்னை கொடுவேலி இலையும் நஞ்சருத்தான் வேருமம் காட்டெருமைப் பாலில் கிண்டி லேவகவைத்து அனத்தவும் சுகம்.

106. பின்னை பச்சை நரம்பினுடைய உள்ளரையில் வர்மங்கொண்டால் உடனே ஜன்னி கபம் விக்கல் வலி இளைப்பு மய்க்கம் இவைகள் உண்டாகும் இதற்குக் கைக் கூட்டில் மோனு சுளியில் வம்பு சுற்றிவைத்து கையணைத்து மேல் நோக்கி அமர்த்துகா ஜன்னி கபம் நிற்கும் கீழ்நோக்கிப் பிடிக்க வலி இளைப்பு இரைப்பு போதக்கேடு சுகமாகும் அல்லது பேன் குழியில் கீழ் நோக்கி அமர்த்திணலும் தீரும்.

107. மணிக்கட்டில் நாலுவிரல் உயமே முறிந்தால் ஒன்பதில் பன்னிரெண்டில் பரிக்கும் உள்ளங்கைக் குழியில்

Digitized By Roja Muthiah Research Library

முறிந்தால் பனி குளிர் ஜன்னி வெட்டுண்டாகி ஆறுக்குள் மரிக்கும் நிச்சயம்.

108. பின்னே கைமுட்டினுடைய சுளியிலும்முட்டிலும் ஓடிந்தால் கண்ணுவெட்டும் போதக்கேடும் புலம்பலும் உண்டாகி இருபத்தாறில் மரிக்கும் இதுகளெல்லாம் சிகிச்சை செய்தும் அசாத்தியமாகும் மற்றும் குணங்கள் அனுபவத்தில் அறியவேண்டியவைகளாம்.

109. இன்னுங்காலுவிரலில் ஒன்றும் விரலின் மொளியில் உபா சுளியில் ஒரு சிறு நரம்பு உண்டு அதுவும் அடங்கலாகும் அதில் நெல்லுவைத்துப் பிடிப்பதற்கும் இதில் அமர்த்த ஜன்னி நிற்கும் மேல் நோக்கி அமர்த்த கடம் வலி இருமல் தீரும் மேல் நோக்கி சுளித்து அமர்த்தினால் புயத்திலும் முட்டிலும் மணிக்கட்டிலும் குத்தும் வீக்கமும் உண்டாகி பின் ஊனமுண்டாகும் மார்பில் மூன்று விரல் உயரே அடங்கல் ஒன்று இதில் மாத்திரை நோக்கிக் கொள்ளவேண்டும்.

110. பின்னே அதேவிதம்போல் உள்ள முறிவுகளுக்கு பொறி எலும்பு முறிவாகி வருமென்றறியவும் அதன் மேல் பச்சைபிட்டு வகைபோலே தடவி கைப்பாகம் அறிந்து அணைத்து நிருத்தி பொய்கை பிடித்து கெட்டி மருந்து செய்யவும் பிரமாணத்தில் சொல்லியதுபோல் செய்யவேண்டும் அறிந்துசெய்யவேண்டும் இப்பொடித்தடங்கல்கள் தவிர விரல்களில் பத்துவர்மங்களும் இணைவுகளில் சொர்ணக்காலமும்போக ஐந்து வர்மங்களும் உண்டு. இதில் அடங்கலும் உண்டு. பத்து வர்மங்களிலும் ஆதிரையில் முறிந்தால் ஏழு நாழிகை களிந்து கையணைத்து சிப்பியில் அமர்த்தி விரல் ஊன்றி மேல் நோக்கித் தடவவும் சுகம் உண்டாகும்.

111. பின்னே வெந்தயம் விளாத்தூப் பிசின் ஓமம் வெள்ளைக் குங்கிலியம் கரியபகழம் நல் எண்ணையில் சாலித்து சீலையிட்டு சுற்றி அசைவிட்டுக் கட்டவும் குக்கில் சதகுப்பை கொம்பரக்கு நாகணம் ஏலம் கருஞ்சீரகம் கார்கோல் கச்சோ

Digitized By Roja Muthiah Research Library

லம் வால்மிளகு வகைக்குக் களஞ்சி இரண்டு வீதம் எண்ணெ யில் கடுகாயரித்து தாளையிடவும் என்றாலும் பன்னிரெண் டில் மரிக்கும்.

112. பின்னே காலில் தூங்கு சதையில் முறிந்தால் மூலத்தில் சோச்சலும் கைகால் வெட்டி வியர்வை யுண்டாகி முப்பத்தாரில் மரிக்கும்.

113 பின்னே வாரெலும்பு பொடிந்து உள்ளே போனால் மனுஷனுக்கு போதக்கேடும் உள் வாட்சையும் வெள்ளீரலில் குத்தும் உள் காச்சலும் உண்டாகும் கழுத்தின் கீழே ஐந்தாவது எலும்புவரை முறிந்தால் கைச் சிப்பியில் மூணாவது பொய்கையில் விரல்கொண்டு அசைத்து இருத்த வேண்டும் அப்போது குணங்கள் மாறும் உள்ளே பொய்கை எலும்பில் தொப்புளிலிருந்து வலது வசம் அமர்த்தியும் குருக்குத்தாரனந் தடவி நெஞ்சில் கையணைக்கவும் செய்தால் எலும்பு ஒப்பித்துவரும் இப்பிரகாரம் ஒவ்வொரு எலும் புக்கும் செய்து கொள்ளவும் என்றால் எலும்பு இசைவில் வருமென்றறியவும் பின்னே மாறுப்பிட்டுக் கட்டி சரீரம் அசையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

114. இதற்கு எண்ணெ குடங்கலும் நாகப்பட்டையும் புங்கன் இலைச்சாரும் சதாவேலிக்கிழங்கும் கொம்பரக்கும் குக்கிலுப்சதகுப்பையும் நல் எண்ணெயில் சேர்த்து மெழுகா யரித்துசரீரத்திலிட தீரும். பின்னே மலைதாங்கி வேரும் அரு கன்புல்லுவேரும் வெள்ளைக்குன்னிவேரும் வேலிப்பருத்தி வேரும்வெள்ளைக்காக்கணத்தின் வேரும் சுண்டை வேரும் வேளைவேரும், சங்கன்வேரும் வகைக்குச்சளஞ்சி இரண்டுவீதம் அரி சிவகை ஆறு குக்கில் கொம்பரக்கு திப்பிலி கொட்டம் சிறுநாகப்பூ கண்டங்கத்திரி இஞ்சி வகைக்குக் களஞ்சி மூன்று சதைத்து கால்படி ஜலமாக க்ஷாயம் வற்றவைத்து ஆறுநாள் பன்னிரெண்டு நேரம் சேவிக்கவும் பின்னே கண் டங்கத்திரி வேப்பம், பிசின் கருங்குடங்கல் வேலிப்பருத்தி பழமாங்காய் மலைதாங்கி இலை ஒன்றாய் சதைத்து நல் எண் ணெயிலாக்கி இடவும்.

Digitized By Roja Muthiah Research Library

115. பின்னே முகத்தின் முறிவிற்கு மூடில்லா தாளியும் சாரணைக்கிழங்கும் பச்சை நெல்லரிசியும் காடி வெள்ளத்தில் அரைத்து தலையில் தப்பனம் போடவும் ரெத்தச்சந்தனம் நல்லெண்ணையில் மத்தித்து அனத்தவும்.

16. பேன்குளி என்ற புறங்கழுத்தில் முறிந்தால் வெள்ளைக்குங்கிலியம் கடுகு கொத்தமல்லி முருங்கைப்பிசின் இத்தனையும் நல்லெண்ணையில் வேகவைத்து அனத்தவும் மூடில்லாத்தாளியும் அத்திக்கொழுந்தும் அரைத்து பாலில் வெதுப்பித்து இடவும் இப்படி சகல முறிவுகளுக்கும் குணங்கள் கண்டு சிகிச்சிக்கவும் வெள்ளைக்கல்லை தீயிலிட்டு பளுக்கவைத்து தேங்காய்ப் பூவும் கொச்சிக்கொழுந்தும் சதைத்து பிட்டுத்துணியில் பரப்பி கல்லை மேலேவைத்துப் பொதிந்து கிளிக்கட்டி அனத்தவும். பின்னே வேப்பம் பிசினும் சுக்கும் ஆசாளியும் கொட்டமும் கொத்தமல்லியும் விரலி இலையும் எருக்கஇலையும் முருங்கப்பூவும் பாலில் அரைத்து நல்லெண்ணையில் கிழியை வேகவைத்து அனத்தவும்.

117. பின்னே காலினுடைய கண்ணு விலகிப்போனால் குதிங்காலினுடைய பொய்கை சுளியிலும் பக்கத்திலும் பிடித்து இரண்டாம் விரலில் கொண்டு நிறுத்தி அசைத்து ஊன்றிப்பிடிக்கவும். விலகிய கண் இசைவில் விளும் பின்னே வெற்றிலைச்சாறு துணியில் நனைத்துச் சுற்றவும்.

118. காலினுடைய மொளியில் பொருத்து நளுகிப்போனால் பெருவிரல் தடவி உள்ளங்காலில் கீழ்நோக்கி அமர்த்தவும். மொழி இசைவில் விளும் பின்னே மூடில்லாத்தாளியும் சுக்கும் கொம்பரக்கும் கொட்டமும் முலைப்பாலிலரைத்து துணியில் சுற்றவும் ஒவ்வொரு விரல் மொழிகளுக்கும் இப்பிரகாரம் செய்தால் வேதனை தீரும்.

119. பேன்குழியில் கை ஏற்றி அடித்தால் மயங்கி போதம் கெட்டு உணர்ச்சைமாறி ஜன்னியுண்டாகி சுண்டச் சுளிக்கும் வலிப்பும் கபமும் உண்டாகும் பெருவிரல்

Digitized By Roja Muthiah Research Library

கண்டங்களில் பிடித்து கீழ்நோக்கி அமர்த்தவும் கண் ணைடைப்பு மாறும் வலியும் தீரும். சுளித்து சுற்றிக்கிரக்க கபம் தீரும்.

120. பின்னும் 'கண்ணினுடைய மேல் குளியில் நசுங் கலோ குத்தோ கொண்டால் கண்ணைடைத்து போதம் கெட்டு வாயில் நுரை ஒலித்து மூக்கு சுளிக்கும் இதற்குப் பேன் குழிக்கும் மூன்று விரல் வலது வசப்பொருத்தடங்களில் கைவிரல் கொண்டு மேல்நோக்கி அமர்த்தவும் விக்கல் வலி கபம் தீரும் இடது பக்கம் சுளித்து அமர்த்தவும் விரயல் உள் சுவாசம் தீரும் பின்னே நெற்றியில் முறிந்தால் மரிக்கும் மற்றும் விபரங்கள் பிரமாணம் படித்து அறியவேண்டும்

நாலுகை மாத்திரை பிரமாணம் முற்றிற்று.

குருவே துணை.

Digitized By Roja Muthiah Research Library

வர்மவில்லும் விசையும்.

1. மேல்கண்டகாலம் வெற்றிலைக்காலம் சுண்ணும் புக்காலம் மஞ்சள்காலம் குற்றிக்காலம் கொம்புகுத்திக்காலம் கொண்டைக்காலம் சீறுங்கொல்லி கோணச்சன்னி வர்மம் உச்சிக்காலம் நாக்கடப்பன்காலம் பிடரிக்காலம் பைத்திய வர்மம் திலர்தக்காலம் நட்சத்திரக்காலம் செவிக்குத்திக்காலம் இவைகள் தலையில் உள்ளவைகளாம்.

2. இதற்கு வியாக்கியானம் கண்முடிக்காலம் என்பது அறுபத்திநாலு தண்டுவந்து சேர்ந்த இடையில் இரண்டாவது பொய்கை என்ற புறந்தலையாம் கனமாய் கைகொண்டு தடவினாலும் காது மந்தமாகும் தலை மூளைக்கும் மந்தம் ஏற்படும் மூக்கு வியர்க்கும் இதற்கு காட்டு ஜீரகம் இருவேலி பசுவின் பாலிலரைத்து குளத்து உச்சியில் தப்பவும் சுவாசம் உற்பவம் நெற்றிக்கு ஐந்து விரலுக்குமேல் உச்சிக்கு வலது வசமாகும்.

3. அந்த இடத்தில் கொண்டால் மூக்கு சளுக்கும் கண் புகைந்திருக்கும் சென்னி நரம்பு அசர்ந்து விரைக்கும் முகம் வியர்த்து சோதக்கேடுண்டாகும் இதற்கு கோதுமை அதிமதுரம் சிறுநெருஞ்சில் பருத்திபிஞ்சு ஆவரம்பூ யாளியா நாங்கணம் வகைக்குக்களஞ்சி அரைத்துத்தலையில் பத்து போடவும்.

4. சுண்ணும்புக்காலம் என்றது உச்சியில் இந்திரியம் இருக்கப்பட்ட சிமிளினுடைய ஓடத்தில் பின்பாகத்திலாகும் அதில் கொண்டால் கண்பூழி செவி நரம்பு துடிக்கும் நாக்குக் கொன்னிப்போகும் இதற்கு சதகுப்பை கசகசா கூவளத்துப் பிஞ்சு மோரிலரைத்து வெதுப்பி உச்சியில் தப்பவும் இதிலெல்லாம் உச்சியே பிரதானம் அந்த சிமிளில் விஷம் ஏறியாலல்லாதே சரீரத்தில் சீணம் உண்டாகாது.

5. பின்னே மஞ்சள்காலம் என்றது உச்சிக்கு ஒரு விரலுக்குக்கீழே தாரை கண்ணினுடைய பொய்கையிலாகும்

Digitized By Roja Muthiah Research Library

அதில் வர்மங்கொண்டால் கண் சுழன்று சரீரத்தில் உளைச் சலும் தலை விரைக்கும் இதற்கு கொத்தமல்லி மூடில்லாத் தாளி செந்தட்டி உளிஞ வெந்தயம் பளுக்காய் நெல்லிக்காய் சீனி வகைக்கு களஞ்சி வீதம் குருந்தொட்டி சாற்றிலரைத்து தலையில் மத்திக்கவும் சுக்கு சமுத்திராப்பழம் நெல்லிக்காய் பொடித்து மணைப்பிக்கவும் சுகம்.

6. குற்றிக்காலம் கொண்டால் கண் சிவக்கும் பல்லு கறுக்கும் நாக்கு வாண்டு போகும் பேச்சோடாது இதற்கு கண்டங்கத்திரி ஏலம் சந்தணம் மயில்பீலி சுக்கு கருஞ்சீரகம் வகைக்கு களஞ்சி ஒன்று பொடித்து வடிகட்டி அத்திப்பிசின் களஞ்சி வீதம் பூங்கதலிச்சாற்றிலரைத்து தலையில் தப்பவும் கருத்தச்சுண்டை வேர் நஞ்சறுத்தான் வேர் ஆடாதோடை வேர் அமுக்குரு சந்தணம் கொட்டம் கடுகு திப்பிலி கண்டங் கத்திரி ஏலம் வகைக்குக் களஞ்சி ஒன்று இரண்டுபடி ஜலத்தில்.

7. கசாயம் வற்றவைத்து அறித்து வடித்து சீனி கலந்து ஆறுநேரம் சேவிக்கவும் சுகம் வலதுகாதில் மூன்று விரலுக்குமேல் தலையோட்டின் எலும்பில் பற்றியவர்மம் கொண்டால் தலையை உருட்டிக்கொண்டே பேசும் காதின் வசங்கள். இரண்டும் குளிந்திருக்கும் மஞ்சள் நிறமாய் மூக்கில் சுவாசம் வரும்.

8. இதற்கு பசுவின்நெய் படியரையும் அபின் பலமரை கச்சோலம் கருங்குங்கிலியம் சாம்பிராணி இவை வகைக்கு களஞ்சி மூன்று வீதம் எண்ணையில் கலந்து கடுகு பருவம் அரித்து தைலம் தேய்த்துக் குளிக்கவும் ஜீரகம் கிரிசாத்து நறுதீண்டிக்கிழங்கு அரைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு சேவிக் கவும் மூன்று நேரம் சுகம் கொண்டக்காலமென்பது உச்சிப் பதைப்பிலிருந்து, அரைவிரலுக்குக்கீழே இடதுவசமாகும் அதில் கொண்டால், சரீரம் குளிர்ந்துபோகும் வேதனை யுண்டாகும் கண்ணில் நீரொழுக்கும் கபமுண்டாகும் சுவாசம் உள்ளிழுக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

9. இதற்குக் கஞ்சா தாளிசபத்திரி சென்பகமொட்டு விளையில்லாக்கடுக்காய் பூலாவிருட்சம் வேப்பன் பழம் கள்ளுஞ்சி மூன்று வீதம் நல்லெண்ணை பசுவின்நெய் தேங்காய் எண்ணை அளைப்படி ஒண்ணைத்துக்காய்ச்சி சேவிக்கவும் சுகம் கழுத்தினுடைய இசைவிலிருந்து கூருக்கினுடைய காசை நாம்பு உருளை சிப்பியிலும் முக்கோணிலும் கைக்கு குற்றம் சம்பவித்தால் கை அசைந்து துடிக்கும் அசாத்தியம்.

10. கையிலேனா காலிலேனா இரண்டு வசங்களிலும் உடம் பிலாணிலும் இருவசமும் சரிந்து குளைந்து நடந்தால் சிகிச்சை வேண்டாம் அந்த வில்லினுடைய பிசகு பின்னே நேர்நெஞ் சிலும் அதில் அரைவிரல் மாறி இருவசமும் பதினலு பொய்ங்கையிலுமாகும் காசை எலும்பிற்குக்கீழ் தொண்டை செவி நாம்பு பொய்ங்கையில் குத்தினால் நாக்கு உள்ளிழுத்து கண்ணடைத்து ஜன்னியுண்டாகும் தொண்டைக்குளி திரும்பி லெட்டும் சரீரம் குளிர்ந்துபோகும்

11. இரண்டாவது பொய்ங்கையினல் மூக்கு சுளித்து அலரும் இருமி வலிக்கும் சுவாசமடைக்கும் சுற்றிக்கொள் ளும் அசாத்தியமாகும் மூன்றுவது பொய்ங்க என்றால் வயற்றில் வீதனை தலைசுற்று கபாலயிடி ஜன்னி பெருஞ் சுவாசம் விக்கல் நெஞ்சில் குத்து என்றால் பொய்ங்கை பதினரிலும் வர்மமானது துடர்ச்சியாகும் தொண்டைக் குளிக்கும் ஒருவிரல் மாறி சுருதி என்ற நரம்பில் விஷம் பொங்கி கோணல் சென்ற இடமாகும்.

12. சுருதி நரம்பு காசை எலும்பினுடைய அடுத்த சிறு நரம்பாகும் அந்த நரம்பில் குத்தினால் கண்ணடைக்கும் நாக்கு நீட்டி வாயில் நுரையுண்டாகும் ஜன்னி கபம் அலகு கோணியிருக்கும் மாறி இடதுகீழ் பொய்ங்கையில் குத்தினல் மயக்கம் தலைவலி கொளுத்து சோகைநீர் ஊறும் அசாத்தியம்.

13. கூட்டில் உருவிச்சென்ற வர்மம் எட்டு பொய்ங்க பதினறு நாம்பிலும் கால் பரிட்சித்து சிகிச்சை செய்யவும் குருக்கினுடைய மத்திப எலும்பில் குத்தினல் ஊன்பொய்ங்க

Digitized By Roja Muthiah Research Library

யிலும் தரியெலும்பினுடைய வில்லிலும் கொள்ளக்கூடாது சுளியடக்கம் விஷஸ்தானம் என்பது உருளை சிப்பியினுடைய முகட்டிலும் கொள்ளக்கூடாது மூலத்தில் சுளிமுன்ன இருப்பிடம்குய்பத்திலாம் பொக்குள் காலிரண்டிலுமாம் பிங்கல என்பது வலது மார்பு வலது கை ஆண்மாவுடைய நெற்றி இடகலையாவது.

14. இந்திரியக்குளல் இடதுமார்பு இடதுகை உச்சித் துவாரம் பொக்குளினுடைய இடையொட்டியது குருநாடி. மஞ்சர்டித் துவாரம் உச்சியென்றல் மூலத்தினுடைய இரண்டு வசங்களிலும் இரண்டு விரல்நரம்புப்பக்கம் குளியில் வில்லும் வ்சையும் வந்து பற்றுகின்றன எலும்பிலும் நரம் பிலும் வந்து சேருகின்றன வ்சையென்பது கீழ்நாடி கொக்கி மார்பு காரீரல் புஜம் குருக்கு கைக்குளி உருளைச்சிப்பி.

15. மூலம் அல்லது யோனி கைமுட்டினுடைய மேல் மடக்கின் உட்பாகம் மணிக்கட்டு உள்துடை கண்ணு காலி னுடைய குளி இவைகளிலாகும் சங்குதிரியும் கூணல் நரம் பும் பின்னல்போலே கூடி எட்டு இதளாய் பிரிகிறது எட்டுப் பிரிவும் எட்டு வர்மங்களாகும் வயற்றில் ஆறும் பெட்டிக் காலமும் ஞானல் குடலும் ஆமாசயமும் பக்குவாசயமும் குடல் என்றும் சுருதி என்றும் அதில் கூடி வர்மம் மூன்று.

16. அவரவருடைய கைப்பிலனிலும் ஸ்திரீ போகத் தாலும் குடல் சிறுகரப்பு பின்னங்களாகி வர்மங்கொள்ளு கிறது மரங்களிலிருந்தோ சுவர்களிலிருந்தோ மூலத்தி னுடைய இருப்பிடம் நாலுவசங்களிலும் உயர அடிபோ தள்ளாக கொண்டால் லிங்கம் சாடும் நாக்கு வெளியில்வரும் போதக்கேடும் ஜன்னியும் உண்டாகும் அடங்கல் நோக்கிப் பிடிக்கவும் தலையில் முறிந்தால் தற்பும் வேதனையும் உண்டாகும்.

17. இதற்கு ஆசாளி சீரகம் உளிதரு கொடுப்பை இலையரைத்து குருந்தட்டிச்சாற்றில் தாரைபிடவும் கைக் குளியில் திரிநாடி துடிப்பின் உள்ளே ஐந்து நரம்புகள் வந்து

Digitized By Roja Muthiah Research Library

ஒரு நரம்பில் கூடுகின்றன அந்த ல்தலத்திலுள்ள வரியும் பொய்கையும் பரீட்சித்துப் பிடித்தால் கிரியாலமென்ற லொருத்தும் துடலி நரம்பினுடைய எதிர்சையும் காணலாம்.

18. டனிதற்கு திருப்தி வருத்தி தேகதிடமறிந்து சிகிச்சிக்கவும் வில்லும் விசையும் எழுந்தில் ஆறுவர்ட மூண்டு சீறுங்கொல்லி என்பது கொண்டைக்காலத்திலும் அரைவிரல் வரது வசப் அதில் கொண்டால் உதடு சோனும் வாயில் நுரை தள்ளும் தலைசுற்றி குளிர் இருமல் உண்டாகும்.

19. உள்ளிப்பருப்பு ஜாதிக்காய் பற்படகப்புல்லு நாங் கணம் புனுகு சோமோஜனை வகைக்கு களஞ்சி ஒன்று சத குப்பை இஞ்சி கொடுவேலி ஆடாதோடை வகைக்கு களஞ்சி நாலு சமைத்து தேங்காய் எண்ணெயில் மெருகு பருவம் வடித்து சேவிக்கவும் உளிருரு சாற்றில் சீனி கலந்து கலக்கி தலையிலிடவும் ஒன்பது வர்மங்கள் உச்சியிலென்றால் மூர்க் கண்ணின் ஒன்றரை விரல்உயரே சந்துகுளி என்ற சென்னி நரம்பு மத்திபம் சென்னி வர்மமாகும்.

20. இந்த வர்மம் கொண்டால் கண்ணைடைக்கும் ஜன் னியுண்டாகும் வாயில் சுவாசம் பூக்கடைப்பு நாக்கு வரளும் அடிவயிற்றில்மட்டும் நிதானம்பார்த்து அமர்க்கவும் பின்னே அரிசி வகை ஆறு பூவத்து மண்சட்டி சகரம் செவியம் கண் டங்கத்திரி கஞ்சாபத்திரி கிழும்பு சோரோசனை வகைக்குக் களஞ்சி ஒன்று வெற்றிலைச்சாற்றில் ஒருசாமமறைத்து பயறு வண்ணம் திரட்டி கண்டங்கத்திரி துளசை வேறு செம்பருத் தம்பூ நாயுருவி வெள்ளருகு வகைக்குக்களஞ்சி மூன்றிடங் களி வெள்ளத்தில் கஷாயம் வற்றவைத்து குளிசை உரைத் துக்குடிக்கவும்.

21. நெற்றுக்கிழுனேர்திப்பொருத்தில் திலர்தவர்மம் அந்த வர்மம் கொண்டால் மரிக்கும் அரத்தை சுக்கு திப்பிலி சிறுசேபாழம் கசகசா சாம்பிராணி வகைக்குக்களஞ்சி மூன்று இரண்டு காய்ப்பசு ஜலத்தில் கஷாயம் வற்றவைத்துக்கொடுக்க வேதனை தீரும் தலையில் எண்ணெயிற்பூச்சுடத்து சிறு நரம்பும்

Digitized By Roja Muthiah Research Library

முப்பத்தேழு வர்மங்களும் உண்டு இதில் ஒன்பது பேன் குளிக்கு வலது வசம் அதில் ஒன்று பேன்குழிக்கு வலது வசம் மூன்றுவது விரலில் கை ஏற்றிக்குத்திஞல் டைத்தியம் போல் பேசும்.

22. இந்திரியம், சொட்டாய் விழும் ஆயந்திரம் கலைக் கும் பின்னும் செவிக்கு உயிரே தலேயோட்டின்மேல் காதில் இரண்டு விரல் சருகில் கை ஏற்றிக்குத்திஞல் மூக்கடைக்கும் ரசனேந்திரியம் வரைநம் தொண்டையில் வீங்கும் கண்ணி லும் மூவிரல் மேமேல கைகொண்டு குத்தவோ தள்ளவோ செய்தால் கண் மூடும் காதொடுங்கும் சப்தமும் குறையும் தலேக்கு உளவு வேதனையுண்டாகும் செவிக்கு அரைவிரல் உயிரே ஊக்கத்தோடு சேர்ந்து விரல் குத்திப்பிடித்தால் காது மடிந்திருக்கும் சப்தம் கேட்காது.

23. சரீரம் நடுங்கும் போஜனம்வெறுக்கும் கபம் மந்திக் கும் கண்ணு அயர்ந்து உரங்கும் ஓரோர் ஸ்தலங்களேயும் குணங்களேயும் மறுவசங்களிலமர்த்தி ஊன்றவும் கண்ணின் மேல் மோடெலும்பில் குத்திஞல் மயங்கும் கீழ்பக்கத்தில் குத்திஞலும் மயங்கும் கண்ணடைக்கும் சென்னிக்குழில் ஊன்றினுல் கண்ணு திறக்கும் காதினுடைய மேல்படை எலும்பில் குத்திஞல் காதிரைச்சலும் வாசனே அறிந்துகொண் டிருப்பதுபோல் பேச்சுண்டாகும் காது கேட்காது.

24. இதற்கு செவிக்குத்தியில் அமர்த்தவும் மோடு வட்டம் தடவவும் சுகம் மூக்கின் மத்திபம் குத்திஞல் கண் ணில் சோரை சென்னி துடித்து பிராணமிவதனேயில் பல்லு கடியும் உண்டாகும் கண்ணிற்கு மோகனம் கண்ணடைக்கும் விஷமேறும் பேசமுடியாமல் சென்னி விடைத்து ஜன்னி உண்டாகும் கபசுரமுண்டாகும்.

25. அலம்புரி சென்னி எலும்பு வில்லினுடைய முகட் டில் காதினுடைய மேல் முன்வசத்தில் தொத்தெலும்பில் குத்திஞல் சன்னடைத்து இளைப்புண்டாகும் கபாலவிடி இளைப்பும் தீர்சரிக்கமுடியாமல் மீதகம் வரலும் தலேபாட்டும்

Digitized By Roja Muthiah Research Library

பிளேபேசுவதும் செய்யும் மறுபுறமும் இந்த வர்மம் உண்டு உள்காதில் விசைநரம்பு இரண்டு விசைவர்ண யந்திரத்தில் தட்டினால்தான் சப்தமுண்டாகிறது.

26. அந்த விசையோடு கூடித்தான் ஆத்துமா அசைகிறது நெற்றியில் திலர்தக்காலத்தில் சிமிளும் தளமும் ஆத்மாவுடைய இருப்பிடமுமாகும் ஆயுசு மனித சரீரம் பூரண சீதளமடைந்தபின் நகக்கண்களின் வழியேயும் செல்லுகின்றன பிராணகலைகள் இந்த திலர்தத்தில் இருக்கப்பட்ட வில்லினுடைய சக்திகொண்டு அசைந்து பந்துபோல் சுருண்டு சுவாசகிரியாதியால் சுத்திகரணையுண்டாகி சரீரம் போஷிக்கப்படுகிறது.

27. இப்படியே விஷேசத்துவமாய் தலையுண்டாகிவட்டமும் அருபத்திநாலு துண்டு நரம்பும் நாலுதுண்டும் முப்பத்தியேழு பக்கமும் ஆகக்கூடி எட்டுச்சாணும் இசைவில்லா வர்மங்களும் உண்டாகின்றன இதில் தொடுவர்மம் படுவர்மம் சுளிப்பாய்கையாவும் இருவச எணப்படி நூற்றித்தாண்ணிற்றுருகும் கீழ்நாடி கவரெலும்பின் இடையில் குத்தினால் ஓர்மை தெரியாமல் உரங்கும் தலை விரைக்கும் கண்ணு துடிக்கும் எதிரே அந்த நரம்பினுடைய அடிஸ்தானம் காதினுடைய சீழ்ப்பாய்கையிலாகும்.

28 இதில் கொண்டால் ஜன்னி கபம் மூக்கடைப்பும் கண் வெட்டித் திரக்கிறதும் மூக்கில் சோரையும் காட்டும் தாண்டைக்குளியில் ஒருவிரல் வலது வசம் விசைநரம்பில் குத்தினால் மாத்திரை அடங்கல் கண்டு பிடிக்கவும் கழுத்திலும் புஜத்திலும் நேரே கிடக்கின்ற துடரி என்ற நரம்பில் குத்தினால் கழுத்து கோணும் புஜம் தடிப்புண்டாகும் தலைக்கு குத்தும் தலை ஆயர்ந்து ஜன்னியுண்டாகும்.

29. ஆத்மாவினுடைய பைக்கும் மாலுன்யம் உண்டாகும் அசாத்தியமான காந்தாரி வர்மம் என்பது இதே நரம்பில் உற்பத்தியாகி புஜத்தினுடைய சிப்பிக்குள்ளே கூடி கழுத்தில் வருகிறது வந்து மேல்நோக்கி சென்னியில் சுற்றுகிறது கழுத்

Digitized By Roja Muthiah Research Library

தின் பின்னல் மூன்று கண்டமும் இரண்டு வில்லும் ஆறு பல்லு நரம்பும் உண்டு பேன்குளி என்ற நெட்டியில் குத்தினல் அசாத்தியமாகும்.

30. இரண்டாவது இசைவில் குத்தினல் பல் நரம்பு ஸ்தாபித்துக்கொண்டால் தொண்ணூரில் அசாத்தியம் மூன்றாவது இசைவில் குத்தினல் குருக்கினுடைய தாரை பதிந்திருக்கும் மூக்கு சுளுக்கும் முகங்கோணும் இயந்திரம் கலைக்கும் ஊக்கமாய் பிடித்து விரல் ஐந்தையும் பிதுக்கிப்பார்த்தால் ஒவ்வொன்றும் நெருநெருப்புண்டாகி மடங்கும் காலிலும் இதுபோல் உள்துடையிலும் ஆந்திரத்துவம் என்ற பிராண காலத்தில்

31. இடைவந்து போனல் காலமறியாமல் பரீட்சிக்க வேண்டாம் லோகருக்குச் சொல்லவேண்டாமென்றாலும் புத்தியும் பாரபரத்தினுடைய திருஷ்டியும் முக்கியம் வேண்டியதாகும் விசையும் வில்லும் சேர்ந்து ஒடிந்தால் குணப்படமாட்டாது ஆதலால் மனப்பூர்வம் யாருக்கும் செய்யக்கூடாது செய்வது துரோகம் யோனி அல்லது மூலத்தில் சொன்ன அடங்கலை இருப்புக்குத்தி விழுந்தாலும் காலினுடைய படம் அடிகொண்டு திரும்பினாலும் கால் முடநரம்பினுடைய பிணைக்கத்தினாலும் அடங்கலில் உண்டாகும் குணபேதங்களும் மற்ற வர்மங்களை இது கவனித்து பார்க்கவேண்டியதாகும் சிகிச்சை செய்யலாம்.

32. காரெலும்பினுடைய இடையில் குத்தினல் எந்தச் சுளியிலாகிலும் பொய்கையிலாகிலும் கொண்டால் குன்னி இருமும் குலை அடைக்கும் கோச்சல் குத்தலுடன் குடல் பொங்கும் நெஞ்சு தெரித்துப்போவதுபோல் காணும் தலையும் சுற்றும் தொப்புளின் நேரே மூன்றுவிரல் வலமே பள்ளையில் குருக்கே சரித்துக்குத்தினல் வயரிளகும்.

33. வாய்வுபோகும் பொக்குள் உயர்ந்து வீங்கும் மூத்திரம் வெள்ளையாய் விழும் மூலம் சுருங்கும் இது அசாத்தியமாகும் கூம்பில் இருவிரலின் கீழே குத்தினல் கண்ண

Digitized By Roja Muthiah Research Library

யர்ந்து ஜன்னியுண்டாகும் கபாலம் இடி-க்கும் ஒருவசமாக வலித்து இழுக்கும் வாயில் நுரை தள்ளும் சங்கெலும்பில் வேதனையுண்டாகும்.

34. நெஞ்சில் கையில் குத்தும் வேதனையும் உண்டாகும் மூலத்தின் உயரே வாய்வு ஸ்தலத்திலும் ஒண்ணரை விரல் ஏற்றி ஆயங்கொண்டு குத்தினல் வில்லெலும்பு வளைந்து மூன்று கூனும் குருக்கினுடைய தாயையில் நங்கனிப் பொருத்திலும் இருவிரல் உயரே காலினுடைய பெருவிரல்கொண்டு குத்தினல் ஆள் வளைந்து சரியும் வர்மங்கள்போக. இசைவு பொய்கை சுளிகளிலும் அபாய குணங்கள் உண்டென்று அறியவும்.

35. பொன்கழுத்திலும் மூன்று விரலின் பக்கத்தில் கைபொத்தியடிக்கவோ பிடிக்கவோ செய்தால் கழுத்து திரும்பி தப்பாது தலை ஆட்டம் விரையலும் உண்டாகும் புறங்கழுத்தில் நருக்கெலும்பில் இடம் கண்டு குத்தினல் கைவிரைக்கும்.

36. பலமில்லாமல் வாளும் தலை நேரே முன்னே சரிந்ததானல் கழுத்தினுடைய பின் இசைவு விலகும் பேதலித்து வெட்டும் அந்த நரம்பில் விரல்வைத்து அமர்த்தினல் தலை நிமிரும் ஒருவசம் வில்லெலும்பில் அமர்த்தினலும் நிமிரும் ஒருவசமே தலைசரிந்துகிடந்தால் கழுத்தினுடைய பக்கங்களில் காரையெலும்பினுடைய வில்லெலும்பில் அமர்த்தவும்.

37. பின்வசம் ஸ்தலம் அறிந்து அசைத்தால் தொண்டைக்குளியில் கொக்கியருகிலுள்ள விசை நரம்பு துடிக்கும். இது ஒருமித்துப்பார்த்தால் அறியலாம் அந்த நரம்பிலமர்த்தினல் நிற்கும் சரீரம் அண்ணுர்ந்திருந்தால் அடிவயிற்றில் துணி பிடித்து நரம்பில் அமர்த்தவும்.

38. புஜத்தினுடைய வில்லுரெண்டு, விசை ஒன்று மறு கையிலும் இது போலாகும் கழுத்து ஆடிப்போனல் கைக்குளியில் விரலேற்றி அமர்த்தவும் புஜத்தினுடைய வீதியும் தடவும் காரெலும்பும் புஜமும் சேர்ந்த விசைநரம்பில் அமர்த்த

Digitized By Roja Muthiah Research Library

வும் கை மடக்கில் வில்லுரெண்டு விசை ஒன்று கை மடங்கி நேரே கோணிணல் மடக்கின் மத்திபம் இருப்பிளகும் விலா வெலும்பில் அமர்த்தவும் நிற்கும்.

39. சரிந்துகோணிணல் முட்டி-ற்குள் இருப்பான விசை நரம்பைக்கண்டு அமர்த்தவும் பின்னே முட்டின் மேலேயுள்ள சுளி நரம்பிலும் அமர்த்தவும் அமர்த்தி இதின் அருகிலுள்ள நரம்புகளெயெல்லாம் தடவி இழுக்கவும் வில்லும் விசையும் உள்ள இடங்களில் இடிகளடி- ஒடிவுக்கெல்லாம் விசையும் வில்லும் அசைந்து துடிக்கும்.

40. இதற்கெல்லாம் ஓர்மையும் சூட்சம புத்தியும் அதிகம் வேண்டும் வில்லும் விசையும் சரியாய் அறிந்தவர்களுக்கு வர்மம் மிகலேசானதாய் தோன்றும் மதருக்கு சண்டல தூடர் போலேயாகும் வில்லும் விசையும் சிகிச்சைகள் பிரமாணம் அறிந்து செய்யவும் மணிக்கட்டில் இரண்டு வில்லும் ஒரு விசையும் எப்போதும் அசைந்துகொண்டிருக்கும்.

41. பெருவிரல் மடங்கிக்கோணிப்போணல் அந்த மணிக்கட்டில் அசைந்துகொண்டிருக்கும் விசையில் குளியில் ஓடும் விசை நரம்பில் அமர்த்தவும் இரண்டாவது விரல் மணிக்கு மத்திபத்தில் ஓடும் நரம்பிலும் அமர்த்தவேண்டும்.

42. மணிக்கட்டினுடைய உள்ளும் புறமுமான நடுநரம்பிலும் அமர்த்தவும் பின்னே குணங்கள் கண்டு பிரமாணம் படித்து யுக்தம்போல் செய்யவும் மணிக்கட்டில் உண்டாகும் குற்றங்களுக்கு புறங்கை படத்திலேயுள்ள முட்டு மடக்குக் குளியில் உள்ள் விசை நரம்பை பிடித்து தடவவும் சுகம் கையிலுள்ள வர்மங்கள் யாவுக்கும் நரம்புகள் யாவும் கூடி வில்லையும் விசையையும் பற்றியே நிற்கின்றன.

43. நரம்பில் விஷமுண்டாகி விசைநார் தங்களால் நீர் தரிப்பு உளைச்சல் விதனம் உண்டாகும் இதற்கு குருந்தட்டி கொடுப்பை குமர் பசுவின் நெய்யில் சாலித்து தடவியிடவும் குருந்தட்டியை பாலில் அரைத்து தவம்போடவும் அல்லது

Digitized By Roja Muthiah Research Library

குவளத்தின்மேவர் பைலி இலைகளை எருமை மோரிலரைத்து குமரியும் கொச்சங்காயும் சார் பிளிந்து அரைத்துப்போட வும் கழுத்தின்கீழே இடுப்பிற்கு மேலேயுள்ள வர்மங்களுக்கு.

44. உளிஞெயுடைய சாரை பசுவின்மோரில் கலந்து போடவும் பின்னே குன்றி இலையும் ஆவரையும் தெற்றி இலையும் சாலித்து பழங்காடியில் போடவும் குடங்கலரைத் தும் தாரையிடலாம் பூவாசன் பழமும் புண்ணைக்கிலையும் கருத்த நொச்சியும் குருந்தொட்டி சாருடன் உமத்தை அமிர்தவல்லி துளசி பளுக்காய் இலைகளை நல்லெண்ணெயில் சாலித்துப்போட உருளையும் சீப்பெலும்பும் இசைவும் வில் லும் விசையும் பலம் கொள்ளும்.

45. இன்னும் இலை நாலும் சேர்ந்து இருக்கும் பாகங் களில் ஒருமிக்க அடியோ இடியோ தலோ கொண்டால் விசையின் தரம் கெடும் இடுப்பினுடைய கட்டிலும் உள் துடை இரண்டிலும் மூன்று வில்லும் அவைகளின் விசையும் நரம்புகளும் உண்டு அதிலுள்ள நரக்கெலும்புகளை பரீட்சை செய்து அறியவேண்டும்.

46. இவைகளின் ஸ்தாபனங்கள் விசை விட்டுப்போ னால் அசாத்தியம் காலை அசைத்துப்பிடித்துக்கொள்ளும் இத னுடைய நாளங்களின் வழியாகத்தான் லிங்கம் என்பது வெளியில் வருகின்றன தண்டிற்கும் விதிற்கும் இந்த விசை தான் பலமானதாகும் சனி என்ற பொருத்து தாரை எலும் பினுடைய உருளை அடுக்குச்சிப்பி இரண்டிற்குள்ளும் இருக் கின்றன.

47. வயிற்றினுள் சுற்றிப்பிடிக்கும் சிறு நரம்புகளுக்கு இடுப்பினுடைய வில்லும் விசையும் உருளையும் சீப்பும் எலும் புகள் ஒன்றுசேர நரம்புகளின் உதவியை வேண்டி பொருத் துகள் உண்டாகி வர்மங்கள் ஏற்பட்டன கூம்பிற்கு எட்டு விரல்மேலே நரம்பினுடைய பொய்கையில் குத்திஞல் சாகும்

Digitized By Roja Muthiah Research Library

அடங்கல்களில் கொண்டு நாக்குள்ளிழுத்தாலும் அசாத்திய மாகும் விலங்கு நரம்பென்றது காரெலும்பினுடைய வில் லுக்கு மேலேயாகும்.

48. கோக்கியில் துடிப்பது இடகலை பிங்கலை என்று லும் குறுநாடியில் தட்டிடுல் நெஞ்சு பதைத்து சரீரலுக்கு மேகடு உண்டாகும் தொண்டைக்குளியில் விசை நரம்பில் தட்டிடுல் விக்கல் உண்டாகும்.

49. வர்மங்களினுல் மரிப்பவர்களுக்கு பரீட்சை செய்து பார்த்தால் அடக்கமாகுமுன் கொப்புளில் சூட்சம திருஷ்யயால் மோக்க சுவாசம் பிரிந்தவழி கடுகளவு துவாரம் காணும் வர்மத்திற்கு ஜீவன் நாபி வழியும் வாதம் மீறி மாண்டவர்க்கு உச்சி வழியும் பித்தம் மீறி மாண்டவர்களுக்கு வாய்வழியும் சிலேற்பனம் மீறி மாண்டவர்களுக்கு கண் வழியேயும் பிரிகின்றன.

50. பரிசிரமம் உள்ளவர்கள் பார்த்தால், அறியலாம் எண்ணெயிலும் முடிச்சியும் வாய்வு பத்தும் பூகம் ஐந்தும் நெஞ் சுப்பிரதியும் பிஞ்சில்லாதொளியும் சாகத தலமும் வில்லும் விசையும் அறிந்தவர்களுக்கு பலநூல் சாஸ்திர சாமரஸ் லாசங்கள் எத்தனை இருந்தாலும் மனிதன்னை திருஷ்டி பிரதிபிம்பம அறியாதோர் இல்லாவிட்டால் உலகத்திற்கு துக்கமாம்.

51. ஆமைக்காலம்என்பது பொக்கினினுடையதுவார வழிகீழாகும் அந்த ஸ்தலமானது தலைச்சோற்றில் இருந்து ஊறி சரீரத்தில் பரந்து மேவினுடைய அமிர்தம் கொண்ட விருட்சத்தில் தளைத்து மெத்தம் கலந்தோடி கருவிகள் யதின் அதிர்ச்சையால் அசைய ஆகாயம் காற்றை உள்ளி ழுத்து வெளியில் கள்ளி பிராணகலைகள் கிரியைசெய்ய ஜீவன் சூட்சாதியாயிருக்கின்றன.

52. குடல் பெட்டியில் மணிக்குடல் முப்பத்திரண்டு முளநீளமும் நாளக்குழல்களும் சிங்குழல்போல் குருநாடியும் பன்னீராயிரம் சிறு நரம்பும் ஞான ஸ்தலங்களும் பூர்வீகமும்

Digitized By Roja Muthiah Research Library

பாளை லிங்கம் பதிதாசிக அறிவும் அமிர்கதாரை சுற்று அங்கங்களும் சுருங்கி பொருத்து தலையும் சுருதிக்குழல்களும் நின்கலையும் இவைகளெல்லாம் உச்சிமுதல் எங்கிருந்தாலும் பொக்குளை இவைகட்கு யந்திரஸ்தானமாம்.

53. தாலெலும்பு பதினாறும் கெஞ்சுப்புரத்தெலும்பில் பத்தும் எட்டும் சொக்கி தொண்டை கழுத்து புஜம் கூம்பு நாக்கு அண்ணாக்கு கண்ணு மூக்கு செவி உச்சி சந்து இடுப்பு தாரை லிங்கம் அடிவயிறு உள்ளங்கால் முட்டு கரண்டை விரல் இவைகளிலெல்லாம் பதுப்பாய் பிரித்து குணசீலமாய் வர்மம் கொண்ட ஸ்தலம் கண்டு மாத்திரையும் பரிஸ்பம சீலமும் அறிந்து பரப்பிரம்மத்தை நினைத்துக்கையணைத்து.

54. சிகிச்சை செய்யவேண்டும் மனிதனுடைய புத்தியும் சிலமும் கைபாகமும் அனுபவ நிச்சயமும் தாழ்மையும் வேண்டும் நிச்சயம் கண்டு காலங்களுக்கு அடங்கல் நாடிபுகளை பிடித்தால் தந்தியால் உடன் வேலைசெய்யுட சுகம் உண்டு காலினுடைய முட்டில் இரண்டு விலும் முட்டின் சிரட்டையை தளர்த்திகைகோர்த்தாப்போல் பிடித்திருக்கின்றன.

56. இது முட்டினுடைய கைமடக்கிப் பரிசோதித்தால் அறியலாம் காலினுடைய கண்ணில் மூன்று விசைநரம்பு உண்டு விரல்கள் இருபதிலும் மொளிகளில் இருபது விசை நரம்பு கூடுகின்றன கால் முட்டினுடைய மடக்கும் கைமுட்டினுடைய மடக்கும் சுளிநரம்பிலாகும் குணபேதங்களின்படி தாரையிட்டு கையணைக்கவேண்டும் நடக்கமுடியாமல் காலில் குத்தும் வேதனையும் உண்டானால் புத்தியாய் கால்விடல் கொட்டு தட்டி சுகப்படுத்தவும்.

56. மனிதன் ஊக்கோடுகூடி இருக்க விழுந்தால் அந்த ஆயம் முழுவதும் இருப்பில் வந்து தாக்குகிறது அந்த அதிர்ச்சை யால் விசைநரம்பு சூடேறி குடலில் பொக்குளின் ஸ்தானத்தில் மண்டிகட்டும் மூலத்தில் கால் பெருவிரல் கண்டு மாத்திரையால் அடங்கலை பிடிக்கவும் மூலத்தின் காலெலும்பு வந்த பொய்கை குழியில்.

Digitized By Roja Muthiah Research Library

57 யோனியில் பொன் உடம்பின் சரிவாய் அந்தக் குழியில் மூன்று அடங்கல் உண்டு சரிந்துநின்றே கமர்ந்தோ ஓடியோ உயரத்திலிருந்து விழுந்தோ இருப்பினுடைய விசை கொண்டு பெண்ணுடம்பின் சரிவாயிலும் யோனியின் சீழ் பாகத்திலும் உள்தொடையிலும் மூன்றும் ஒத்ததென்றால் மூலத்தின் மூன்று நாடி காலினுடைய உட்சண்ணும் பலகை எலும்பினுடைய வந்திரக்கோணலும் துண்டு அடுக்குச்சிப்பி யுமாம் சீப்பு உருளை தூங்கிப்போலல் அகத்தை காலி னுடைய பெருவிரல் ஸ்தானத்தில்.

58. தன்னுடைய கால்விரல்கொண்டுகுத்தியசைக்கவும் குந்தியிருக்கவும் அசையவும் நடக்கவும் சாத்தியம் உண்டா கும் பின்னே பக்கங்களில் கால்நரம்பு பின்னலுண்டாகி பெருநரம்பு வெட்டி கடைச்சால் இவைகளில் வேதனையும் நடக்கமுடியாமலுமிருந்தால் ரோகியைநடக்கச்சொல்லிசூட்ச மமாய் நின்று கால்விரல்கொண்டு மூலத்தினுடைய கோரை எலும்பில் குத்தவும் தீரும்.

59. விரையல் உண்டானால் அசாத்தியமென்று கண்டு கொள்ளவும் ஆயங்கள் எல்லாம் இருப்பிலே வந்து சேர்ந்த படியால் விசைநரம்புகள் தளர்ந்து சுருங்கி இருக்கும் விரை யல் இல்லை என்றால் உடைத்த தேங்காய்கொண்டு ரோகியை கவித்துத்தொடத்தி இருப்பில் வைத்து அசைத்துக்கொண் டிருக்கவேண்டும் வேதனையை உடனுக்குடன் கேட்டறிந்து கொள்ளவேண்டும் பினனே தேங்காய் அடியிலும் ரோகியை மேலேயும் மலத்திப்பிடித்து கீழ்பூட்டு முட்டின்மேல் உள் தொடைசந்தினுள் நரம்பிலும் அதிலும் கீழ் உள்ள நரம்பு களிலும் உள்ள முடங்களுக்கு

60. கால் முட்டினுடைய மடக்குக்கோணில் புழு ஆடி யதுபோல் சிறுநரம்பு வந்திரம் குருகி நடக்க முடியாமல் இருக்கும் அழைப்பிடித்து விரல் கொண்டு குத்தவும் நடக் கச்சொல்லி பிடியுள்ள நரம்பைக்கேட்டறியவும் முட்டிற்குக் கீழுள்ள வர்மங்களுக்கு சிரட்டைக்குழியில்தான் நரம்பு சுருளும்.

Digitized By Roja Muthiah Research Library

61. இதற்குவந்திரத்தில்குத்தி எலும்பிலிருந்து கீழ் நோக்கி காலினுடைய கண்ணில் படத்தைத்திருப்பிதட்டவும் மூடம் தீர்ந்துவிடும் நரம்பினுடைய சுருளும் தீர்ந்து சுகப் படும் முட்டினுடைய மடக்கிலும் உயர வில்எலும்பினுடைய இடையிலும் குத்தினால் கால் விரையலும் பின்னலும் உள் வேதனையும் வீக்கமும் உண்டாகும் நடக்கமுடியாது.

62. அந்த முட்டினுடைய சிரட்டையில் அடங்கல் உற்பத்தியானது அவ்விடத்திலிருந்து குதிங்காலினுடைய விசை எலும்பு கண்ணின் மேலே பதிந்திருக்கின்றன கண்ணினுடைய இசைவு குளியில் குத்தினால் வீக்கமும் கால்விசை எலும்பு வெட்டும் நடக்கவும் முடியாது இரண்டாங்காலிலும் இது பிரகாரமுண்டு வில்எலும்பு மூலத்தில் உருளைச்சிப்பியினுடைய அகத்தாகும் இதின்துடர் விசைநரம்பு பெருவிரல் மேலேயும் மற்ற நரம்புகளிலும் சுற்றி இருக்கின்றன.

63. சிறுவிரலின் இரண்டு விரல் மேலே குத்தோ தல்லோ கொண்டால் கண் உளைச்சலும் சிகப்பும் சரீரத்தில் விரையலும் குத்தும் களிச்சல் வேதனையும் உண்டாகும் முட்டின் உயர முடமானால் அடித்துடையிலும் கீழானால் மடக்குக்குளியிலும் சுருள் நரம்புண்டு அது வில்லும் விசையும் சேர்ந்ததில் சென்று கொள்ளக்கூடாது அப்படி கொண்டால் அசாத்தியம்.

64. மடங்கும் பொய்கையும் துண்டும் இசையும் அடங்கல் நிதானம் கண்டு முளங்காலினுடைய எலும்பு சிரட்டையில் பிடிக்கவும் அதில் குத்தோ இடியோ கொண்டால் வீக்கமும் உருளைக்கு வினமும் காலைசக்காத நிலைமையும் உண்டாகும் கவிழ்த்திக்கிடத்தி இடுப்பிலிருந்து, கீழ் நோக்கி இரண்டு காலையும் நீட்டி ஒப்பமாய் வைத்து உலக்கை போட்டு சவட்டவும் சவட்ட அசாத்தியம் போக இடுப்பிற் குக் கீழுள்ள முடங்களெல்லாம் தீரும் இவைகளுக்கெல்லாம் இப்படியே சவட்டித் தீர்க்கவேண்டும் பெருவிரல் நரம்பு அற்றுப்போனால் தரிப்பு கண்ணில் காயம்.

Digitized By Roja Muthiah Research Library

65. ஜன்னியுண்டாகி சரீரம் வளைந்து போகும் கூவளத்தின் வேரை பசுவின் பாலிலரைத்து கலக்கித் தாரையிடவும் பசுவின் நெய்யில் குமரிச்சார் சேர்த்து தாரையிடலாம் எள்ளும் சுக்குப் அரைத்துப் பூசவும் இவ்விதம் மூன்று விதமும் செய்யவும்.

66. காலினுடைய வெள்ளை முறிந்து தரிப்பு எறிலால் எருமை மோரில் கைதோன்னி அரைத்து தாரையிடவும் இதற்கெல்லாம் வில்லினுடைய விசை மாறுகிறவரை தாரை குறையாமல் போட்டுக்கொண்டு வரக்கவும் வில்லினுடைய கால் கண்ணில் இசைவில் சிறு நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகும்.

67. கரண்டைக் கண்ணினுடைய மொளியில் கவராயிருக்கின்ற வில்லில் கவராயிருக்கின்ற குடல்போன்ற விசை நரம்பு கரண்டையில் சேர்ந்து அடியில் இருக்கும் விசை நரம்போடு கூடுகின்றன கையினுடைய விரல்களிலும் இப்பிரகாரமேயாகும் அப்படிவந்த நரம்பு மேமேலே கரண்டையில் இருந்து முளங்கால் வழியும் அங்கால் வழியும் கூடி முட்டினுடைய விசைநரம்பில் பிரிவாகின்றன.

68. அதில் ஒரு கண்டமும் வில்லு நரம்பும் புறமேலாகமும் முட்டின சாய்வில் இருப்பாகும் இருப்பாகி கெட்டியாய் சிப்பியிலும் குறுக்கின் தாரைக்குழியிலும் சந்திரனே ஒட்டி இருக்கின்றன கண்ணுடி எலும்பின் முன்வசமாய் துடைக் கெட்டைச் சேர்ந்த கெட்டினது போல் வில்லிலும்பும் விசை நரம்பும்.

69. உள் சூஸ்திரமாய் இரண்டு மார்பிலும் அகவழியே கூடி இரண்டு விசைநரப்புக் கொக்கியிலும் முதுகினுடைய தாரைவழி இரண்டாகவும் புறங்கழுத்தில் பேன்குழியில் சேருகின்றன புறங்காதினுடையா மேமடலும்பிலுள்ளும் இப்படி வசங்களில் உண்டாகி.

Digitized By Roja Muthiah Research Library

70. தலையோட்டை எந்திப்பிடிக்கின்றன இதுபிர காரம் மனிதன் சரீரத்தில் வில்லும் விசையும் இசையும் எழு பீத்தீராயிரம் நரம்பும் எண்ணூயிரம் முடிச்சியும் முன்னூற்று பதினாறு சுற்று நரம்பும் துவாரவெளிகளும் வர்மப் பொய்கை களும் உண்டாகி அதில் தலை சரியாய், மறுபுரம் திரும்பினால் அசாத்தியம் பிழைக்காது மற்ற பாவுச்சுப் வில்லும் விசையும் பரிட்சித்துப் பார்த்துப் பிடித்தால் அசாத்தியமுள்ள வர்மங் களும் எழுந்திருக்கும்.

71. இனி கசாயம் சுண்டைவேர் வெள்ளருகு துளசி விஷ்ணுகிரந்திக்கொழுந்து குன்னிவேர் பிராலிஇலை வகைக்கு களஞ்சி ஆறு நாகதாளி அழுக்குறு வையந்தாளை சந்தணம் குடங்கல் பூவத்து சீரகம் கொப்பரக்கு ஆளியரிசி திப்பிலி மூலம் கொட்டம் கச்சோலம்சிறுபுன்னையரிசிவஸ்வ வகைக்குக் களஞ்சி ஆறு அளைப்படி ஜலத்தில் கஷாயமிட்டு அரைக்கால் படியாக்கு மூன்று நாள் ஆறுவேளை இப்படியே தினம் புதிதாக கொடுக்கவும்.

72 நரம்பினுடைய சுருக்கு வர்மங்கள் சுகப்படும் வேறுமுறை ஆடாதோடை அமிர்தவல்லி இசங்கு குப்பை மேனி நஞ்சறுத்தான் நாயுருவி ஆடுதீண்டாப்பாளை வேலிப் பருத்தி வகைக்குப் பலம் மூன்று கார்கோலரிசி, சிவதை கொத்தமல்லி கண்டங்கத்திரி சீரகம் மிளை கோரோசனை திப்பிலி மண்சட்டிப் பொடி.

73. சாதிக்காய் வகைக்குக் களஞ்சி இரண்டு ஒருபடி ஜலத்தில் கசாயம் உளக்காக்கி நாலுக்கிருமடிதாக மூன்று நாள் சேவிக்கவும் கூட்டிலே கொண்ட எட்டு வர்மங்களும் சுகப்படும் வேறுமுறை மூடில்லாத்தாளி கைவளை சம்பங்கி காதல் பிச்சிமொட்டு தாமரை வளையம் சாரைக்கிழங்கு முத்தங்காய் அமிர்தவள்ளி மூலதாங்கி.

74. கருவிலாஞ்சிவேர் செந்தட்டி வகைக்குக் களஞ்சி பத்து சீரகம் வால்மிளகு குமரிசாணி திருவிக்காய் தோடு

Digitized By Roja Muthiah Research Library

செவியம் கிருமிசத்துரு ஏலம் கார்கோலரிசி வகைக்குக் களஞ்சி மூன்று ஒருபடி ஜலத்தில் கசாயம் கால்படியாக்கி ஐந்து நாள் பத்துவேளை குடிக்கவும்.

75. குடலினுடைய கொளுத்து பள்ளோவர்மங்களும் சுற்று நாம்பினுடைய விஷங்களும் சுகப்படும் பின்னே தூது வளைவேர் ஆவரைவேர் வெள்ளருகு குருத்தட்டி செந்தட்டி சூரிவேர் பூதாவிருட்சம் தேவதாரம் மாஞ்சி மருது மூலம் கண்டங்கத்தரி வகைக்குக் களஞ்சி இரண்டு ஒருபடி ஜலத்தில் கசாயம் உளக்காக்கி ஆறுநாள் பன்னிருபோது சேவிக்கவும்.

76. நெஞ்சின் கூட்டில் உள்ள சுற்று நாம்புகளின் கோச்சு குத்து கொளுத்து அபார ஆத்துமதடிப்பு கபால யிடி இவைகள் சுகமாகும் வெள்ளருகு பிரமி சிவனார் வேம்பு பிள்ளை நெருஞ்சி மலைதாங்கி குன்றி இசங்கு தூதுவளை வேர் குட்டித்தக்காளி வெள்ளைக்குடங்கல் திருநீற்றுப் பச்சை வேர் வகைக்குப் பலம் ஒன்று அக்கரா மதுரம சீரகம் தகரம் ஏலம் கொத்தமல்லி கொம்பரக்கு அரிசிவகை ஆறு வெள்ளரத்தை வகைக்குக் களஞ்சி மூன்று வீதம் மூன்றுபடி ஜலத்தில் கசாயம் உளக்காகக்கி மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கவும்.

77. உள்வர்மம் கொழுத்து கோச்சல் உன்னும் மின்னல் இடி இருமல் சுவாசகாசம் இவைகள் சுகம் உண்டாகும் அருகன் வேர் குருந்தட்டி வேர் ஆடாதோடை கூவளத்தின்வேர் வகைக்கு பலம் பத்து திப்பிலி அமுக்குரு நாகணம் தாளிசபத்திரி சிறுநாகப்பூ வகைக்குக்களஞ்சி மூன்று இரண்டு படி ஜலத்தில் கஷாயம் வற்றவைத்து.

78. கொம்பரக்கு பலம் ஒன்று திப்பிலி பலம் கால் பொடித்து துணியில் அரித்து மேல் பொடியிட்டு ஆறுநேரம் குடிக்கவும் கருப்பு நரல் கூம்பு இவைகளின் விஷங்களும் அவைகளைச்சுற்றும் நாம்புகளின் விஷங்களும் வர்மங்களும்

Digitized By Roja Muthiah Research Library

உள்கொழுத்தும் வேதனையும் சுகமாகும் வேறு முறை கண் டங்கத்திரி செந்தட்டி கருஞ்சுண்டை வேர் தும்பை வேர் வீகைக்குப் பலம் ஒன்று.

79. அழுக்குரு திப்பிலி மதுரம் வெண்குங்கிலியம் வகைக்குக்களஞ்சி மூன்று மூன்றுபடி ஜலத்தில் கஷாயம் வற்றவைத்து ஏலம் மேல்பொடி போட்டு பன்னிரண்டு நேரம் கொடுக்கவும் சகல வர்மங்களிலுள்ள கொழுத்தும் வேதனை யும் சுகம் வர்மங்களினல் முடங்கிக்கிடப்பவர்களுக்கு கரி சாத்து அழுதவள்ளி அழுக்குரு வகைக்குக் களஞ்சி மூன்று வீதம் ஒரு படி ஜலத்தில் கஷாயம் வற்றவைத்து குளிகை உரைத்துக்கொடுக்கவும்.

80. குளிகை நாகணம் சிங்கிரசம் புனுகு இருவேலி பச்சைக்கற்பூரம் ஏலம் கண்டங்கத்திரி அழுக்குரு திப்பிலி வகைக்கு களஞ்சி மூன்று திப்பிலியும் மிளகும் கஷாயம் செய்து அந்த நீரில் முப்பது நாளிகை அரைத்து பயறு வண் ணம் திரட்டி நிழலிலுலர்த்தி ஜன்னிக்கும் வலிப்புக்கும் இஞ் சிச்சாறும் தேனும் சேர்த்துக்கொடுக்கவும்.

81. பின்னை மீரை களஞ்சி மூன்று சூடம் களஞ்சி இரண்டு புனுகு களஞ்சி ஒன்று கோரோசனை களஞ்சியரை ஏலம் கண்டங்கத்திரி வால்மிளகு வகைக்குக் களஞ்சி மூன்று கூவளத்தின்வேர் கருஞ்சுண்டைவேர் இவைசேர்த்து கஷாய மிட்டு இருபது நாளிகை அரைத்து மிளகு வண்ணம் உணர்த்தி.

82. பெரும் சுவாசத்திற்கும் வலிப்புக்கும் கபத்திற்கு திப்பிலி கஷாயம் வடித்து சேவிக்கவும் பொருமலுக்கு இஞ்சி யிலும் இளக்கத்திற்கு முதங்காய் இஞ்சி தும்பைப்பூ இவை களில் கொடுக்க சுகம் குளிகை கற்பூரம் கச்சோலம் மீரை சந்தணம் சிப்பி முத்து பகளம் சங்கு உத்திராட்சம் காண்டா மிருகப்பால் அன்னபேதி வெண்காரம் செவியம் அபின் பளுக்காய் கடுகு ரோகணி வகைக்குக் களஞ்சி இரண்டு முருங்கைப்பூவை வெப்பன் பழச்சாற்றிலரைத்து.

Digitized By Roja Muthiah Research Library

83. பயறுவண்ணம் உருட்டி இஞ்சியும் கொளுஞ்சி வேரும் கஷாயமிட்டு மாத்திரை உரைத்து சேவிக்க சுகம் பொடி துதுவளைவேர் கருஞ்சுண்டைவேர் இசங்கின்வேர் குட்டித்தக்காளிவேர் அழுக்குற திப்பிலி பல்லி கார்கோலரிசி சிங்கி கற்கடகசிங்கி வெள்ளரத்தை வகைக்குங் களஞ்சி இரண்டு சேர்த்து வெயிலில் வைத்து தேனில் சேவிக்க காயங் கள் வர்மங்களிலுள்ள ரத்தக்கட்டு இவைகள் சுகம்.

84. பொடி செந்தட்டி சாரணைக்கிழங்கு மலை தாங்கி கருங்குடங்கல் வேலிபிலை ஆசாளி வெள்ளைக்குங்குலி யம் மதுரம் திப்பிலி பூலாவி நட்சம் சீரகம் எலம் கண்டங் கத்திரி மிளகு இலவங்கம் வகைக்குக் களஞ்சி மூன்று வெயிலில் உணர்த்திப்பொடித்து பசுவின் நெய்யில் சேவிக்க வும்.

85. வர்மங்களும் கொழுத்து கபம் குன்னல் இவை சௌக்கியம் பொடி திப்பிலி பத்திரி சிறுநாகப்பூ கண்டங் கத்திரி கற்கடகசிங்கி தேற்றான்பரல் கொட்டம் கரும்பிடம் வெள்ளைநொச்சி காக்கலம்வேர் பொன்னைவேர் இவை ஒரிடையாய்சேர்த்து வெயலில்வைத்து பொடித்து தேனில் சேவிக்கவும் காரல் வெள்ளரல் சம்மந்தமான கோச்சல் தரிப்பு கபம் இருமல் சுகம்.

86. ஐந்தெண்ணெத்தைலம் கூவளத்தின்வேர் இசங் கின்வேர் விராலி ஆவரைவேர் தொட்டால்வாடி கொடுவேலி வகைக்குப் பலம் மூன்று குருந்தொட்டி பலம் இருபது மூவிலை பலம் ஐந்துபடி ஜலத்தில் கஷாயம் வற்றவைத்து கடுகு வெள்ளரத்தை நாகணம் சந்தணம் அழுக்குற பத்திரி கொம்பரக்கு திப்பிலி மூலம் தேவதாரம்.

87. சீரகம் கசகசா செண்பகமொட்டு சமுத்திராப் பழம் வகைக்குக் களஞ்சி மூன்று வீதம் இருவேலி முத்துச் சிப்பி குங்குமப்பூ வகைக்குக் களஞ்சி மூன்று ஆவின் நெய்

Digitized By Roja Muthiah Research Library

தேங்காய் நெய் நல்லெண்ணை பன்றி நெய் வேப்பெண்ணை வகைக்குப் படிகால் மருந்தெல்லாம் கஷாயமிட்டு வடித்து எண்ணையில் கலந்து கடுகு பதமாய் காய்த்து சேனிக்கவும்.

88 புறத்திடுதலும் முட்டுவர்மங்களும் பிடிநரம்பு னுடைய வரட்சைகளும் பீனிசம் விக்சநரம்பு குற்றம் தரிப்பு கொளுத்து உள்வேதனை சயம் இருமல் வெட்டு விசையல் இவைகளெல்லாம் சுகப் முக்கூட்டு எண்ணை ஆவரைவேர் கருஞ்சுண்டைவேர் செந்தட்டி சாரணைக்கிழங்கு முள்ளில்லா வாடி குடங்கல் நாகதாளி வகைக்குப் பலம் ஒன்று.

89. இலையும் தளையும் சேர்த்து இரண்டுபடி ஜலத்தில் கஷாயம் உரியாக்கி கச்சோலம் கண்டங்கத்திரி திப்பிலி அரிசி வகை ஆறு கொம்பரக்கு அமுக்குரு ஜாதிக்காய் குங்குமப்பூ பளுகாய் மஞ்சிஷ்டி கொட்டம் செவியம் செஞ்சந்தணம் வகைக்குக் களஞ்சி மூன்று.

90. ஆமணக்கெண்ணெய் தேங்காய்யெண்ணை நல் லெண்ணை வகைக்குப்படி கால் ஒன்று கச்சோர்த்து இடங்காளி வெள்ளத்தில் கஷாயம் மருந்துகள் சேர்த்து வற்றவைத்து இருத்து எண்ணையில் கலந்து மெழுகுபதம் வடித்து சகல வர்மங்களுக்கும் கொளுத்துகளுக்குப் பேலிலிட்டுத்தடவிவிட சுகம் இசைவிலும் சுளியிலும் கூம்பின் கூட்டிலும் கொண்ட வர்மங்களுக்கு உள்ளுக்குக் கொடுக்கவும்.

91. நெய் முல்லில்லாவாடி அமுக்குரு கடுகு மல்லி கொட்டம் சந்தணம் கொம்பரக்கு வகைக்குக் களஞ்சி மூன்று கால்படி பசுவின் நெய்யில் மருந்துகளை அரைத்துக் கலக்கி மெழுகுபதம் வடித்து சேவிக்க வர்மங்களினால் உண்டான வரட்சை தீரும் சரீரம் புஷ்டிக்கும்.

92. வேறு எண்ணை ஆமணக்கெண்ணை நல்லெண்ணை வகைக்குப் படி கால் கொம்பரக்கு திரிபலை, திரிசாதி வகைக் குப்பலம் ஒன்று சதாவேலி கொடிவேலி அருகன்வேர் கஷா யத்திலரைத்து எண்ணையில் கலந்து மெழுகுபதம் வடித்து சேர்த்துக்கொள்ளவும்.

Digitized By Roja Muthiah Research Library

93. வர்மத்திலுல் குன்னி நடக்கிறவர்களுக்கும் உள் சுவாசம் சோச்சல் கொளுத்து இருமல் சுகம் நோத்திற்கு காரண்டியிடை உள்ளுக்குக் கொடுக்கவும் நடக்கமுடியாமலில் இருப்பவர்களுக்கு விசைவில்லினுடைய ஸ்தலம் நோக்கி எண்ணெயிட்டுத் தடவுவும் கையுபசாரம் பார்த்து செய்யவும்.

94. சரீரம் அடங்கிலுமுள்ள பின்னல் நரம்பினுடைய விஷங்களும் விசேஷத்துவமாம் விசைவில்லினுடைய உள்ளே எழுபத்தாறு வர்மம் உண்டு மற்ற வர்மங்களுக்கு வில்லினுடைய ஏந்திரங்களைப் பரீட்சிக்கவேண்டாம் அவை கள் ஆகாவர்ம சங்கங்களாகும்.

95. தண்ணீரில்லா மேனியும் சுளியும் சீப்பும் உருளை யும் விசையும் வில்லும் கண்டவர்களுக்கு ஒன்றும் கஷ்ட மில்லை கைகால் திடனும் ஓர்மையும் பரிசிரமமும் ஆயங்கள் நிச்சயமும் சுவட்டினுடைய பெருக்கமும் நிச்சயம் அறிய வேண்டும்.

96. திருமேனி எண்ணை திறம் பெரிய திருமேனி எண்ணையென்று செப்பக்கேளு செப்புகிறன் மேனிச்சார் வேளைச்சாறும் நவாயிலைக்கொடி மரக்கொடி நாயுருவிச்சார் வேலிச்சார் நத்தைச்சூரிசார் குருந்தெட்டி மொசு மொசுக்கை இலுமிச்சம் சார் இவைகளோடு காஞ்சிரை வேருடன் கொடிக்கொடி ஜாதிக்காய்ஜாதிப்பத்திரி கருஞ்சீரகம் கார்கோலரிசி.

97. குணமுள்ள தித்தமுடன் துருசும் கூட்டிச் சொல்லுவேன் நற்சீரகம் கொட்டம் மிச்சம் தாரமொடு கல் தூரி மதுரம் கோரோசனை திரமான அபின் வெள்ளைக் குங்கிலியமாமே ஆமென்ற வகைச்சாறு ஆளாக்காக அப்பனே கடைமருந்து களஞ்சி ஐந்து ஓமென்ற நல்லெண்ணை நாளி யப்பா அப்பனே மெலுகுபதம் தன்னில் காய்ச்சி அடவுடனே தேய்த்துவர வர்மம் தீரும் வர்மத்தால் வந்த ஜன்னி மண்டையிடி மண்டைக்குத்து மாற்றுணல் செய்யப்பட்ட வர்மரோய்கள் கேளப்பா நரம்புப்பிடி அலவு சென்னிரோயும் மாறும்.

Digitized By Roja Muthiah Research Library

98. ஆயாசம் மயக்கமொடு கிருக்கும் மாறும் அப்பனே உள் தளர்ச்சை சயமும் தீரும் தீராமடா உச்சிவலி உச்சிக் குத்து ஊக்கமுடன் கொண்டவர்ம நோயெல்லாம் போகுதல் யாவும் உண்மையாய் தீருமென்று பொதிமைமுனி உரைத்த வாசி சுவாதி ஐந்தெண்ணை முக்கூட்டு சொல்லவே திரி கடுகு பனைமீயாடாறும் சொற்பெரியம்தூரமொடுதேவதாரம் நல்லதொரு அரத்தையொடு மாஞ்சி கொட்டம் நான்முகப் புல் அக்காசந்தணம் வல்லபுகள் காரகிலும் முத்துச்சிப்பி வகையான இருவேலிருமிச்சம் சிறுதேக்கு எல்லைமணிக் குங்கிலியம் கரியபோளம் இயல்பான நாகப்பூ பூலாவிருட்சம் தாமின மேகள் கண்டில் வெண்ணை பருக்காய் மோதகம் அசூர் ணகம், வேப்பன்பட்டைகாயம் கிருமிசத்துரு கருஞ்சீரகம் சோலம் கோலம் திரிசாதி வலம் சதகுப்பை கடல்நுரை சிறு நாகப்பூ.

99. மானே நீ மருந்தை எல்லாம் இடித்து நன்றாய் நயம்பெறவே வகை வகைக்கு களஞ்சி இரண்டு இரண்டான ஆவின் நெய் புங்கெண்ணை சென்னைக்காய் எண்ணை நல் லெண்ணை தேங்காய் எண்ணை குணம்பெறவேவகை வகைக்கு படிதானென்று நன்றான ஆவின்பால் வெள்ளாட்டுப்பாலும் நலமான கந்தபப்பால் தேசிப்பாலும் ஒன்றான முலைப்பாலும் தானும் வாங்கி ஓமிகாகோ சம்பழச்சார் கும்பழச்சார் நிம்ப ளச்சார் என் மகனே எட்டிச்சார் மட்டிச்சாறும் அதுவான வெப்பாற்றிப் பழத்தின் சாறும் வகை ஒன்றுக்குப்படி ஒன்று கணக்காய் சேர்த்து இசைவான சந்தணமும் வேங்கைக்காதல் இயல்வான கருங்காலி பொன்னுவரைப்பட்டை மதுவான அத்தி இத்தி ஆல் அரசுப்பட்டை மகத்தான் குருந்தொட்டி வகையொன்று பலம்தான் இரண்டு ஆகவே இருகுருணி நீரி லிட்டு அடவாக கஷாயம் ஐநாளிபாக்கிக்கொண்டு ஆக ஒரு பெரிதான உருளிதன்னில் வகையான மருந்து முதல் எண்ணை பாலும் போக இந்தக் கஷாயமதும் கூடச்சேர்த்து பொங்கமுடன் எருக்கலையும் நொச்சி மேனிதாகுபெரு வல் லாரை கொடுப்பை வெற்றி தயவான கைதானி சங்கங்

Digitized By Roja Muthiah Research Library

குப்பி சங்கென்ற வகைச்சார் படிதான் பாதி பரிவாக இதை சில்லாம் ஒன்றுச்சேர்த்து பொங்கியது போகாமல் அன லெரித்து பொருந்தவே மெழுகுபதமாகக் காய்த்து தாங்கிய தேர் புனுகுச்சட்டம் வெட்டிவேரும் பச்சைபாதி மிச்சத் தாலே எங்கும்மொருநிலையாக கணைஷனுக்கு என்னையதை வடிகட்டி பூஜை செய்யே.

100. செய்யவே அந்தி சந்தி பத்துநேரம் கொள்ளு வது காசிடைதான் வேளையொன்று பையவே தேகமெல்லாம் எட்டு நேரம் உருவி எண்ணை போட்டு நலமாக வெண்ணீரில் முழுகச்சொல்லே நலமான படுவர்மம் பன்னிரெண்டும் தொடு வர்மம் தொண்ணூற்றுறும் உயர்ந்ததொரு உள் வர்மும் எல் லாம் தீரும் கேளப்பா வாதபித்த சிலேற்பனங்கள் கெடி யான சூனியங்கள் கைவிஷங்கள் பாழப்பா பேய் பூதபிசா சினுலும் பலநாப்பு தெற்றலுடன் பரிசினுலும் நாளப்பா வைத்திருந்து சிறசோடெங்கும் வளமாகப்பூசிவரளட்டுநேரம் பாகமுடன் பத்தியங்கள் சொல்லக்கேளு. கடினமடா மோக மதை தள்ளவேண்டும் புளியுடனே உப்பினிப்பு நீக்கவேண்டும் நீக்கியே பசும்பயறு கூட்டிக்கொள்ளே கூட்டவே சொன்ன தொரு வர்ம சாஸ்திரம் குணமான மருந்துடனே குணபேதங் கள் பேதமென்ற ஸ்தலங்களதின் இடமும்சொல்லி சாத்தியம் அசாத்தியம் சொல்லி போான வில்லும் விசையும் சொல்லி புகழ் பொவே என் குருவின் பாதம் போற்றி புகழ்ந்திட்ட வில்லும் விசையும் முற்றே.

குருவேதுணை.

Digitized By Roja Muthiah Research Library

வர்மசூஸ்திர நிகண்டகராதி ஒடிமுறிவு ஞானம்.

1. அண்டபிண்டம் எண்டிசையும் ஒன்றதாகி அண்டப கரண்டமிதின்புறமுமாகி அண்டபிண்டம் திரிகிரிகை நாலு யோனி அதிலெழுந்த ஊர்வனமும் பறவைதேவர் கண்டிருந்த மனிதாதிபசுங்கள்யாவும் கதிப்பான நீர்வளமும் சிரதிகாற் கால் கொண்டிருந்த எழுதீதாற்றம் ஒன்றுய்நின்ற குணமான பொருளாதி குருவே காப்பு.

2. ஆதியந்தங்கடந்த பொருள்நற் குணமாய் நின்ற அகண்டபரிபூரணமே அளவில்லாத சோதிஎன்ற நிர்மலமே சூட்சாசூட்சம் துடர் ரவிமதி என்னும் முச்சுடரும் தாண்டி வீதி என்றஒலி இரைக்குள் ஒளியாய் எங்கும் படைப்பொரு ளாய் எப்பொருட்கும் நிறைவதாக சாதிஎன்ற சாதிக்குள் உயிராயெங்கும் தானுக நிற்றிலங்கும் மூலம்காப்பாம்.

3. மூலமுதல் ஆறுஸ்தலத்தாடை மேலாய் மூலவளி தளமதிலே மேலாதாரம் பாலவெளிஸ்தானமதுதான் கடந்து பதியான முப்பாளரும் கடந்துமென்மேல் நாராக மேல்குகை யில் குடியிருந்து வந்தவழி தன்னைக்காணை ஆலவிஷமுண்ட சிவன் அடியினையை தினம்பணிந்து ஐந்துருவும் காப்புத் தானே.

4. ஐந்துருவும் மூன்றுருவும் ஒன்றுய்கூடி அதிலேலே ரெண்டுருவும் களங்கமின்றி தேய்ந்ததுகாண் அண்டபகி ரெண்டமெல்லாம் தொல்லையற்று நின்றகுருநாதா உன்னை ஆய்ந்துகண்டு தேர்ந்தவர்க்கு நீயதஞ்சம் அல்லாது மேலுண்டோ அமைச்சர்தேகமேல மாய்ந்த குருநாத உன்னடி யினையை மறவாமல் இன்னமொரு காப்புத்தானே.

5. இன்னமொரு ரெண்டாகி நின்றுய் நாதா எதிர் பொருகி முப்பாரில் குடிதானே இன்னமொன்று மூன்றுங்கி பதியில்வாழ்ந்து இல்லறத்தை நல்லபாய் நடத்திபண்ணி

Digitized By Roja Muthiah Research Library

குன்றுமணிபோலிருந்து வாழும்நாதா பிரணவத்தில் வளர்ந்த மூர்த்தி சென்றுசுடர்மணிவிளக்காய் பூரணமாய்நின்ற செஞ் சுடரோன் கபாலபதம் காப்புத்தானே.

6. மலரான குண்டலியாள் தாயின்செய்கை வல்லவே தான் பிரணவத்தேதாடொன்று சேர்ந்து தலமானவலிகளெல் லாம்பெருகிச்சென்றுசதுரான பெருவெளியாகாயத்தேதாடே நிலையாகி மறுபடியும் முன்பின்னுகி நிர்ணயமாய் முதல்கடை யாய் நடுவுமாகி பலவகையாகி உடலாகி உயிருமாகி பதிக் காசாய் ஏவல்செய்யும் ஸ்தலமேகாப்பு.

7. ஸ்தலமான ஸ்தலத்தேதாடே அசைவு புக்கித்தானு மதிலேரி மலர்மணத்தைக்காண ஜலமாகி வந்தவளி தன்னைக் கண்டு சந்தித்து மேல் வீட்டில் குடியேரி பல உணர்வால் உடலாகி உயிருமாகி பகர் கருவாய் நின்ற பதிஞறு காப்பாய் நிலைபெருகி ஒரு குருவாய் நின்ற நாதநின்னருளே என்மீதில் நிகழ்த்தக்காப்பே.

8. நிகழ்த்துவாய் அண்டபகிரண்டமெல்லாம் நின் ருடும் மணி சூட்சத்தப்பாலேரிபுகழ்த்துவாய் உன்னையன்றி வேறேயுண்டோ புல்லர்களே ஏன்படைத்தாய் புனிதநாதா ஜகத்திலமைத்திருக்கும் வளிக்கடங்கா நாதா தன்னையொரு அகத்திலிருந்தக ஞானதீபம் காண அருள்புரிந்து எனைக்காப் பாய் அண்ணல்கோனே.

9 அண்ணலே உலகதிலே வாழும் மாந்தர் அடி காயம் முறிவு விழுதல் தல்லலாலும் விண்ணடியில் புனையற்று விழுகையாலும் விழுந்தங்கம் சிதறுண்டு நொருங்கலாலும் மண்ணதிலே வெகுநாளாய் துக்கழற்று மற்றவ்பால் வர்மமது கொள்ளையாலும் திண்மையுடன் இவைகளிலே பலதுக்காக செப்புகிறேன் எண்ணையொடு கஷாயம் மாத்திரை.

10. மாத்திரையும் கிருதவகை துவாலேப்போக்கும் வகையான நசியமுடன் துளின்போக்கும் சேர்த்துடனே ஔஷதங்கள் செய்யும்போக்கும் செய்யாமல் பார்த்தறிந்து

Digitized By Roja Muthiah Research Library

நீ விலக ஸ்தலத்தின் போக்கும் பண்பாக ஈடுகொண்ட குணத்தின்போக்கும் காத்து முறை செய்து உயிர்கருகும்போக்கும் கசடர்களை கைகொண்டு செய்யும் போக்கும்.

11. போக்காக்கால்கொண்டு செய்யும் போக்கும் பொட்டணத்தில் கிளிகள் ஊனும் போக்கும் தெளிவாகச் சொல்லுகிறன் தெரிந்துபாரு ஆக்கையுற்றுன் குருபரனை நினைந்துகொண்டு அன்னியர்தன் உயிரை உன் உயிரைப்போலும் வாக்குமனம் ஒன்றுகி நின்றுகொண்டு வர்மங்கள் முறிகாயம் எல்லாம் காணை.

12. காணவே அபகுரிகள் தட்டுமென்று கண்டாலோ அகல நீ விலகி நில்லு ஊணவே தீருமென்று நிஜங்கல் கண்டால் உத்தமே செய்து நீ உருதியாக வாள்நாள் தான் பிரியுமென்று நிஜங்கள் கண்டால், வல்லவனே நீ அருகில் சருகவேண்டாம் தூணதுபோல் நின்றி இருகுரியும் பார்த்து சூட்சமாய் யோசிக்க சூட்சம்தானே.

13. சூட்சாதி சூட்சமதைக் கண்டு நீயும் சுருக்காக விபரம் எல்லாம் ஆய்ந்து பார்த்தால் ஆச்சரியமாயிருக்கும் ஸ்தலங்கள் கண்டால் அது பெருகி குளிர்ந்திருக்கும் அறிந்து பாரு பாச்சலுடன் அத்தலத்தில் பிராண வாய்வு பற்றியே சிக்கருப்பு உயிருண்டென்றல் மாட்சிமையாய் அறிந்து நீ தலத்தில் தேரி மறவாமல் இருவினையும் வகுத்துப்பாரே வகுப்பாகப் பார்க்கையிலே படுகாலத்தில் வருமங்கள் கொண்டதென்றல் சீணம் செய்து.

14. தொகுப்பரவே பிராணகலை நாலும் சிக்கி தோன்றினதால் பிராண்னுக்கு குற்றமாகும் பகுப்புடனே சிக்கலது தீர்ந்ததென்றல் பகையான வர்மங்கள் இல்லை என்பார் நகைப்புடனே அறுத்தடைத்த வாசல்வழியணுகி நிற்கும் எட்டுவிரல் கலை எட்டாமே.

15. எட்டான கலைபுடனே பிராணன் நாலும் எகின்தால் சாறு கலையாமென்ன கட்டான சாறும் வழி எட்டாகி கருதி

Digitized By Roja Muthiah Research Library

னதால் தொடுவர்மம் தொண்ணூற்றுமும் நெட்டிடமே இது களெல்லாம் நூற்றெட்டாகி நேர்ந்ததினால் நூற்றெட்டு வர்ம மாகும் மட்டுமே இவையறிந்து வர்மம்தீர மறவாமல் வகை விபரம் அறிந்துசெய்யே

16. அறிந்து நீ.செய் களங்கமற்றுக்காணும் அரன்மூல குருபரனை மனதில் கொண்டு செரிந்தவரை நிதம்பணிய தல மும் காணும் செங்கதிரில் மதியொடுங்கி சிறப்புஞ்சேரும் அறிந்துடனே மயிர் பாலம் தாண்டிப்போக வழிகளெல்லாம் செம்மையாய் காணலாமே நிறைந்திட்ட மூலவெளிபெரும் பால் தன்னில் நேர்ந்த நல்கலை சுளியில் ஓடுங்கிக்காணும்.

17. காணுமே இருவழியாய் நின்றுலிக்குழ் கலை நாலும் சொச்சமது வழியில் நிற்கும் ஆணுவமே புக்கும்வழி ஒன்றுகூடில் அதில் மூன்று கலைகாணும் அடர்ந்து நிற்கும் பூணுகின்ற பிராணகலை நாலுமொன்றுய் புக்கினதால் படுவர் மம் பன்னிரண்டயம் வேணுமென்று பதினெட்டு வர்மமொன் றில் விபரமுடன் இரட்டையாய் வகுத்ததென்னே.

18. வந்த வகைவிபரம் இப்படியே கண்டால் மங்கைய ருக்கு குறைந்தவர்மம் பீஜக்காலம் சொந்தமென்ற இந்தவர்மம் ஒன்றும்நீக்கி தொகைகாண ஒருநூற்று ஏழாம்பாரு சந்த முறை இப்படியே இருக்குதென்று ஜடம்பார்த்துக் கூறுகண்டு அமர்த்தல் செய்து விந்தமது முறைசெய்தால் அமராதென் றால் வேறு கொண்டை காலமதால் வந்ததென்னே.

19. காயமென்றால் படுகாயம் கனத்தாடு கதிர்குலைகள் நெருங்குண்டு நிறம் மேவராகல் நேயமுடன் நூலற்று இயங்கித் தாளல் நெடிக்கு முன்னே நெட்டினிதல் கலையாய் பாய்தல் தோயமுடன் பெருவியர்வை அலர்தல் கண்டம் சுருங்கியே கழுத்துரையில் வலித்தண்ணார்தல் தூயதலை உருளல் பிரண்டுருளல் கண்விழித்து மேல்சொருகி சோரல்.

20. சிறலுடன் கைகாலால் சேட்டை செய்தல் ஜடம் வெதும்பி குளிர்ந்திடுதல் ஜடம் கனத்தல் மாறியே கருடனு

Digitized By Roja Muthiah Research Library

டைய பார்வை பார்த்தல் வழிபிசகிப்போவதற்து நடையே கொள்ளல் ஏறியே பெலனதிகம் காட்டிப்பின்னல் இடறுக தேகம் விரைத்து உளறுதல் மாறியே கடைக்கண்ணில் நீரொ லித்தல் மயங்கியே அதிமூர்ச்சை கபம் வர்த்தித்தல்.

21. வர்த்தனையாய்ப் பீஜம் விந்து கலங்கி மூலம் வலு வற்று இசைவு தளர்ந்திடுதல் கறுத்தவிஷம் போலேயதில் வேக மாகி கண்டவரை கைகாலால் உதைக்கலாகல் வியர்த்து மிகவெ ருவி குளிர்ந்திடுதல் இசை என்ற பொரி தளர்ந்து மயக்கமா தல் பார்த்து மிகச்சிரித்தல் வேர்வையும் கபமும் காட்டும் பயப் பட்டு நடுநடுங்கி மயக்கமுறல்.

22. நடுங்கி மனம் பேதலித்து மனம் கழித்தல் நல்ல கண்ணும் மேல் சொருகி பஞ்சி பார்த்தல் அடங்கிமிக நடுவணை யில் குன்மமேறல் அதனுலே ஜடம் கமிந்து நிமிராதாகல் திடங்கண்டு துயில்கேரல் பொதுமி ஏறல் சிக்கினறி குருக்கே பார்வை குத்து வேர்வை விக்கலாகல் மடமயிலே இக்குறிகள் கண்ட தென்றுல் மறுகாலம் பல விதத்தால் மாறச்செய்யே.

23. மறுகாலம் செய்திடவே கொஞ்சமாகும் மாறுமல் அதிகமென்றுல் மைந்தாகேளு விருதாவாய்ப்போம்உயிர்களது தடைபடாதுவேரிளகி பிறுணகலே வேறுமென்றுல் சர்வ தொழில் பார்த்தாலும் பலனுன்றில்லே சந்தேகம்கொண்ட தென்றுல் அமர்ந்துபாரு குருமுனிசொன்ன மொழிப்படியே சொன்னேன் கூறறிந்து இந்தமுறை கண்டுநில்லே.

24. நில்லென்ற தலங்களது, உச்சிமூக்கு நேர்கொண்ட ஸ்தலமதுதான் திவலையாகும்வெல்லென்றநடுவரியில் காட்டம் வாரி விசையான நேர்சுருக்கி கொண்டைக்கொல்லி கல்லென்ற பஞ்சவர்ணகருகே நடுவாம் கதில்கொண்ட வெள்ளீரல்வாரி எல்லாம் சொல்லென்ற தொண்டைநடுப்புறகேயாகும் சுகமான பித்துக்காய்ரெண்டின்பக்கம்.

25. பக்கமென்ற மணிபந்தம் எட்டெலும்பின் மத்தி பகரும் உள்ளங்கையுடனே காலுமாகும்அக்கமென கதலிவளம் நெருங்கலாகி ஆவினென்ற மூச்சடங்கி அத்தலமில்லாமல் சிக்

Digitized By Roja Muthiah Research Library

கெனவே மேல்கீழும் வாசியாகல் திரமானவாரிமேலெலும்பு தோள்தல் பக்கமென்ற அதினடுத்த பூணெல்தாள்தல் பதிந்த நடுஇசையணை அசைந்து குன்மமேறல்.

26. அசைவான நாசியது மூலஞ்சேரல் அதனலே மூங்கில் வட்டம் விரிந்து தோன்றல் கசையான குண்டெலியில் உளைமையான கதிர்மூலம் மேல்சென்று பதிந்தங்கொட்டி விசையான கைத்தரிக்கோல்விசை கொள்ளாமல் மேல்வாசல் விசையற்று தளர்ந்துகோணல் அசையாமல் நின்றசையும் விசை தளர்ந்து அரைக்குக்கீழ் செத்தசவம்போலேயாகல்.

27. ஆகவே இதுமுதலாய் குறிதலங்கள் அறிந்து நீ கூடியதுமட்டும்பாரு பாகமாய் செய்தாலும் பலிக்காதென்றால் பண்பாக விலகிநீ அகலநில்லி தோகையரும் நீ வந்தகள் செய்தா யென்று சொல்லுவாரென்று கண்டால் அதன்றுபாரு வேகமரிந் திப்படிச் செய்வாயென்று விளம்பிநீ வேரே ஆள் பார்க்கச் சொல்லே.

28. சொல்லுகிறேன் கனத்தஅடிகொண்டு அங்கம் கொதுவியே அறிவற்று துவண்டு காணல்வெல்லாமல் அடிகொண்ட காயத்தாலே வேகித்து பஞ்சகர்த்தன் நிலைதளர்ந்து பல்லுயிர்க்கும் தாகை யிருந்தானதம்பம் சரித்து நிலைபிசகிப் போனதாலே அல்லுபகல் மூன்றுதினம் கடருமாகில் அவரு யிரும்தோஷமில்லை அறிந்துசொல்லே.

29. குண்டெலி முரிவு அறிவானஅசைவென்ற குணடெலியின்பாகம் அணைத்திருக்கும் குண்டுமெண்டும் விலகுமாகில் சாயாமல் காலுமெண்டும் ஒன்றுய்சேர்த்து மட்டுமேவே முட்டுமெண்டும் ஒன்றுய்க்கூட்டி பிரியாமல். குண்டுமணிக் குண்டிலானுல் புரம்போகா கசைவரிந்திருக்கிக்கூட்டி உருதியுடன் நடுவரியில் சதுரப்படுத்து உத்தமனேதாக்கி விரல்தன்னே கூட்டே.

30. கூட்டியே இந்தநிலை கலைவில்லாமல் கருதியே முறிவெண்ணை கதிக்கத்தாக்கு மட்டுமேவே தொண்ணூறுநாட் சென்றுக்கால் வசவெண்ணை தாக்குவாய் என்றமட்டில் திட்ட

Digitized By Roja Muthiah Research Library

முடன் எண்ணெகொண்டும் ஒன்றுப்கூட்டி- செலுத்துவாய் மண்டலம்தான்செல்லுமட்டும் மட்டாகவந்ததென்றால் நன்மை யாகும் வலிவிலகி நிற்குமானால் தின்மையாமே.

31. மணிபந்தம் முறிதல் என்றுமேலா மணிபந்தம் விலகி ஏகயிதமாக நொருங்குண்டு செவ்வோடேகில் நன்றுக கண்விலகிப்போகுமென்றால் நலமான ஐந்துவரி எலும்பின் பின்னே நின்றிசையும் பேரெலும் போடதனைஒப்ப நிசமான புனையதனில் தாக்கிக்கொண்டு குன்றுமணி ஐந்துமதை பற்றச்செய்து குறையாமல் அச்சிரண்டும் ஒன்றுய்ச்சேரே.

32. சேரேநீ அச்சதனைப் பூணைக்கட்டி- சிறுகடுகும்விலகா மல் செலுத்திவைத்து நீரதிகம் கொண்டுதானால் சேராவண் ணம் நிசம்கண்டு துவாரமிட்டவழிகளெல்லாம்பார் அதிகம் நொருங்காமல் பஞ்சுசேர்த்து பண்பான முறிவெண்ணை தாரை செய்து சீரேநீ மூன்றுநாள் கூடிப்பார்த்து சிறப்பாக தொண் ணூறுநாள் சென்றுக்கால்.

33. நாள்சென்றவுடன் வசவுஎண்ணைதாக்கு நலமான மண்டலம்தான் கழிந்தபின்புதான் திறந்துஅச்சதனைவிலக்கிப் போட்டு தயவாக கையதனல் இதமும்செய்தால் வாள்முருகர் கிருபையினல் நன்மைகாணும் வழிமறந்தால் தின்மையது வந்துசேரும் நிகள் வழியாய் இந்தமுறைசெய்துகண்டால் நிலை பிசகிப்போகாதுதிடம் கண்டாயே.

30. திடம்காணும் இந்தமுறை அசைவுகெட்டில் சீனி முறிந்திட்டாலும் சவ்வற்றாலும் உடவுதவறாநிலையாய் மன முறைத்து ஆக்கையற்றுப்போனாலும் கண்டுசெய்ய மடமயிலே குருபாதமறைவாய்நெஞ்சே மற்றொருவர் அறியாமல் தியானம் செய்து கடன்துலக்க இப்படியே வந்ததென்று கருதியேமன முரைத்துக்கண்டுசெய்பே.

35. முட்டுநகண்டால் கண்டுநீ செய்திடவே இன்ன மொன்று கடுமையாய்முட்டுநகண்டுவிட்டதென்றால் மண்டான சிட்டையது சவ்வற்றேகி மறுபுரத்து சவ்வகன்று விசை

Digitized By Roja Muthiah Research Library

கொண்டிட்டாக்கால் கொண்டாலோ பீள்வதற்கு அருமை யாகும் குதிங்காலில் நரம்பற்றால் இதுபோலாகும் பண்டான பெருவிரலும் இதுபோலாகும் பகர்ந்த உட்புறமதுவும் இது போலாகும்.

36. பிட்டி நடுஆகுமே மூணும் கீழ்தாரைக்குள் அடி கொண்டு விசைதளர்ந்து வரிகெரிந்தால் வாகுபெற முறி வெண்ணை தாரைசெப்து வகுப்பாக கீழ்மேலாய் அலகை யொட்டி பாகமுடன் அணைவழியே கச்சைகட்டி பதித்திருத்தி கையதனால் இதமும்செய்தால் வேகமுடன் நொறுக்கெலும்பு சரிபாய் கண்டால் விபரமாய் வசவெண்ணை தாக்கத்தீரும்.

37. வாரிப்பூணெலும்பு முறிந்தால் தாக்குவ்வாய் நடு வரியில் வாரிப்பூணுதானே அற்றுநொருங்கியது முறிவுகொண் டால் போக்குமுயிர் மீழ்வதற்சருமையர்குரும் பொன்னெட்டி நாலுவிரலுள்ளேகொண்டு தாக்குமே நெட்டதுவும் கவுழ்தல் கண்டால் தானவனுய் பலபாகம் செய்திட்டாலும் நீங்குமே உயிரதுவும் உடலைவிட்டு நிசமாகவிலகிநீ அகலநில்லே.

38. நிசமாகும் கதலிவனத்தீடுகொண்டு நீளசைவு பில னற்று விசைதளர்ந்து வளமான தசவாய்வு வெதும்பல்கொண்டு வாகுபெறவெருவி அனல்குளிருமாகில் கபமான கடமூர்ச்சை வேர்வைகண்டால் காலனர் உடன்வருவாரென்று நீயும் குட மாக மருந்து பலவிதம்செய்தாலும் கூண்ட உடல்விட்டு உயிர் கடரும்தானே.

39. ஓடிந்தால் கட்க்குமந்த ஆக்கிரணப்பாலம்தன்னில் கனத்தஅடியால் குருந்தில் சோரைகொண்டு சடமெரும் பிர பாலமதில் வீக்கம்கொண்டு செவ்வையின்றி பலவழியாய்பேசக் கண்டால் மடமயிலே மீழ்வதற்கு அருமையாகும் மருந்துபல செய்தாலும் அதிகம்கண்டால் திடம்பேசிசெய்யாதே அகன்று செல்லே ஜெயம்வருமோ எப்படியோ என்றுசொல்லே.

40. எப்படியும் கபாலமது சதையுண்டாகி மூர்ச்சையாகி எரிட்டு எழுந்திருந்து தளர்ச்சைகண்டாலப்படியோ இப்படித்

Digitized By Roja Muthiah Research Library

தான்வருமோ என்று ஆராய்ந்து திட்டமறிந்தகன்றுசெய்யே செப்பமுடன் கதலிவனம்பாரா ஈடுசினங்கொண்டு மூச்சயர்ந்து கவர்ச்சைகண்டால் மப்பதிகம் கபம்விக்கல் மூர்ச்சைகண்டால் மரணம்வருமென்று திடம்வகுத்துச்சொல்லே.

41. சொல்லுகிறன் கைப்படிஜத்தில் ஈடுகொண்டு சூட்சமாய் சிப்பியதுதாழ்ந்துபோனால் வல்லிதுகைமுறையாய் மருந்தாரியும் வலுத்திருத்திவைத்தாலும் உரையாதென்றால் வல்லுகின்ற கால் வெள்ளைப்பதிவில்தாக்கி விளங்கவே கையதனல் பிடித்துச்சேர்த்து நில்லெனவே தலம்பதியவைத்துக் கொண்டு மேரானவில்லதிலே நானு பூட்டே.

42. பூட்டியே முன்வசத்தில் குருக்கேதாக்கிபோற்றியே பந்தத்தினப்பதியச்செய்து தாட்டிகமாய் மறுதோளில் தாக்கிக் கட்டி சரியாக முன்தோளில் ஆப்பிள்வைத்துகட்டியே முறி வெண்ணை கழிக்கத்தாக்கு ஈட்டியே புரமுறிவால் மூன்றில் பாரு இல்லாவிட்டால் ஐந்துநாள் கூட்டிப்பாரு.

43. ஐந்துநாள் கூட்டிப்பார்த்திதங்கள்செய்து அடவாக மேதாண்ணூறுநாளும் சென்றால் மஞ்சவே வசவெண்ணை மண்டலம்தான் கூட்டிப்பின் கையிதம்செய்துஞ்சலுற்ற சவ் வுணர்த்துப்பற்றிப்போகும் சுகமாகையதிலே எலும்பும்சேரும் நஞ்சுண்டசிவனர் தன்னருளினாலே நல்வழியாமீ துரைத்து நாடிச்செய்யே.

44. நாடியேமுளங்கையில்பிலமுரைத்து நன்றாக முட்ட தினுள் விசைநம்புதா னேரிச்சாடி முழுங்கைகலும்பு முட்டை விட்டுத்தான்வெளியில் சாடிவிசைகாண்டதென்றால் கூடிய மட்டும் உள்செலுத்திணலும் கூடாதுளன்றுகண்டால் ஆடியே கால்வெள்ளைப்பதிவிலற்றி அகங்கையால் பிடித்திழுக்க முன் போலாகும்.

45. முன்போல ஆக்கியதை தாக்கிவிட்டு முடுகியே பிறதனை பதியச்செய்து பொன்போலே நாணேற்றி விசை முடுக்கிபொரியாகஅகற்றல்படு நீக்கல்செய்து தன்மயம்போல்

Digitized By Roja Muthiah Research Library

முறிவெண்ணை தாரைசெய்து தான்பிலத்தால் வசவெண்ணை தீக்குவாய்நீமுன் நிதம்போலாகுமடா பல்மும்காணுப் முளிச் சலத்தைப்பாராமல் தெளிந்துசெய்யே.

46. தெளிவானகவளியது கிரல்கொண்டு சினமான காலமதிலுற்றுக்கொண்டால் பழியாக ஒருமேவளவந்துசேரும் பகர்ந்த இடையின் கலைதான் நீங்கிக்கொண்டால் வெளியான முறிவெண்ணை கழிக்கத்தாக்கி வேண்டியதோர் விரலதனை மட்டாய்கட்டி அழியாதபடி இதமாய் செய்துகொண்டால் அசடொருநாள் வாராதென்றறிந்துபாரே.

47. அறிந்திருந்தால் விரலின்மத்திகிரி அகங்கையில் வர்மம்தான் விசையாய்கொண்டால் சிறிந்திருந்தகாச்சலொடு குளிரும்காணும் செயலான வியர்வைகபம் சீதம்தோன்றும் அறிந்திருந்த அறிவையெல்லாம் குறைத்துப்போடும்அடவாகப் பலவிதமாய் கோட்டிசெய்யும் பிரிந்திடும்கான் உயிரதுவும் உடலைவிட்டு பிளையாதகுறி இதனைப்பேணிப்பாரே.

48. பேணிப்பார் தோள்புஜத்தின் நெட்டிதாழ்ந்து பெலத்தேராதிருந்துகொண்டால் சொல்லக்கேளு உடனே வில்லில் நாணேற்றி உத்தமனே கூட்டில்பந்துசேர்த்து கதிப் பாகமுறுக்க ஒருகச்சைகட்டி தோணப்பா முறிவெண்ணைகதிக் கத்தாக்கி தொண்ணூறு சென்றவுடன் கையிதம்செய்யே.

49. கையிதமேமசெய்து வசவெண்ணைதாக்கு கதிப்பாக முட்டதிலே நாளைத்தாக்கு பையவே "மறுதோளில் தாக்கிக் கெட்டிவை இதமேமசெய்து கொண்டால் நன்மையாகும் வகுப் புடனே இந்தமுறை வருந்திச்செய் நீசெய் இதமே கொண் டால் நன்மைகாணும் ஜெயமாகும் இந்தமுறை திட்டம்பாரே.

50. பார்த்திடுநீ வாரிளலும்பு முறிந்து தாழ்ந்தால் பதி யான நிரப்பிலே குழிதோண்டி சேர்த்திடுவாய் முறிதலத்தை நடுவில்சேரவே மறுபுறத்தை நிரப்பில்தாக்கு போற்றிடுவாய் இருபுறமும் உருட்டிநீக்க பொன்போலே எலும்பதுவும்சேரும் கண்டாய் ஆறந்தவிதமிறிந்து உடனே பற்றையிட்டு அறிவாக முறிவெண்ணைதாக்குவாயே.

Digitized By Roja Muthiah Research Library

51. தாக்கிடு நீ எண்ணெயது குறைவில்லாமல் தன் கையாலிதப்செய்ய சுகமே காணும் ஊக்கமுடன் பூணெலும்பு ஒளினம் தாழ்ந்தால் உண்டாகிமுறிந்துடனே தாழ்ந்தென்ன் றால் ஆக்கமுடன் முன்போலே அடவுசெய்து அணைத் துருட்டிமருப்புமும் தாக்கப்பாரு நீக்கமுடன்செருமியது முன்பாகத்தை நிசம்கண்டு செய்துவிட விணையற்றேறகும்.

52. எகியே அலைவதிலே அதிகடமாகி இதப்பிணைத்து கெட்டியது நின்றுகொண்டால் வாகுபெறவசவெண்ணை புறம்பும் உள்ளும் வார்த்துபின்னங் குசவ்வையகற்றி நீக்க தோகையமே முன்போலே ஆடிநிற்கும் சுகமாக குருவருளை நாடிச்செய்தால் ஆகுமடாநீநினைந்து அவரிடத்தில் அன்பாக க்கேகட்டறிந்து அருளைப்பாரே.

53. அருளான எலும்புமுரி வெளிவிட்டேகில் அனந் தரிய ஆறுவிரலுக்கதிகமாலை வெருளாமலிருந்தாலும் நிஜ மாகாது வெளிப்பட்டதுள் செலுத்தச் செல்லாதென்றால் மருளாக்க குறுகினதை அறிந்துகொண்டு மாத்திரையாய் மாமிசத்தைக் கீரிப்பின்னே பொருளாக உட்செலுத்தி வைக்கவென்றால் புத்திரனே தலங்களிலைபடுமென்றால்நீ.

54. படுகாயம் கொள்ளாமல் அகலநீக்கி பண்பாகக் கிரியதை உள்ளதாக்கி நடுவான காயம்முறிகலத்தில் நன்றுக விணைமுற்ற இடங்களெல்லாம் விடுவதிகம்சாறுமல் இடை வருத்தி வலிக்கண்டுகெட்டதிகம் நெருங்காவண்ணம் நடுவரி யாம் இடைபின்னில் அலவு சிகிளி நல்வழியாம் அதில் நெருங்கப்பற்றிடமேல்.

55. பற்றுமல் அற்றசவ்வு விலகிடாமல் படித்திருக்க முறிவெண்ணை உள்ளே தாக்கி பற்றுன இடங்களிலும் எண்ணை செல்ல வழிகண்டு முறிகாயம் ஆறிப்போனால் வெற் றுன முறிவெண்ணை நிறுத்திப்போட்டு போடுவாய் வச வெண்ணை காலம் கண்டு வேண்டியதாய் செலுத்தி முன்கை யிதமும் செய் நீ தெற்றுமல் தீருமடா கோடிக்காயம் நிறை நிறைந்தும் புவனம் எல்லாம தெளியும்தானே.

Digitized By Roja Muthiah Research Library

56. தெளிவான பீஜவித்து மேலேறி திசைபிசகி வலம் இடமாய் நின்றுகொண்டால் வழியான துறைகளெல்லாம் பார்த்தாலும்தான் வந்திறங்கி நில்லாவிட்டால் வந்து மேலே எளிதாக மேல்புரத்தில் பக்கம்பற்றி இரண்டு கையில் எட்டு விரலால் பிடித்து குழியான மேல்குழியில் பெருவிரலால் குவித்திறக்கு அசைத்தெடுத்துக்கொண்டு சென்று.

57. சென்றுகொண்டு விட்டுநீ முன்பக்கத்தில் சிறு கச்சை கத்தரிக்கோல் போலே கட்டு நின்றுடும் நீர்களெல்லாம் சுண்டிப்பின்னே நீர்நிலைத்து நின்றிடாமல் அன்றுடம்தான் ஔஷதங்கள் செய்திடுநீ அன்புரைத்தால் மீள ஒன்றும் செய்ய வேண்டாம் நின்றுடும் குருபாணி நினைந்துகொண்டு நினைகெட்டுப் போகாமல் தியானம் செய்யே.

58. தியானமது மனமதிலே மறவாவண்ணம் செபித்திடுநீ பரமகுருவருளினுலே ஜெயமுனக்குத்தந்து வரமளித்து நிற்பார் செய்வதெல்லாம் பலவிதமாய் வாய்க்கும் கண்டாய் கயமான கண்காணுதிருந்திட்டாலும் கண்ணுன அருள் மனதில் கண்ணுல் காணும் நயமான இவ்வழியே முன்னிட்டுச் செய் எமன் வரினும் பயமில்லே நளினம்காணே.

59. நளினமென்ற உச்சி தன்னில் பாரடு நன்றுக அதினகத்தில் முறிவுகொண்டால் வழியான தட்டல் முட்டு விசையாய் கொள்ளல் விதமான மாத்திரைக்குமிஞ்சிக்கொள்ளல் வழியான அதின் நடுத்தலத்தில் கொண்டுவாகித்து நெருக்கமுற்று செருமிக்கொள்ளல் அழிவுகண்டு பாகமதாய் முறைகள் செய்தால் அடுக்காது என்று அகலநீங்கே.

60. நீங்கிடும் நீ படுவர்மம் பதினெட்டுக்கும் நிலையான தொடுவர்மம் தொண்ணூற்றுறுக்கும் வாங்கிடுநீ தலங்களெல்லாம் அறிந்துகொண்டு வகையறிந்து செய்தாலே நன்மையாகுப் அங்குநின்ற இடைபிங்கலே சுளிமுனையும் அறிந்ததெனில் வழியறிந்து தேர்ந்து செய்தால் பாங்குபெருமிவ்வழிகளெல்லாம் வேறே பலவழிகளுண்டாகும் என்றுகூறே.

Digitized By Roja Muthiah Research Library

61. கூறுன ஈறுறு கலையின் மார்க்கம் கூறயிலோ ஓனி யாகி வெளியும் காணும் ஈறுனகலை நாலும் பரத்தின்கூறும் இதனடுத்த நாலுகலை சிவத்தின் கூறும் மாறுகின்ற நாலுகலை சத்திக்கூறும் வகுப்பான பரமகுரு தீபமாளர் மேவுறுன சிவ கிரிதான் தந்தையாச்சி வெளியான, சத்திகலை வன்னி யாச்சீச.

62. வன்னியென்ற சத்தியவள் தாயுமாலுள் வகுப்பான சிவகிரிதான் தந்தையாச்சு சென்னி தீபப்பாதமனுர் செழிப் பான நாதமது உயிருமாச்சு கன்னியென்ற தாயவளும் சலத் திலாளுள் கதிப்பான சலமதுவும் பிருதிவியாச்சு இன்னமுமே பிருதிவியது அப்புமாச்சியே கலந்த இருப்பிடமும் மண்ணு மாச்சீச.

63. ஆச்சப்பா மண்ணதுவும் அண்டத்தாச்சி அண்ட வென்ற பிரம்மதலம் பரத்துள்ளாச்சி வாச்சப்பாபரம்தானுய் நின்றவாறும் வழுவாத யோனிகருதோற்றம் எழும் நீச்சப்பா இதனுள்ளும் புறம்புமாகி நினறணுவுக்கணுவான நிகரில் லாளை ஆச்சரியமுணர்ந்து மனமுருகுப்போது அறியாத தொன்றுனக்கு அதனுங்தேதறே.

64. தேறுகின்ற குருபரனை நினைத்துத்தேர்ந்து தெளி வாக ஆராய்ந்துதலத்தைக்கண்டுகூறுகின்ற மயக்கமதைதீக்கித் தள்ளி குருபரனை உள்கொண்டு குறித்துப்பாரு வறுகின்ற சரமதனை அடக்கினுக்கால் எல்லாமும்இதற்குள்ளாய் இருப்பு மாகும் மேவறுகின்றவிலாலே சுவாசம்பாரு விளைவான ரவி மதியின் பலத்தைப்பாரே.

65. பாரென்றநாடியை நீ தேர்ந்துபாரு பத்தென்ற தசைநாடிதன்னைப்பாரு சீரென்றவாதமது மிஞ்சிக்கொண் டால் திறமாகும் கதிர்மதிவியின்கீழே வீரென்ற பித்தமது மிஞ்சிக்கொண்டால் விரைவாக உந்திடுதல் கண்டம்மட்டாம் கார்என்ற சிலேற்பனம்தான் மிஞ்சிக்கொண்டால் கண்ட முதல் உச்சிவரைகாணுமம்மட்டே,

Digitized By Roja Muthiah Research Library

66. மட்டுமிட்டுமூவருமே சிதரியுத்தம்ஆனுலே ஒளி குன்றைங்காலே இருளுமாகும் விட்டுரெண்டு நாடியொன்றுய் இசையுமாகில் விசையாக இருஸ்தலத்தில்ஈடுகாணும் கட்டு விட்டு மூன்றுமொன்றுய் தொந்திப்பானுல் கபமேவ்வைசித மொடு ஜன்னிமூர்ச்சைதட்டுவிட்டு சண்டைசெய்வேவார் ஆர்தானென்று தானறிந்து சயம்பிடித்தோர் என்றுகூடே.

67. கூடியே மூன்றுமொன்றுய்கூடி பதுங்கினலும் குரூரமாய் சாடியதுமோதினலும் ஆடிநின்றபித்தமது நிலை விட்டார்லும் அதனுலே அபகுறிவந்தணுகும்பாரு தேடிநின்ற வாதமது சிலேற்பனத்தேதறில் சீதமொடு கபமேவ்வை சன்னி விக்கல் ஓடிநின்றஜயம துவாதத்தேரில் உற்றபல அபகுறிகள் உறியாமே.

68. உறுதியுள்ளவாதமதில்சிலேற்பனம்சேரில்உறைப் பானபித்தமதின் வாதன்சேருதல் இருதியுள்ள கபமதிலே பித்தம்சேர்தல் இசைந்தகபம் பித்தமதிலுற்றுச் சேர்தல் குறியிதுநீகண்டாலோ மருந்துசெய்நீ குணமானபித்தநிலை குறைந்திட்டாலோ அருதியாய்உடல்ள துவும் உயிரைவிட்டு அம்பரத்தில்போற்றுமென்று அறிந்துபோற்றே.

69. போற்றிநின்ற நாடியது பின்பக்கத்தில் புகழாக விலகியது நடக்குமாயின் மீறிநின்ற குளிர்சுரங்கள் மயக்கம் மூர்ச்சை மிகவாகதன்பாகம் அருள்காணும் தேதற்றிநின்ற நாடியது முன்பக்கத்தில் தொடர்ந்துநடைகொண்டாலோ கடினமாகும் சாற்றினதோர் விசைநரம்பின்வழியேசென்று சாடிநிற்கும் கபாலம்வரை மயக்கம்தானே.

70. மயங்கிநின்றநாடியது கபத்திலுற்றுட் மாறியக் கரையேறிசாடிமோதில் பயங்கிலேசமுற்றதிக கடினமூர்ச்சை பறந்தேதறி விக்கல்கபம் சன்னிதோன்றும் நயமாக மருந்துபல விதம்செய்தாலும் நாடியதுகோபமுற்று மிஞ்சிக்கொண்டால் ஜெயம்வருகாதொருநாளும் மீழாதென்றே செப்பினர் மலை முனிவர் ஜெகத்துள்ளோர்க்கே.

Digitized By Roja Muthiah Research Library

71. உள்ளபடிவாதமொரு பங்கதாகி உற்றபித்தம் அரைபங்குசிலேற்பனம்காலாய்கள்ளமற்றுநடைகொண்டால் பிணியொன்றில்லை கண்டுகொள்ளீ வன்னியதுமிஞ்சிக்கண் டால் பள்ளமேமடிவ்லாத வண்மையறிந்துநீயும் பாங்குடனே முப்பொருளையாய்ந்துகொண்டு விள்ளுகின்றநாடியதுவன்னி வாதம்பிருந்திருக்கும்வாசி வட்டநாடிகாணே.

72. வட்டமடாமூலமென்ற குண்டெலிக்குள் வகுத் திருக்கும் சிவகலைமேலேசாடிவிட்டதிரல் பஞ்சவர்ணத்தூடு தாண்டி அட்டதிசையிலூடாடி சாய்ந்து அம்பரத்தில் பாய்ந்துமிக அடங்காநின்று கட்டாதகாளையடா அதனைக் கட்ட கதிர்திரைக்குள் சந்திரனைக் கண்டிப்பாரே.

73. கட்டிநின்ற இடகலையின் மார்க்கம்கேளு சுருது கின்ற வலக்கால்பெருவிரலைத் தொட்டுநின்று குதிங்காலில் விசைகொண்டேகி தொடுத்துநின்ற கத்திரிக்கோல்விசையில் புக்கி மட்டுமே இடதுபக்கம் சாய்ந்து மேலே வகுப்பான செவிக்குற்றி மேல்பக்கத்தில் திட்டமுடன் சுற்றியந்தபிடரி புக்கிடமான இடதுகாதுள்ளூடாடி.

74. ஊடாடி அசைவுபுக்கும் வழியுமாகி உள்ளசபை ஆக்கிராணைவழியேசாடும் கூடாதபின்கலைதானிடது காலில் குறிகொள்ளும் பெருவிரலில் குதியிலுற்று ஆடாத கத்தரிக் கோல்விசையில்நின்று அணைத்திளகி வலதுபக்கத்துள்ளூ டாடி நாடாதகபாலம்வரை சுற்றுமீழ நளினமுடன்சுற்றி யந்த அசைவுகெட்டில்.

75. அசைவுவழி கட்டுண்டு பெருவிரலில் அணைந்தி ருக்கும் பின்கலை என்றறிந்துபாரு நிசமான சுளிமுனைதான் மூலக்குய்யம் நின்றிலங்கும் கத்திரிக்கோல்நடுவிலுற்று வச மான குறுக்கெலும்பில் முன்பக்கத்தில் வகுத்திருக்கும் நடுத்தாரைவழியாய்ஏறி குசமாக மதிவளரும் தலத்தில் புக்கி குய்ய முனையாயிருக்கும் குறித்துப்பாரே.

76. குறியாகமயங்கும் காரணமேசொல்வேன் குறிப் பானகாலங்கள்கொள்ளும்போதுகூறி நடனம்புரியும் விசை

Digitized By Roja Muthiah Research Library

தளந்து குறிப்பான நாதவிந்து விசைவிட்டேகி பாரிநின்ற பிராணகலை சிக்கல்கொண்டு பொரியான பஞ்சகர்த்தா நிலை பிசகிப்போனதிலும் அறிவிழந்து மயங்கிப்பின்னும் மறுத்து வந்து பிராணகலைநாசிமுனை முட்டிமட்டாக நின்றதனல் உணர்வுண்டாச்சு.

77. உணர்வாகச்சொன்னபடி தன்னைத்தேர்ந்து உரை யாதவலிகளையும் ஆய்ந்துபார்த்து புனையானதைப் பலஉணர் வாய்செய்து புகலாதபாதைகளை செவ்வைதேரி குணமாகச் சொன்னவகையல்லால் வேறுகுறிதலத்தில் அடிகாயம் கொள்ளுமாகில் சினமான இருவழியும் ஆய்ந்துகண்டு செய் திடுநீ மருகாலம் ஜெகத்துள்ளோர்க்கு.

78. காலமதுகொண்டெழும்பும்போதுகேளு கடின முற்றுக்கொண்டதென்றல் குணங்கள்மாறும் சீலமுடன் ஒத்தபடிகொள்ளாதென்றல்செணமாக வெகுவான குணங்கள் தோன்றும் ஆலவிஷம் ஏறுவதுபோலகண்டால் அமர்த்தி னல்அமராதே இருந்ததென்றல் ஞாலமதிலொருபோதும் மீழாதென்று நாட்டினர் மலைமுனிவர் நகருள்ளோர்க்கே.

79. நகரானஉலகத்தில் நவிலார்சூட்சம் நன்றுகசூட்ச மத்தை ஆய்ந்துதேரி சுகமான நன்மைதின்மை அறியவல்லார் சுகிர்தவரம்தனைப்பழித்த நிந்தையாறும் அகமறியாதாங் காரம்கொண்டு அம்பரத்தைக்கணியாத அசடர்கம்மை சுகமாகஎண்ணினதால் அபத்தம்வந்துசருகாமல் அவரிடத் தில் சாருந்தானே.

80. தானேகேள் ஒருநாளும் பரத்தைக்காணன்தன் குருவாமென்றவரை சார்ந்துநில்லான் ஊனேதானெரு நாளும் உயிரும்காணன் குவலயத்தில் யாருமெதிர் இல்லை என்பான் நானேதானென்றுசொல்லி பணம்பறிப்பான் நானிலத்தில் உள்ளவரை நெகிழ்விப்பானே.

81. உள்ளபடி நூற்று எட்டுத்தலமும் கண்டால் சாவாகும் உணர்வாகும் அத்தலங்கள் உயிருமாகும் கள்ள

Digitized By Roja Muthiah Research Library

முற்றல் அத்தலங்கள் பிணியாகும் களங்கமற்றல அத்தலங்கள் சுகமுமாகும்உள்ளுணர்ந்தால் அத்தலங்கள் வாசியேறல் உற்ற தினல் மயக்கம் வந்துசேரும் புள்ளடிபோல் அத்தலங்கள் கண்டபேர்கள் புகலார்கள் ஒருநாளும் புவியுள்ளோர்க்கே.

82. புகலாத தலங்களது மாத்திரைக்கு பூரகமிஞ்சி யது கொண்டதென்றல் சுகமுறவே ஒருபோதும் மீளாதா கும் சுளியிடையின் நடுவழியே காயமேறும் அகமற்யா தாங் காரம் கொண்டுபேசும் அசாத்தியமாய் முடியுமிது அறிந்து பரமே.

83. முடிவான அத்தலங்கள் எல்லாம் வேறே முன் பின்னுய் முறிவீடு சதவு வெட்டு அடியான குத்துடனே மொழிவிட்டேகல் அசைவற்றல் சவ்வற்றல் ஊர்கைதற்றல் வெளிகாயம் உள்ளுடையு மொளிசெருபல் வேறுபட்டுப் பல விதமாய் நின்று கொள்ளல் இடைபிங்கலை சுளி மூன்றின் வழியாய் ஏறி இடைநாப்பு சுளுக்கல்கொண்டு நின்று கொள்ளல்.

84. கொள்ளவே இதுமுதலாய் பலம் கைக்கும் குண மான பரமகுருவினருளே வேண்டி மெள்ளவே கொண்டுற்ற விதங்களாய்ந்து வெகுளியற்று மனக்கண்ணை திறந்துகொண்டு பள்ளமே யதிலிறங்கி ஏறிப்பார்த்தால் பருவமாய் முன்பின் னும் பாதை நீக்கி விள்ளாத பாதைவழி வகிமீழ்க மிதமான அவயவத்தின் வாறு காணே.

85. வாறுகண்டு புனைதாக்கி கெட்டும் வைப்பும் வகை யான அகற்றலொடு நெடுக்கல் கொண்டு ஈரு முதல் நடுவான இடங்கள் கண்டும் இடமில்லா தலங்களிலே புனைகள் கண்டும் தீதறுதலாய் மனக்கண்ணை திறந்துகொண்டு தேறுக வந்து தென்றல் மாறிக்கொண்டும் கூருகளின் வகை கண்டு செய்து நின்றல் குணமாகக்காணுமது குருவினுணை.

86. குருவான பரமகுருவினருளிலே குறைவர்மம் செய்தவரை சென்று கண்டால் கருவான குணம் காணும்

Digitized By Roja Muthiah Research Library

இளக்கமானுல் காணவே மட்டாகக்கொண்டதென்றுல் வெரு ளாமல் இளக்கமாம் குறிகள் தானும் வேற்றுமையாய் மாத் திரைக்கு மிஞ்சிக்காண்டால் பொருளாகக் குறிகளெல்லாம் பேதமாகி பேதமது வேகமதாய் வாரிக்கொள்ளும்.

87. கொள்ளுமே அத்தலங்கள் முறிவுகொள்ளல் குணங்களற்று அவகுரிகள் காணும்பாரு விள்ளுமே தூர்க்குறி கள் மிஞ்சிக்கொண்டால் விதமாக அசாத்தியமென்றறிந்து நீங்கு கள்ளமாய் குறிகளது மிரட்டாய் கண்டால் கடரும் நாளித்தனை என்றவதிசொல்லு தெள்ளுகின்ற வழியறிந்து பாகம் செய்தால் சினத்துடனே அபத்தம் வந்தணுகா தென்றே.

88. என்றிடவே வாசியதிலுற்றுக்கொள்ளில் இதமா கும் காலமது தண்ணீரானுல் சென்றிடவே வாதமதில் கடி னம் முப்பத்தாறும் திங்களதி வன்னியதிலுற்றுக்கொள்ளும். கொன்றிடவே காற்றேறு தியுங்கூடி கொதிப்பாகும் சிலேற்பனமது மிச்சங்கேளே.

89. மிஞ்சுமே புனல் தியும் காற்றும்கூடி முளிப்பான சுளிமுனையில் வினைதான் கொண்டால் தஞ்சமில்லை ஒரு நாளும் மீளாதப்பா. சாற்றுகின்ற காலமது வன்னி என்றுல் அஞ்சலென்ற மூவிரண்டு ஆறுண்டுக்குள் தூரிசமாய் சேர்ந்து விசைகொள்ளும்பாரு அஞ்சலுற்ற காலமது வாசியானுல் அதனுலே மூவாண்டுக்குள்ளே சாவாம்.

90. சாகாமல் மிஞ்சிடாமல் கொண்டதென்றுல் சமர்த் தாக இருந்தமுரை சரியாய்க் காணும் பூவாகி யிருந்ததாலே புகலுவாயொன்றரை என்றறிந்துபாரு மேவாமல் அதிகமுற் றுல் அரையரைக்கால் மேதினியோர்க்கிந்த முறை மெய்யாம் பாரு. ஆவலது மிஞ்சியந்த வழியறிந்து அன்புடனே கூடி யது மட்டும்பாரே.

91. பாரேநீ அக்கினியிலுற்றுக்கொள்ளில் பதிவான காலவது தண்ணீரானுல்சமேநீ மூவாயதிங்கள்சென்றுல்

Digitized By Roja Muthiah Research Library

சினமாக அக்கினியிலுற்றுக்கொண்டுபாமேநீ வாசியிலுல் கூடிப்புக்கி வழுமான மும்மூன்றுதிங்கள்சென்றால் கூமேநீ ரூப்பொருளு மொன்றுமாகும் கூடியேகொள்ளுமொரு திங்கட்குள்ளே.

92. உள்ளான தண்ணீரில் உகந்துகொண்டால்உடனக் கினி தண்ணீர் கலந்துபுக்கிவிள்ளாதே பரிசமது நோய்க் குள்ளாகிவெளியுருளில் ஒருபோதும்சுகமுறுமல் கொள்ளாத நோய்களெல்லாம்உடனேகொண்டு கொதிப்பாகி உயிருடலை நீங்குப்பாரு கள்ளமுற்றுக்கொண்டுமுன்னே அபிஷேகித்து காலமது நீக்கும்வகை கருதிப்பாரே.

93. கருதுகின்ற வாசியக்கினியைச்சேர்ந்து கலந் துணைந்து மூலக்குண்டலியினுள்ளேவெருவிநின்ற தண்ணீரு மிடைகோணத்தில் வீற்றிருக்கும் சந்திரபுஷ்காணிக்குள்ளே அருளானென்ற ஆகாயம் கருவுடாகி அடர்ந்திருக்கும் சதா சிவத்தின் மகிணன்மணிக்குள் உருகிநின்ற வாசியின்வீடறு கோணத்தில்உற்றிதாரு அக்கினிமுக்கோணத்தில்தானே.

94. வாதபித்தசிலேற்பனகாலம் அமிர்தபுஷ்காணிக்கு மேலத்தானம் சுளிமுனையில் சந்திரபுஷ்காணிகீழாய் அத் தானம் குண்டலி மூப்பத்திரூன்றுவயதும் மூப்பத்திமூன்று மாதமும் மீசத்துமகாலம் மூப்பத்திநாலுக்குமேல் அறுபத்தி நாலுவயதும் எட்டுமாதமும் பித்தகாலம் அறுபத்திஆறு வயதுமுதல் நூறுவயதுவரையும் வாதகாலம்என்றறியவும் கலைகள்சுடர் அக்கினிஅண்டம் பூமிபரப்பிரமண்டம் சத்திசிவம் அக்கினி எனுன கலைகள்நாலு கடைசிக்கலை மோக்குவாவு அக்கினிச்சுடர் கலைநாலு.

95. மனதிபங்கிப் புக்கினதால் படுவர்மமென்றும் அறிந்துகொள்கதாமப்பா திலர்தகாலத்தின்நேரே தவறுது சுற்றமிர்கப் பொருத்துக்குள்ள நாணப்பா ஓடிமுறிவு வெட்டு குத்து நன்றுகக்கொண்டதனல் மூர்ச்சையாலுல் உணப்பா முன்றுடனே ஐந்து எழு ஒன்பது மூவாறுடனே மூப்பத்தாறும் எனப்பா எண்ணஞ்சாடொன்றுமாகும் எற்றமருந்தவுஷதமாம் மதாண்ணூறாநாளே.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

Digitized By Roja Muthiah Research Library

96. நாளிலேகாயம்வரும் மாண்டுபோவான் நல்காயம் எழும்புவதும் மூவாமலே தாளாமல் வாய்வெழும்பி பித்தம் சுண்டி கண்ணீர்தின் இடைபின்னி சுளியிலேகி பாழான விஷம்போலே பறந்துபொங்கி பிரயாசம்போல் மேவ்வைகபம் மூர்ச்சையாகி தோஷம்மிகும் மரணம்வரும்மூவருலே துடர்ந்துவந்த காயத்தின் வகையிதாமே.

97. தாமென்றஉந்தி பெருங்குடலப்பற்று தயவான ஒட்டூரல் ஒன்றுகாணும் நாமென்றமண்ணை நாக்கென்றும் சொல்வார் நன்றுனபுரிவதிலே கொண்டிட்டாலும் சாமென்ற மூதண்டம் நெருங்கினலும் சடுதியாய் பிடரிநரம்பற்றிட் டாலும் நாமென்றுசெய்யாமே அன்றுநில்லு நமன்வருவா னென்று சொல்லிநாட்டிணேமே.

98 நாட்டிணும் இன்னமொரு மீபருமைகளு நல்ல தொருமூங்கில்வட்டம் பின்பக்கத்தில் சூட்டிவைத்த மூணைலுப்பு என்றுபேராம் தொல்லையாய் பிளந்துதாள் நொருங்குண்டாகி ஊட்டிவைத்தகுண்டலிதான்சுண்டுமாகில் அப்போது மரணம்வரும் சுண்டதாகும் நாட்டினில் மரணமில்லை சிகிச்சித்தாலும் நாதனுருணை இந்தஇடம் தீராதே.

99. முடத்தினல் கால்களது சுண்டிவாடி முக்கியமாய் அரையின்கீழ் பெலமில்லாமல் இடமதிலே கிடப்பாச்சு என்னசொல்வீவன் எப்போதும் மீபதிஜலம் அறியாதோடும் அடவரியார் தடவுமுறைசெய்வாராகில் அதினுலே ஜீவனது போனலும்போம் நடனமிடும் வாசிநிலையாய்ந்துசெய்தால் நலமரணதோஷமுனக்காகாதென்றே.

100. என்றதொரு பஞ்சவர்ணக்குளிகை நெருங்கி சாரலென்றகூமபற்று இரங்கிப்போனலும் நன்றெனவே எழுந் திருப்பான் தன்சாரத்தால் நடுநடுங்கி பித்தனைப்போல் பிரமைபேசும் கன்றிடவே வர்மமில்லைஎன்றும் சொல்வார் காயமென்ற சன்னியதின்கோட்டிஎன்பார் கொன்றிடவே

Digitized By Roja Muthiah Research Library

நாழிகைதான் மூன்றேமுக்கால் குதிவருளாலிந்தமுறை கூறினேனே.

101. கூறுகிறேன் மார்பிலிருவிரலின்கீழே கொடிய தொருமுறிவாகி அப்டைதாழ்ந்தால் மாறுமல்முறிவழியே விசைதான்டோகும் வலுவற்றுக் குன்றந்தாலும் மரணமாகும் கூடவே சிவன் உமைக்குச்சொன்னவார்த்தை செந்தில்வடி வேலவரும் எனக்குச் சொன்னார் ஆறுமப்பாயானறிந்து இந்நூல்சொன்னேன் அருளாலிந்நூலுவந்தது வேனே.

102. வழுத்துகிறேன் மூச்சதுரப்பலைகளூலம் வரியாக அடுக்கிவைத்த முதலாம்கண்டம் கொழுத்துடனே பிரண்டதுதான் முறிவிட்டாலும் கோணுனெட்டெலும்பின் நடுப்பூட்டப்டா பழுதாரவெளிலகியதும் பிரண்டிட்டாலும் பதிணுமதுண்டெல்லுவிலகினுலும் விழியதனுல்காணுது ஆய்ந்துபாரு வெல்லாதுளன்றுகண்டால் விலகிநில்லே.

103. நில்லென்றபுறவரியின் கூடம்மெலும்பின்கீழ் சேர்த்தியாய் இருபுரமும் பிக்தக்காய்தான் விலகாமல் பதிவாகஇருக்குப்பாரு வில்லென்ற வில்பூட்டின்பக்கம்தன்னில் வேந்தனேபித்துக்காய்என்றும் சொல்வார் மல்லென்ற அடியிடிகள் அதிலேலைகொண்டால் பீசவிரைமுளித்தாப்போல் விலகிப்போகும் வில்லென்ற வில்போலே கூனிப்போகும் விசனமொடு குருக்குளவுதன்சாரம்காணும்.

104. காணுமே மூன்றின்மேல் ஜன்னிதான்றும் கடிமையாய்கொண்டதென்றுல் கூபணமாகும் தோணவே கடவிவிடு மெதுவாலுல் சுருங்கானபருத்திச்சார் உள்ளே தாக்கு பூணுவாய்காய ராஜாங்களண்ணை புகழாகக்கொடுத் துடனே மேலும்பூசே ஆணைமாய்தடவிவிடு மெள்ளமெள்ள அடங்கலிலே பிடித்திடவே அமரும்தானே.

105 அமருமந்த தலங்களிலே முறிவுகொண்டு அப்பனே காயமதுமிருசிணுக்கால் இமாவே சிகிச்சையினுல் மாறிநிற்கும் இல்லையென்றுபத்தியத்தை இகழ்வாராகில்

Digitized By Roja Muthiah Research Library

தமாகமாய் அடங்கிநின்ற சனிதேவகம் காணைமும்பி மூர்ச்சை வரும் மூவாண்டுக்கும் நமனைவெல்ல மருந்துண்டோ நாட்டுக் குள்ளே நாதாக்கள்உரைதெளிந்து துணைசொன்னேமே.

106. தணையான பெருவிரலில் கவளிக்குள்ளே சூட் சமாய்காலமதில் குறிவுத்து அகத்தோடே மறுபுறத்தில் சாடுமாறல் அப்போது மரணமதை சுவருமாகில் லெகுவாய் புண்ணை புரையும்தீரும் எப்படியும் மூன்றின்மேல் சுரமும் காணும் தணையுடனே ஐந்தறில் ஜன்னிவந்து சட்டெனவே மரணம்தை கடந்திடாதே.

107. கடந்தெதாருதானமடா லாடமையம் கதிர்மதி யாம் பிரகாசவட்டத்துள்ளே அடர்ந்திட்டநாதனிந்து, அடங் கும்வீடு ஆருனமாளிகைக்கும் மேலாம்வீடு பகர்ந்திட்ட தத்துவங்கள்ஒடுங்கும்வீடு பாரமென்ற பிரமாண்டம் ஆதி வீடு தூரந்திட்ட ஓங்காரமுற்றவீடு சூட்சமென்ற பிரணையம் இருந்தவீடே.

108 வீடானதலமதுதான் நொருங்குமாகில் விசை யாலே ஆடுகின்ற பொரிகளெல்லாம் மூடோடே இடிந்து விழும் பஞ்சகர்த்தாள்மூலமாய் நின்றதொரு பிரணவாய்வு ஆடிநின்றபாலை சுபற்றார்போலே அசைகின்ற வசைகளெல் லாம் அடங்கும்பாரு கூடிநின்ற ராஜாக்கள்மூவோடி குடி விட்டுப்போகுமென்று பகர்ந்தவாறே..

109. பகர்ந்திட்டகாமதிலே கொண்டைமத்தி பண் புடனே மையமது ஓடியுமாகில் தகையாகமாமூமடா செய்ய வேண்டாம் தலம்விலகி முறியுமென்றால் சற்றேகளை முகிர்ந் திடவே சன்னிவந்து அணுகாவண்ணம் மூந்திநீ தலமதை உள்ளேதாக்கு கெதியாகத் தைலத்தைப் போட்டுக் கிருமை யுடன் கெட்டுகிற விபரம்கேளு.

110. கேளுநீ எலும்பதனை சரியாய்வைத்து கெட்டி பாம்தணியதனை சுற்றிக்கொண்டு ஆழவேமதலமதைப் போட்டுக்கொண்டு அதின்மேலே அலகுவைத்துப் பதியக்

Digitized By Roja Muthiah Research Library

கட்டிநீளுநீ பஞ்சுவைத்துத் தைலம்போடு நிமிரும்வலண்டை யிட்டுப்படுக்கச்சொல்லிப் பாருநீ பத்தியத்தை விட்டிடாதே தென பதிந்தாலும் அவதியுண்டு பார்த்துக்கொள்ளே.

111. பார்த்திடுவாய் பன்னிரண்டில் பிரித்துப்பாரு பதிந்ததலம் புண்ணுனல் அலைகடனாற்று சேர்த்திடுவாய் துணியதுனல் சுற்றிக்கட்டி திடமாகமுன்னதலம் தாரை தாக்கு மேகார்த்துவரும் முன்மேலைவயிட்புசேரும் குண மாகும் புண்ணுரும் புகையும்தீரும் ஆர்த்துவிதம் இப்படியே ஆழ்ந்துசெய்தால் அசடில்லையன்றுசொல்லி அறிந்திட் டோமே.

112. சொல்லுமேவாம்புறந்தலைகசம்பற்றிதாகுத்து வைத்த பிடரின்றசைகைக்குள்ளே நல்லெனமேவ முறிந் தாலும்பொறுக்கும்முன்றில் நாலுந்தில் குளிர்ஜுரமுண்டா குமெல்லெனமேவ மேல்நோக்கி அண்ணுர்ந்தேதான் விதம் மாறிமுறிந்துவிடும் கண்டம்தானும் மல்லெனமேவ சன்னிகபம் மேவ்வைகாணும் மரணமது ஒன்பதுக்குள் வழுத்திணுமே.

113. வழுத்துகிறேன் இடகலை சூரியனுகும் மாறிவந்த பின்கலை சந்திரனுகும் அழுத்துகிறேன் குண்டலியே வாசி மூலம் அண்டசராசரங்களெல்லாம் அடங்கியோடும் பழுது டனே மாறிவரும் நொடிக்குள்ளேதான் பதிபுக்கி எழும்பி விடும் முன்னும் பின்னும் வழுத்துரமே சுளிமுனையின் வழியே மோக வானிருந்த தலம்சேர பாத்திலேரே.

114. பரமறிந்தான் சரமறிந்தான் பாசமற்றுன் பற் றுன பகையற்றுன் பலத்தை விட்டான் உருவுறிந்தான் ஜீவ ருட கூருங்கண்டான் உடலறிந்தான் உளவறிந்தான் உண்மை கண்டான் கருவறிந்தான் நிருவி என்றகமலம் கண்டான்கதிர் மதியும் ஒடுங்கி நின்றதலமுங்கண்டான் கரையறிந்து துரை யறிந்துகண்டபேர்கள் காசியினில் அவர்பெரிய ஞானிகாணே.

115. காணயிலே இளிநடுவில் உருளைப்பூட்டு கட்டு விட்டுவிலகியது விலகுமானுல் மேதாணைவளைத்திருத்திப்

Digitized By Roja Muthiah Research Library

பிடிக்கச்சொல்லி, துடைகால்டெருளிரல் இரண்டுட்டவைத்து வேணுமே சவட்டியந்தக்குண்டில்தாக்கி விலகாமல் பந்ததனை இருத்திவைத்து சாணகலம் பலகையதை மேலேவைத்துச் சட்டகம்போல் கச்சைசுற்றி நெருக்கிக்கூட்டே.

116. கட்டுவாய் முன்போலே துண்டுசெண்டுக்கும் களாபல் கணுக்காலும் அதிபோலப்பா முட்டாமல்வச வெண்ணை தாரைபோட்டு முப்பதிலேபிரித்துநீ மிதிக்கச் சொல்லு விட்டுவிடுநொந்ததென்றால் எண்ணைபோடு விசன மாய்கொழுத்திவிடில் தடவத்தீரும் தொட்டுத்தான் காட்டு வதுபோலே சொன்னேன் தொல்லைஎன்று நினையாதே துணிந்துசொல்லே.

117. செய்யடா அழுகநிலைதலம் மூவைவந்தும் தெளி வாகச்சொல்லுகிறேன் தெளிந்துகேளு, ஐயடா இத்தலமும் வருமத்தானம் அமிர்தநிலை அறிந்தவனே ஆசான் ஆசான் எய்யடாவளர்பிறையில் இடமாய்ஏறும் இறங்குவது தேய் பிறையில் வலப்புரமேயாகும் வையடா சரநிலையேகலையின் தானம் மைந்தனேசொல்லுகிறேன் வகுத்துக்கேளே.

118. வகுத்தபெருவிரலுடனே பிறதாரைக்கும் மைந் தனே பரடுமணிமுளந்தாள்குய்யம் தொகுத்திட்ட உந்தி தொப்புள் முலைகைமூலம் துடர்கழுத்து வாயுடனே கபாலம் கண்ணும் மிதித்திட்டலாடம் உச்சிதலமூவைவந்தும் வேந் தனே சாமிசையும் அமிர்தஸ்தானம் பதித்திட்ட இத்தலமே அதிகம்மிஞ்சி பாடாக முறிவதிகம்கொள்ளுமாகில்.

119. கொள்ளையிலைசரம்பிசகி வேர்வைதான்றி கொதிப்பானி அணல்மீறி கபம்உண்டாகி விள்ளயிலே காயச் சன்னிவந்துமாழும் வேந்தனே இக்குணம்தான் இல்லாவிட் டால் மெல்லவேஉள்ளுக்கு காயமுஜாங்கம் விபரமாய் முறி வதிலேபஞ்சுவைத்து கொள்ளவே முறிவெண்ணை தாரை யிட்டு கூசாமல்பத்தியம்பார் குணமாய்போமே.

120. குணமாச்சுதென்றுநீ மறந்திடாதே கொற்ற வனே அவதிதொண்ணூற்றுதாகும் நினைவாச்சுகைதனிக்

Digitized By Roja Muthiah Research Library

283. ஆமப்பா செவியமுடன் கார்சீர்கோழி அழகு நறுநண்றி பொன்மெழுகு சோளம் போமப்பா பெருஞ்சீரம் சிவதைவேலி பூநாகம் ருமிச்சம் சாஸ்திரபேதி நாமப்பா குக் கில்நருக்குமூலம் கல்மதம் நவிலாக்கு மீரை செங்கிளநீர் மூலம்தாமப்பா ஒண்ணேகால் களஞ்சிவீதம் தவராமல்வாங்கி இடித்தரைத்துக்கொள்ளே.

284. கொள்ளுமுன் சொன்னஎண்ணை சாரோடெல் லாம் குணமாக உருளிதன்னில் அடுப்பிலேற்றி விள்ளுநீ அணல்மூட்டி வற்றக்காய்த்து வெறுகபல்லுபதம் வருதல் கண்டு வள்ளுநீ கோரோசனை நீளத்திரத்திலிட்டு வடித்து வைத்து சனிபுதனில் மெழுகு உட்கொள் அள்ளிநீ மெழுக வெண்ணீர் வாழமெல்லாம் அருஞ்சுரமும் புறவீச்சும் வலியும் போமே.

285. போகுமேஉஷ்ணத்தால் வந்தமேகம் பொல்லாத இளைப்பிருமல் மந்தாரகாசம் கர்ணீகவாய்வு கபாலவாய்வு எப் பிளைப்பு பித்தம் சயம் சோகைபோகும் ஆகுமே மெய்நோயு நடுநடுக்கம் அணலெரிவு கைகால்கள் கண்ணுகாந்தல் வாகுமே புறமேகம் சொரிகபப்பன் வண்டுகடி சிலவிஷமும் மாறும் தானே.

286. தாளை அரையாப்பு லிங்கப்புற்று கனிப்பவுந் தாம் மூலமுளை கண்டமாலை வளனை குறைநோவு குட்ட

Digitized By Roja Muthiah Research Library

மூரல் யோனிப்புண் சூலபிளவை வீக்கம் பாலுன கரப்ப னெடு கோந்திவெப்பு பல்லாணை பல்லோசி பக்கசூல வேறுன கண்டத்தில் பொரியல் வெட்டை வெருப்பு தடிப்பு சொரிகள் போம் கண்டாயே.

287. கண்டாயே காண்டியிடை உள்ளேகொள்ளு கனத்தபக்க வாதமேகம் வாதம்தீரும் விண்டாயோ நடுக்கு வாதம் குடல்வீக்கம்போம் விசைநரம்பில் பட்டுவந்த முடக் கம்தீரும் மண்டபம் மூன்றதனில் வந்தமயக்கம்தீரும் மரை யோர்கள் முறைப்படியே செய்தபோக்கு பண்டான வர்ம வகை சயகாசங்கள் பறக்கும்இந்த எண்ணைமுறை பாடும் வாறே.

289. வாறுன டாறுடி நெய்யைச்சொல்வேன் வாழு மந்த கானகத்தின் பூனையொன்றின் கூறுன தலையுடல் கால் தொலியும்தள்ளி கொத்தியதை முக்குருணி புனலிலிட்டு மாறுமல் எட்டொன்றுய் வற்றக்காய்த்து மைந்தனே இருத்துப்பின் சொல்லக்கேளு தாறுவும்தோடை கொற்றுன் தனியமிர்து நாயுருவில்லைவேரை.

289. வில்லையொடு செஞ்சட்டி இசங்குநற்றி வெண் சுன்றி சதாவேலிப்பருத்திவேருப்இல்லை இல்லைஎன்ற குருந் தட்டி கொடுப்பை விறுலி இதமான பொடுதலைவல்லாரை யோடு தொல்லைஎன்று எண்ணுதே பலம்பத்து துரிதமாய் கொண்டுவந்து சதைதத்துஓக்க இருகுருணிநீரிலிட்டு தீளரித்து எட்டொன்றுய் இருத்திவாங்கே.

290. வாங்கியே முன் கஷாயத்தோடேசேர்த்து வரிசையுள்ள கடைமருந்து வழுத்தக்கேளு தேங்கியே திரி கடுகு திரிபலைதான் திரிசாதி வால்மிளகு அரத்தைதேக்கு ஏங்கியே அதிமதுரம் மாயக்காயும் இருசீரம் கொம்பரக்கு ஏலம் சந்தம் ஆங்கிய திப்பிலி மூலம் சோளம் கோலம் அரிசி வகை ஆறுடனே அக்கறுவே.

Digitized By Roja Muthiah Research Library

291. அக்கரா கற்கடகசிங்கிராகம் அகில்பச்சை சடா மாஞ்சி கசகசாவும் மிக்கழ சென்பகப்பூ வங்கடத்திரி மேவரிய தாளிசமும் தேவதாரம் தக்கதாம் வெண்தூபம் கண்டிவெண்ணை தயவான சதகுப்பை வகையொன்றுக்கு ஒக்கவே ஓர்களஞ்சாய் இடித்தரைத்து உற்றகஷாயத்திற்கு எண்ணைகேளே.

292. கேளப்பா ஆவின்நெய் நாழியாகும் கெடியான நல்லெண்ணை மூவுளக்காகும் ஆளப்பா நிம்பெண்ணை உரியு மாகும் ஆமணக்கின் எண்ணையது உரிதானப்பா வாளப்பா நீரொட்டி தெங்கிணெண்ணை வகைக்குளக்கு சென்னை எண்ணைதானும்வாங்கி நாளப்பா முன்மருந்தாடொக்கச் சேர்த்து நலமான உருளிதன்னில் ஊற்றிக்காச்சே.

293. காச்சியே கல்லுபதமாகுப்போது கலசமதில் கஸ்தூரி கோரோசனை வாச்சுதே மேனைதமீரை வெண்காரம் தான் வடிசமணுய்இட்டு வடிகுப்பிக்குள்ளை ஆச்சுதேகாண்டி பிடை ஆறுநாளும் அப்படினை நோய்தேகம்வயசுகண்டு போச்சுதே சயங்கள் ஈடுகாயமெல்லாம் பொல்லாத குவளை வலி கபமிளைப்பே.

294. இளைப்போடு குத்திருமல் ரத்தவாடை எப்பிளைப்பு தேனை இடி கைகால் கடுப்பு களைப்போடு குருக் குளைவு கொழுத்துக்குத்து கண்ணெரிவு தலைச்சுற்று உச்சிக் குத்து உளைவோடு வாதபித்த சிலேற்பனத்தாலே உண்டா கும் வர்மமொடு உள்ரோகம்போம் தளைப்பாகும் தேகமெல் லாம் பொன்போலாகும் காது பிலமுண்டாமே தாணி போர்க்கு.

295. தாணியோர்க்கின்னமொரு நெய்தான் கேளு தாளை வெள்ளாட்டின் குருக்கெலும்பை சாணமென்று எடுத்துவந்து கொத்தி நன்றுய் சதைத்துடனை இளநீர் வெள்ளம் பதக்கிலிட்டு நிற்ணயமாய் எட்டொன்றுய் இருத்து வைத்து கேளுநீ ஆவின்நெய் நாழியாகும் நாணபென்ற முத் தெண்ணை உரியுமாகும் நிறமான நல்லெண்ணை நாழியுட ணின்னும்கேளே.

Digitized By Roja Muthiah Research Library

296. கேளப்பா திரிகடுகு நல்சீரம் கெருடபச்சை
வெண்டு திரிசாதிஏலம் நாளப்பா அதிமதுரம் கொட்டமிச்சம்
நல்லவெண்தூபமெடோடு கொம்பரக்கு, தாளப்பா வால்மிளகு
சிங்கிமூலம் தளர்சோலம் சோகம் சிறுநாகப்பூ ஆளப்பா
செண்பகப்பூ முந்திரிங்கை அக்காரா அரிசி ஆறும் களற்சொன்
றெண்சேறை.

297. ஒன்றுன குமரிச்சார் சேதசிச்சாறும் ஓரிலைச்சார்
சோடைடச்சார் கொடுப்பைபச்சாறும் நன்றுக வகைவகைக்கு
நாழியாகும் நாயகமே கடைமருந்தை இடித்தலைத்து நன்றுக
அடுப்பேற்றி அனலைமூட்டி ஐயமின கல்லுபதம் வடித்
தெடுத்து குன்றுமல் கரண்டியிடை ஆறு நாளுண்கூட்
டோடே வர்மமெல்லாம் குலைந்துபோச்சே.

298. போச்சுதே அஸ்திசுரம் வாட்சைமேகம் புணர்
சூடு கூம்புணர்தல் வாட்சைவெட்டை சீக்காச்சுதிகொழுத்து
வலி சயமிருமல் குவலைகக்கல் குருக்குவலி பல்சோநாய்தீரும்
வாச்சுதே வர்ம வெள்ளாட்டினெண்ணை வைத்தருந்து
வோருக்கு வயதுநூறும்.

299. நூறுன சிறுஉழுக்குசிறுபிடிகள் சுலபமாய்த்தீர
ஓருளண்ணைசேளுசேளப்பா முருங்கைபிலை கரியுப்புமாகும்
முறையுடனே சிவந்த கொடுவேலிபின் கிழங்கும் இவை
சீதைத்து நல்லெண்ணைதன்னிலிட்டு தவராமல் மணல்
பருவம் பதமாய்காச்சி பிடிஉழுக்குதித்தலமறிந்துதடவத்தீரும்
தீருமடா சொன்னமுறை தவராதப்பா தப்பாமல் ஓவ்
வொன்றும் செய்துபாரே.

300. செய்துபார் குருமுனிவர் சொன்ன வார்த்தை
ஜெக்மதிலொருபோதும் தப்பாதப்பா தப்பாமல்பாடிவைத்த
நிகண்டகாதி நித்தியமும் சத்தியமும் நிறைந்தநூலை கரைத்
திதனை கரைகாண ஜெகமுள்ளோர்க்கு புண்ணுகச்சொல்லி
விட்டேன் முன்னூறும் முற்றே.

ஒடிமுறிவுஞானம் முற்றிற்று.

குருவேதுணை.

Digitized By Roja Muthiah Research Library

ஓம் பரப்பிரம்மணேநமஃ.

கடவுள் துணை

வர்மசூஸ்திரம் ஐம்பது.

1. ஆதிபராபரத்தினுடனருளைப்போற்றி ஆனந்த குரு பாதனின் அருள்தான் போற்றி சோதில்லா முப்பத்திரண்டு உருப்புக்களின் மேல குருமுறையாம் பிரங்கிநூறு சொன்னேன் நீதிவழுவாதமிதாரு வர்மமெல்லாம் நிலவரமாய் சொல்லிவிட் டேன் நிலத்துள்ளோர்க்கு வேதனைகளில்லையடா சூத்திரந்தான் ஐம்பதுக்குள் விளம்புறேனே.

2. விவரிப்பேன் எண்ணெயொடு கஷாயம் கிருதம் மேலான தடவுமுறை கஷாயம்தானை நிவரிப்பேன் ஒற்றல் பாகந்தான் நிர்ணயம்மான குருமுறைதான் இதுபோலுண்டோ சௌகரிப்பேன் சண்டாளர் அறிவாரோதான் சாஸ்திரத்தைப் புரட்டி வைப்பான் சாதிக்காரன் எவருக்காய் இன்னாலே சொன்னேனென்றால் எண்ணெழுத்தை அறிந்தவர்க் கியம்பினேனே.

3. இயம்புகிறேன் ஆசானை அடுத்துக்கேளு இல்லாவிட் டால் எவர்க்கும்தான் வம்புரைத்த வழிகள்போலே வழிகளெல் லாம் வகைவகையாய் வகுத்துவைப்பேன் வளமாக நயம் பெறவே சாத்தியமசாத்தியம் நன்றாராய்ந்து நாடிபார்த்து நலம் பெறவே சாத்தியங்கள் நன்றாய் ஆய்ந்து சூட்சமுள்ள மருந்து வகை துணிந்து செய்யே.

4. செய்வது குணங்களுட குறியறிந்து குருவருளால் குருதொட்டுக்காட்டிச் செய்தால் நைவதென்றால் நோயத்துவும் நழுகிப்போகும் நல்முறையாய் ஞானறிந்து நாட்டில்வைத்தேன் பொய்யருக்கும் புரட்டருக்கும் பலியாதப்பா புண்ணியவானு னைக்கால் பலிக்கும் சூட்சம் எய்வதெல்லாம் எவருக்கும்கிடைக் கும் சொன்னேன் இல்லாவிட்டால் கிடையாது எரியில் வீழ் வான்.

Digitized By Roja Muthiah Research Library

5. எரிதனில் வெளாமல் குருவைவம்போற்றி இணங்கு மொழி பிசகாமலிசைந்தால் சரிசரி என்று உலகர் முன்னமே பாரு சாஸ்திரத்தை மெய்யென்று நம்புவார்கள் அரிதான நாலுண்டு திறவுகோல்தான் அடங்கல்முறை பதிஞறில் அடக்கி வைத்தேன் நரி எய்த்த வகைபோலே எயாமல்தான் ஆசாரம் குருவோடே நாடிநில்லே.

6. நாடிநின்ற வகையைக்கேளு குருவைத்தானே நல் மனதை வருத்திக்கோ நாள்தோறும்தான் தேடிக்கோ குரு வசனம் மறவாமல்தான் தினம்தினம் தான்கேட்டு நிடம்கொண் டாக்கால் பேடியில்லே என்னையும் செய்தால் வாய்க்கும் பிச கொன்றும் இல்லையடா பேணிக்கொள்ளு சோடித்துநான் புகல் வேன் எவ்வோருக்கும் சூட்சநிலையறியாமல் துள்ளுவாரே.

7. துள்ளாமல் செய்வதற்கு சாத்தியங்கள் சுறுக்காக திறவுகோல் தான்திறந்து பார்த்தால் விள்ளாத திறவுகோல் அதுவின் மேன்மை தேர்ந்தோர்க்கு வேதனைகளில்லையடா விரித்துச்சொன்னேன் தள்ளிவிட்டுக் கொடுத்தாக்கால் தன் மாத்திரைமீறி சாவார்கள் பாவமடா சாபந்தானே.

8. சாபந்தான் எய்யாமல் சார்ந்துநில்லு தன்மையுள்ள அம்பிகையும் சார்வதாகும் சார்வான கண்டங்கத்திரிக்கிருதம் சொல்வேன் பழையவர்மம் சயம் முதலாய் தீருதர்க்கு காவதி லேகத்தரியும் தோடைரெண்டும் கணக்காக வங்கசாரு படியதா கும் நாவதிலே பசுவினுட நெய்யம்நாழி நாட்டுகிறேன் கெதியி னெண்ணை நாழி.

9. எண்ணையுடன் கர்க்கவகை இயம்பக்கேளு எடு சுக்கு திப்பிலியும் ஆத்தை ஏலம் திண்ணமுடன் வால்மிளகு அக் கறு சிங்கி சேர் வகைக்குக்களஞ்சியடா திறமதாக நுண்ணறி வாய் பூநாகம் டலமதஞ்சு நுணுக்கமுள்ள மயில்தூவல் கரிய தொன்று வண்ணமுடன் இதுகளெல்லாம் கலந்துவற்றி வடி பருவவேளையிலே பாத்ரபாகம்.

Digitized By Roja Muthiah Research Library

10. பாத்திரத்தில் வெள்ளையடா குந்திரிக்கம் வடியிடு
ரோசனையும் வகைக்குக்களஞ்சி சூத்திரமாய் மெழுகு பதம்
வடித்து வாங்கி சுருக்காக காண்டியளவுள்ளெகொள்ளு கொள்
ளேநீ ஈறுறு வேளையப்பா தன் மக்கள் பத்தியம்தான் விட்டி
டாதே ஏத்திவிடு எட்டாம்நாள் முழுகச்சொல்லு இசைவாக
விடு பத்தியம் நிறுத்திக்கொள்ளே.

11. பத்தியம் தானில்லாமல் முழுக எண்ணை பாடு
கிறேன் குருந்தெரட்டி இசங்குகன்றிமுற்றினதாய் களுகாளை
மூலமப்பா முறையோடே வகைவகைக்குப்பலம்தான் பத்து
கொத்தியரிந் தறுகுருணி எட்டொன்றுக்கி கூசாமல் அரித்தெ
டுத்துத்தான் கூறக்கேளு சாத்தியமாய் கோவையொடு மொசு
மொசுக்கை தானிடித்து வில்லையொடு இலைசாரு நாழி.

12. சாருடனே கடைச்சரக்குச்சாரு கொட்டம் தனி
லம் மதாரமுடன், சிரகம் கூறுகிறேன் குரோசானி கிரும்பு
மூலம் கொழுத்த சந்தம் இருவேலி கோலத்தேதாடு வீறுடனே
பலம் ஒன்றாய் வாங்கிவிட்டரைப்பாய் பசுவின்பால் நாளிதன்
னில் வீறுகொள்ள நல்லெண்ணை நாழிதன்னில் விட்டொன்
றாய் அணல்மூட்டி எரித்துவாங்கே.

13. வாங்கியது சரல் பருவம் வடித்துக்கொண்டு வள
மாக வெண்ணீரில் மெழுகும்போது தாங்கலில்லா நரம்புப்பிடி
உளைச்சல் குத்து தாகமுடன் இளைப்பும் சயகாசங்கள் ஏம
மொடு கிருக்கும்சத்தி இடறிசெய்யும் வாதமுடன் காயந்தீரும்.

14. தாளை கருங்கோழி தைலம்தன்னை தாணியோர்
மெய்த்தவே சொல்லக்கேளு மானே கேள் கோழி குடல்தூவல்
தள்ளி வகையாக துண்டித்து குருணிநீரில் கோனேகேள் எட்
டொன்றாய் குருக்கி வாங்கி குருந்தெரட்டி கட்லாடி உளிஞ
மூலம் எனஉடன் வகை பலம் பத்தாய்க்கொண்டு இன்பமாய்
முக்குருணி எட்டொன்றுக்கே.

15 ஒன்றுக்கு கிளாயமதில் விளக்கின் எண்ணை உத்
தமனே நறுநெய்யும் எள்ளினெண்ணை மன்றாக வகைநாழி
சேர்த்துக்கொண்டு வாங்குவாய் திரிஜாதி மதாரம் சீனம் நன்

Digitized By Roja Muthiah Research Library

முன திப்பிலியும் விடயம் ஏலம் நாட்டுமல்லி வெந்தயம் கோரோசனைதான் குன்றுமல் வகை பலம் காலாய் வாங்கி குணபாக இடித்து வடித்தரைத்துச்சேரே.

16. அரைத்துடனே கரைத்தான்றுப்பாண்டத்தூற்றி அணல்மூட்டி காய்ந்துபற்றி மெளுகதானல் உரைத்துடி தப்பாமல் வடித்துக்கொண்டு உத்தமனே உண்டிடுவாய் ஈராறு வேளை திறமுடனே உண்டிடவும் பத்தியமுங்கேளு திறமாக புளியும் புகையிலையும் தள்ளு துரத்துதற்கு வென்னீரால் முளுகுவாய் நீ சுகமாகத் தீருகிற நோயைக்கேளே.

17. கேளப்பா காயமுடன் சுமைகபங்கள் கெடியான குரல் கம்மல் கொளுத்து நோவு நாளப்பா சேரைக்காயம் வறள்காயம்தான் நடுக்கமுடன் கிரிவுடன் மெலிவு கைகால் சூளப்பா குத்துடனே விக்கல் ஈளை சுளுக்குடனே நெஞ்சுமா ரடைப்பும் தூளப்பா பருகி முப்பனி போலாகும் சுகமான கைலமது நிணைந்துசெய்யே.

18. துணிந்துசெய்ய பஞ்சாதிக்கஷாயம் கேளு தூது வளை இசங்குடனே கண்டங்கத்திரி பணிந்தவில்லை சித்தா முட்டி வகைசேரு பலம் பார்த்தெடுப்பாய் இளநீர்தான் படியே யொன்று இட்டுவைத்த கஷாயமதில் சமனைக்கூட்டே.

19. கூட்டுவாய் கொம்பரக்கு களஞ்சி ஆறு குணமாக சதைத்து ஒருகிளியாய் கெட்டி வட்டமிலலாமுன் இளநீர் கஷா யத்திட்டு வகையாக படி இரண்டும் எட்டொன்றுக்கி நாட்ட முடன் இருநேரம் சீனிபோட்டு நன்றுக அருந்திடுவாய் திரி நாள் வட்டும் கூட்டிடலாம் அதுவோடு கிருகம் சேர்த்துக் கொண்டிடுகில் திண்மையது கூறப்போமே.

20. கூறுகிறேன் குக்குடக்கஷாயந்தன்னை குடல்சிறகும் வால்தலையும் காலும் தள்ளி மாறாட துணிகையுடன் துண்டு துண்டாய் அறிந்திட்டு பாண்டத்தினில் வீருள்ள நன்னரி வேடன் வேரும் வெண்டும் வகை பலங்கள் ஐந்தாய்க்கொண்டு ஆறுமடா முக்குருணி அடுப்பதினில் அடவாக அணலெரித்து வற்றக்காச்சே.

Digitized By Roja Muthiah Research Library

21. காச்சியிட்டு மூன்றுபடி குருக்கிக்கொண்டு காலையொடு மாலையுடன் இருநேரம்தான் துச்சமுடன் ஈராறு நேரம்தான் துடர்ந்துகுடி புத்தியம்புளியுமப்பா போச்சுதடா தேகமதில் கொண்ட காயம் துடித்து மயங்குகின்ற வர்மமெல்லாம் முச்சுவிடாக் கொளுத்துடனே பிடித்தூசாவு முடக்குமுதல் இழுப்புடன் ஓடும்தானே.

22. தானை மிளகுமேவர் கஷாயம் கேளு சர்வசுரம் ஈடுமுதல் ஓடிப்போக மானை மிளகுமேவர் வளையமுட்டி மாதோடை உளிஞை குட்டிநத்தைசூரி தேனை நற்கொளிஞ்சி காஞ்சொறி அமிர்தனவே மாதுளை மூலம் எனை திரிகடுகு திரிபலாதி இணைந்த கடகசிங்கியொடு அரத்தை.

23. வாங்குவாய் புடலைமாடு அழுக்கூரம்தான் வல்லை வகைக்குக்களஞ்சிரண்டு ஆங்குடனே சனைத்திடு கஷாயம்முன் போல் முன்போலே எட்டிடான்றுக்கி சினிபோட்டு பாங்குடனே பத்தியமாய்குடியப்போது பறக்குமடா உடல்கொழுத்து சுணம கபங்கள் ரச்சலில்லா மூச்சடைப்பு திட்டுமுட்டு எங்கே என்று ஓடுமடா இணைந்து கொள்ளை.

24. இணைந்துகொள் கஞ்சியொன்று இடரே நீக்க எடுத்திடுவாய் சிற்றுமுட்டி உளிஞை இரண்டு அணைத்திடித்து பலம் பத்து தூணிநீரால் வருவாமல் குருணியதாய் குருக்கிக் கொண்டு துயர்ந்தெடுப்பாய் ஆதாளி அரிதாமென்று துணையுடனே அரிசியாறு அழுக்கூரம்தான் கடையாக குருக்கி ஆறுபடிதானைக்கி கட்டாகக் குடித்திடுவாய் காலைமாலை.

25. மாலையிலை குடித்திடுவாய் ஈராறு வேளை மாறிவிடு புளியுப்பு மறைத்திடுநீ சாலவே சயம் விக்கம் ஆரோசியம் சாதலுடன் தளர்ச்சைபுமே சார்ந்திடாது பாலருடன் கிழவருக்கும் கர்ப்பிணிக்கும் பாச்சடா கஷாயமது புரிந்துசெய்தால் தாலமதில் பிறந்தவற்கு ஈடுமுண்டோ சண்டாளர்க்காகாத சரணம் தானே.

26. தானை பூச்சொன்று சொல்லக்கேளு தல்லு இழுசனிதாவு மூளிவுக்கிகல்லாம் வானை மரமஞ்சள் வரட்டுமஞ்சள் வகையான சுக்குடனே சனையின்குப்பை நேமமுள்ள

Digitized By Roja Muthiah Research Library

ஓலிலை முருங்கையிலையும் எள்ளும் எடுத்திடுவாய் வகைவகைக்கு சமனுய் வாங்கி பாளமுள்ள மதுதன்னிய் அரைத்து வெதுப்பி பாங்காகத்தானெடுத்துப் பூசிணுக்கால் வீனசதைநோவு குத்து களைப்பு விக்கல் வடிநரம்பில் திமிருடனே உளைச்சல் போமே.

27. போமப்பா தாளையொன்று புதுமையாக புகட்டு வேன் உலகத்தோர் பிளைக்கவென்று நாமப்பா நறுநெய்யும் எள்ளினெண்ணை நலமுடனே எருண்டத்தெண்ணை மூன்று தாமப்பூ குமரியுடசாரு நாழிதயவாக சினியது உளக்கே போட்டு ஓமம்பா நெல் பொரியும் பருவம் பார்த்து உத்தமனே தானிரக்கி நோவில் போடே.

28. போடப்பா சர்வசயம் தீரவென்றுல் பொடிபொன்று சொல்லுகிறேன் கூரக்கேளு நாடப்பா இஞ்சி சீரகம் சுக்கு மல்லி நாயகமே களஞ்சி ஐந்ததாகும் தேடப்பா திப்பிலியும் விடையம் ஏலம் திடம்பெறவே வகைவகைக்குக் களஞ்சி யொன்று கூட்டப்பா ரோசனை அரத்தை சுக்கு அக்கரா குண மான வால்மிளகு மதுரம் வாங்கே.

29. வாங்குவாய் இடைபிசகாமல் களஞ்சிரெண்டு வருத் திப்பிடி சூரணத்தை சினிசேர்த்து பாங்குடனே பத்தியமாய் கொண்டபோர்க்கு பறக்குமடா கொளுத்து சுரம் தாகம் மேகம் ஏங்கலுட் இழுப்பு கபம் ஈளை காயம் சுமைகள் திகட்டிசார்த் தல் பேதி சீதம் தாங்கலில்லா ஆயாசம் கிருக்கம் மூர்ச்சை தளர்ச்சையொடு சயம் காயம் நிரும் காணை.

30. காணப்பா ஓகாழியுட கஷாயம் கேளு கருத்தாய் முத்தமொடு கொடுப்பை முட்டு காணப்பா உளிஞ்சியொடு பொடுதலை வில்வம் நல்பருத்தி வெண்குன்றி கருத்தச்சுண்டை தோணப்பா தக்காளி வேப்பின் பட்டை குருக்குடனே செந் தட்டி அருகு சூரி காணப்பா பணப்புல்லு விஷ்ணு மூலி நல் தாறு வல்லாரை உருவிவேரே.

31. வேரோடே இதுகளெல்லாம் களஞ்சிரெண்டு வின்முருகிறேன் ஏலம் சுக்குச்சாதீர்ந்து வால்மிளகுப் மதுரம் ஏலம் அக்கரு சாதகுள்ள சீரகமும் திரிகடுகுப் சேரடா ஆ

Digitized By Roja Muthiah Research Library

ஆறும் ஓமம் இரண்டும் திடம்பெறவே அழுக்கூரம் மாஞ்சிக் காரம் பாத்தியே வகைரெண்டு களஞ்சி வாங்கு பாலகனே சிவ்ந்த உள்ளி உளக்குரெண்டு.

32. ரெண்டோடே குக்குடம் கால்போக்கி குணமாக நாலுதுண்டாய் தரித்துக்கொண்டு கண்டாயோ நால்நாழி இரு குருணி புனலதிலே கருதி வெந்துவின்டாயோ ஆறுபடியாக்கிக் கொண்டு விள்ளுகிறேன் இருநாளியதிலேவாங்கு முண்டாயோ இளநீர் பால்வகைக்குநாழி முறையோடே நால்படியொன்று யாக்கே.

33. ஆக்குவாய் கொம்பரக்கு குங்குமப்பூ அடவாக வகைக்கு ஒருகளஞ்சி வாங்கே தாக்குவாய் கிழிகட்டி. அதிலே போட்டு தயவாக எட்டொன்றுய் இருத்துவாங்கி நோக்கவே இருகளஞ்சி மீரை சீனி நுணுக்கமுடன் மேல்சேர்த்துக் கொண்டபோது நாக்குமடா சர்வ ஈடகன்றுபோகும் சதை செய்யும் கொழுத்துகடம் சாறுதென்றே.

34. சாறுமலிருப்பதற்கு முறிவுகட்கு சாந்தமுடன் ஒற்றல்ஒன்று சொல்லக்கேளு தாவின் இலையைவாங்கி கூறுமல் ஒருபிடிதான் சதைதத்துக்கெட்டி. குணமுடனே நல்லெண்ணை தனிலேவெந்து பாராமல் முறிவுதான் சவக்குமட்டும் பார்த் தெடுத்து அனத்திவிடு பாகமாக ஆருக்கும் சொல்லப்போமோ இந்தப்போக்கு அறிவுள்ளோரறிவார்கள் அறிந்துசெய்யே.

35. செய்வதற்கு ஆலம்பால் எண்ணேகேளு செகத்தி லுள்ள மானிடற்கு முறிவுதேர வசமான ஆலம்பால் நாழி கூட்டி கட்டாகவே காட்டுச்சி சதைதான்நாழி வையகத்தோர் வலியான தோலும்ஒன்று மொய்வதுகேள் நன்னரி ருமிச்சோடு உத்தமனே வகைவகைக்கு களஞ்சிரெண்டுவாங்கே.

36. வாங்கியே இடித்ததெல்லாம் ஒன்றுய்சேர்த்து வழ மாக நல்லெண்ணை நாழிதன்னில் வாங்கியே அடுப்பேற்றி சிறு தீபம்போட்டு தப்பாமல் கிண்டிவடித்துக்கொண்டு நீங்காமல் தைலமிட்டு நவநாள்மட்டும் நினைவோடேசெய்துவர வாய்குடம் சொன்னேன் தூங்காத , புண்புரைகள் முறிவுகெட்டு சதை தள்ளல் சாறுதென்றே.

Digitized By Roja Muthiah Research Library

37. என்றதோரு முறிவுகண்டவர்களுக்கு குளிக்க எண்ணை விளம்புகிறேன் விளம்பவே மெனிச்சார் காணச் சாரும் நன்றெனவே வகைசாறு நாழியாகும் நலமான திரிகடுகு தகரம்கொட்டம் மாமேகேள் சனிஞாயர் அரத்தைபாலை வழ மாக வகைவகைக்கு களஞ்சிரெண்டாம் ஒன்றுகசேர்த்தரைத்து எண்ணைநாழி உத்தமமென சேர்த்தொன்றாய் கலந்துகாச்சே.

38. காச்சியே வடித்திடுவாய் சரல்பருவம் கைகண்ட தைலமது குளித்துவந்தால் போச்சுதடா நரம்புப்பிடி அசைவு நோவு புண்போலே நோவுகின்ற நோக்காடெல்லாம் காச்ச லொடு கண்மயக்கம் கண்வீக்கம் கண்வலி க்காதில்வலி கவிட்டல் நோவும் மூச்சப்பா விடுமுன்னே தீருமென்று முனியுரையின் வாக்கியத்தை முகந்துசெய்யே.

39. முகந்துசெய்ய வசவெண்ணை வைக்கும் மார்க்கம் முறையோடே சொல்லுகிறேன் குமரி நீருள் புனைந்து பழம் பிளிந்தெடுத்து சாகம் ரெண்டும் டுனை முருங்கை இலைச்சாகம் கூட்டச்சேரு நனையாமல் தனிச்சாகம் வகைக்குளக்கு நல் எண்ணை தேங்காய் நெய் ஏரெண்டெண்ணை ஆனநடை வகைக் குளக்கு அதுவோடொக்க அடக்கிவை தோடைவேர் கசகசா வேர்.

40. கசகசா நன்னரி சூரைவித்தும் கட்டாக முக் களஞ்சி கருதியாட்டி அசவில்லா தொண்டோடே அரைத்துக் காச்சி அழகான மெழுகுபதம் வடித்துக்கொண்டு வசையாகப் பொரிதனிலே முக்கூட்டிட்டு வளமாகத் தடவி வந்தால் வச னிப்பேன் கேள் வசையாத தலமுண்டோ மருந்துகண்டால் மடையருக்கும் மட்டிகள்க்கும் வசனிக்காதே.

41. தோடைவேர் கஷாயம் தன்னை சொல்லக்கேளு வகையான தோடைவேர் பலம்தான் பத்து வகையாகத்தரித்துக் கொண்டு இசைவுடனே கொம்பரக்கு களஞ்சிமூன்று பொடித்துக் கிளிகட்டி எசவுடனே எட்டொன்றாய் வற்றக் காச்சி நினைவாக அரித்தெடுத்து வைத்துக்கொண்டு அசை வுடனே தேன் சினி மேலை அரிசியிடை இட்டிருந்த அகலும் நீடே.

Digitized By Roja Muthiah Research Library

42. சொல்லுமேவன் ஆடாதோடை நெய் இதனை ஈடென்ற சகலசயம் தீரவென்றால் இயம்புகிறேன் தோடையிவர் கண்டங்காரி நாட்டுகிறேன் நிலவாகை நன்னரிசிந்தல் நல்சந்தம் வில்லை முத்தம் இங்குருவி காட்டி-லுள்ள கருந்துடரி கருத்தச் சுண்டை காணுசதாவேலி வெள்ளருகு உளிஞை தூதுவளை கூட்டுவாய் சாரணைவேர் படர்தாளி குணமான வளையமொடு தாராவேரே.

43. வேரான இரண்டுபத்து பலமாய் வாங்கி வில்லை கிறேன் தூணி நீரோடொன்றுக்கி காற்றின் நெய்படிதா னென்றுசேரு கடைமருந்து சீரகம் இரண்டு கற்கடக சிங்கி நேரான திரிசூதி திரிகடுகு நிலமதுரம் கொட்டமொடு விடயம் குப்பை சேரடா வேப்பிலை அரத்தை மாஞ்சி திடமுள்ள வால் மிளகு ஏலம் மல்லி.

44. மல்லியிடா கெருடக்கல் தகரம் ஓமம் வாங்குவாய் கோரோசனை கல்மதமும் தங்கம் சொல்லிவிட்டேன் வெள்ளி யொடு வகைக்கு ரெண்டு துணிந்தெடுத்துப் பாகமுடன் பொடி யும் செய்து அல்லலில்லா தோடை கத்திரி கையான் சங்கு அரிகரும்பு தூதளைப்பூ சோலம் சட்டிவல்லியரே வகைக்குச் சாகம் படியாய் வாங்கி வெள்ளாடு உடும்புரத்தம் படிவாங்கே.

45. வாங்கியே இதுகளெல்லாம் ஒன்றுங்சேர்த்து வரும் பாண்டம் அதிலூற்றி அனலேமூட்டே ஓங்கியே கிண்டி வற்றி மெழுக்தானல் குருபொருளை தாள் நினைந்து வடித்துக் கொண்டு தாவுகின்ற நோயாளி தனக்குநெய்யை துடமொன்று ஈறுறு நேரம்கொண்டால் ஏங்கியே ஓடுமடாதோடை நெய்யால் என்சொல்வேன் தீரும் நோய்தன்னைக் கேளே.

46. கேளப்பா வருமமது நூற்றெட்டால் கொண்ட கேடு சயம் எட்டுடனே வரட்சை ஈளை நாளப்ப அஸ்தி சுரம் அஸ்தி காச்சல் நாடோரும் வந்திடும் காந்திச்சூடு சூளப்பா அரோசிகமும் கிராணி வாய்வு சுளுக்குடனே கொளுத்துவலி வன்னி கடைத் தருப்புபோலே தலங்குமடா நெய்யுனுட பெருமைதானே.

Digitized By Roja Muthiah Research Library

47. பெருணமபெரும் சாத்தியத்தின் குணத்தைக் கேளு பலத்த பித்தகாடியது பிசந்துசாலல் அருமையுள்ள வர்மத்தில் அணல்தான் மீறி அடங்கல் கலம்தான் குளிர்ந்து முரிவு குன்னும் திருதிரென நெஞ்சிலிடி ஏங்கல் விக்கல் திட்டுமுட்டு கொளுத்துடனே சுவாசம் காணும் வருங் கபங் கள் குவளைபோலே அப்பனே சத்தில் வரும் வாகான அன்ன மது திகட்டும்பாரே.

48. காணுது நாடிநிலை மூன்றும் பம்மும் கண்மயக்கம் காச்சல்சுரம் கடினம் காணும் தோணுது சொல் குளறும் மறதி மெத்த துப்பல் கபம் அடிக்கடிதான் சுழட்டும் வாய்நீர் காணுது பித்தமுடன் புலம்பும் தோற்றம் நடுநடுங்கி வாய் குளறும் நடுக்கம் காணும் வாளுளை வாங்குமிந்த குறிகள் கண் டால் வையகத்தான் இதையறியான் மயங்குவானே.

49. மயங்காமல் சொல்லிவிட்டேன் குறிகுணத்தை மாய்கையிலே விளாமல் வழியில் நில்லு தியங்காதே சூஸ்தி ரத்தில் சொன்னபாகமது துணிந்து முறை பிசகாமல் மருந் தைச்செய்தால் பயங்காட்டி ஏழைகளைக் கெடுக்க வேண்டாம் பழநூலை நீ அறிந்து பார்த்து நில்லே

50. நில்லென்ற வழிதப்பி நடந்தாயானல் நிலம் இரண் டும் வாய்காது நிலையாய் சொன்னேன் சொல்லொன்றும் தப் பாது சூட்சம் பாரு துணிகாமாய் வினையொன்றும் செய்ய வேண்டாம் நில்லானமகள் மதிகேடு செய்யவேண்டாம் முறைப் படியே நடப்பவருக்கு பலிதமப்பா பாரான புறங்கடந்து பாராதோர்க்கு பாக்கியமே இல்லையடா சூட்சம் சூட்சம் பண் டான முறையிதுவே வர்ம வைத்திய சூஸ்திரம் பார்தனிலே பாடிவைத்தேன் ஐம்பதிற்குள் ஐம்பதினிலடக்கமது பதிணரு கும் ஆகமுள்ள பீரங்கி நூறுமாகும் நூலதனை சொல்லிவிட் டேன் நுட்பமாக நீயறிந்து செய்திடுவாய் நூலும் முற்றே.

வர்மி வைத்திய சூஸ்திரம் முற்றிற்று.

குருவே துணை.

Digitized By Roja Muthiah Research Library

வர்ம அளவுநூல் உரை.

1. கண்டத்தின்மேல் திலர்தக்காலத்திலிருந்து சீறுங் கொல்லியுள்பட சுற்றளவை எடுத்து இரண்டாய் மடக்கிப் பார்த்தால் சீறுங்கொல்லியும் திலர்தக்காலமும் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் திலர்தக்காலத்திலிருந்து ஒட்டுவர்மமும் செவிக்குற்றிக்காலமும் குருந்துக்குற்றியும் சுளியாடி வர்மமும் உச்சிவர்மமும் கோர்சைக்காலமும் அறியலாம் அதுபோல் இடமும் வலமும் கண்டுகொள்க.

2. அதை இரண்டாய் மடக்கினால் நட்சத்திரக்காலமும் மின்வெட்டி வர்மமுமறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் கண்ணுமணி வர்மமும கண்ணுடிக்காலமும் பாலவர்மமும் அறியலாம்., பின்புறத்தில் சீறுங்கொல்லியிலிருந்து நாலாய் மடக்கி கீழ்நோக்கி வளமுடிந்த வர்மமும் காக்கட்டைகாலமும் நெட்டிவர்மமும் அறியலாம் அதுபோல் இடத்தும் வலத்தும் உண்டு

3. கண்டத்தில் தொண்டை நடுவில் அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் முன்நாக்குத்தள்ளி வர்மமும் பின்நடுக்கு வர்மமும் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் கண்டத்தில் இடத்தும் வலத்தும் நடுக்குவர்மமும் காரக்குளி வர்மமும் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் கீள்தும்மிக்காலமும் மேல்உறக்கக்காலமும் வலது பக்கத்து மீநர்மூத்திரக்காலமும் அறியலாம் இதுபோல இடத்தும் வலத்தும் உண்டு.

4. தும்மிக்காலத்திலிருந்து கீழ்பக்கம் உந்திவர்மத்தை அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் நேர்வர்மம் அறியலாம் நேர்வர்மத்திலிருந்து வலதுபக்கம் அளவெடுத்தால் அடப்பக்காலம் அறியலாம் அதின் கீழ்ப்பக்கம் பார்த்தால் சுருதிவர்மம் அறியலாம் மேல்ப்பக்கம் பார்த்தால் புஜவர்மம் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் நடுக்குவர்மமும் எல்லு

Digitized By Roja Muthiah Research Library

வர்மமும் அறியலாம் கீள்உருமி வர்மமும் அறியலாம் இத் தனையும் பார்த்த அளவில் அறியலாம்.

5. முன்மார்பு குதிக்காலம் இரண்டும் நேரே அளவெடுத்துப்பார்த்தால் மேல்பக்கம் திவளக்காலும் அறியலாம் வெள்ளீரல் வர்மத்தையும் அறியலாம் கீழ்காரீரல் வர்மத்தையும் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் சித்திரைக்காலமும் எலும்புருக்கியும் அறியலாம் அதுபோல் வலதுபக்கம் அளவுநூல் சரி அத்திக்காந்தாரியின் கீழ்பக்கம் எலும்பு வர்மம் நேரே மேல்பக்கம் காரீரல் வர்மமிது நாலுக்கும்நடுவான ஸ்தலம் குற்றிக்காலமும் உந்தியிலிருந்து சடையாந்த காலமும் சுற்றளவு எடுத்து.

6. அதை இரண்டாய் மடக்கி இடத்தும் வலத்தும் உந்திக்கு நேரே மேல் இளங்குருந்து வர்மமும் அதை இரண்டாய் மடக்கினால் சிறிய் அத்திச்சுருக்கியும் அந்த அளவில்தானே நேர்வலிய அத்திச்சுருக்கியும் அதை விலகி நேர் அளவில் முண்டெல்லு வர்மமும் இதுபோலே இடத்தும் வலத்தும் உண்டு.

7. வளமுடிந்த வர்மத்திற்கு கீழ்உந்தி வர்மத்திற்கு மறுகாலமும் அதை அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் கொம்பேரி வர்மத்தை அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் நெஞ்சில் நடுக்குவர்மத்துக்கு மறுகாலம் மேலறியலாம் கொம்பேரி வர்மத்துக்கு மறுகாலம் கீழ்ப்பாகம் உருமிக்காலத்துக்கு மறுகாலம்அறியலாம்.

8. இனி பூட்டில் தள்ளெலும்பு மேல் எலும்பில் காக்கட்டை காலத்திலிருந்தும் நெடிய அளவெடுத் திரண்டாய் மடக்கினால் சிப்பித்தூங்கி ஸ்தலவர்மம் அறியலாம் அதை இரண்டால் மடக்கினால் மேல்பக்கம் சிப்பிவர்மம் அறியலாம் தள்ளெலும்பிலிருந்து மேல்பாகம் அந்த மடக்கை பிடித்தால் நாவாரி எல்லுவர்மம் அறியலாம்.

9. சிப்பித்தூங்கி சதையிலிருந்து நேரே புறதாரை பிடித்தால் அகத்தில் வார்வர்மமறியலாம் மேல்சிப்பிவர்மத்தி

Digitized By Roja Muthiah Research Library

லிருந்து நேர்புறதாரை சிப்பி அசைவு வர்மம் அறியலாம் சிப்பி வர்மத்திலிருந்து அளவெடுத்தால் கைப்புஜ பொருத்து அறியலாம் இதுபோலே மறுபுரத்தும் உண்டு.

10. சிப்பி வர்மத்திற்கு அகதாரை புஜவர்மத்தை சேர்ந்ததில் பள்ளையின் உள்ளேகொண்டது மறுகாலம் புஜ வர்மம் அதற்கு இடத்தும் வலத்தும் உள்ள கொண்ட வர்மத்திற்கு புறதாரை மறுகாலம் என்றறிக உந்தியிலிருந்து கீழ்பக்கம் கல்லிடைக்காலம் வரை அளவெடுத்து இரண்டாக மடக்கினால் மூத்திரைக்காலம் அறியலாம் அதே அளவை மூத்திரக்காலத்திலிருந்து இடம் வலம் திருப்பபதப்புவர்மம் அறியலாம்

11. பதப்புவர்மத்திலிருந்து அந்த நூலை அதே அளவோடு கீழ்பாகம் எடுத்துப்பார்த்தால் அகஉருளை விசை நரம்பு அறியலாம் கல்லிடைக் காலத்திற்கு மறுகாலம் தும்பு வர்மம் கல்லிடைக்காலத்திலிருந்து முனசொன்ன அளவு பிரகாரம் வலதுபாகம் வித்துவர்மம் அறியலாம் கல்லிடைக் காலத்திலிருந்து அந்த நூலை இரண்டாக மடக்கினால் லிங்கத் தின் நடுக்குவர்மம் அறியலாம்.

12. அந்தநூலை கல்லிடைக்காலத்திலிருந்து கீழ்பக்கம் அளவெடுத்துப்பார்த்தால் மும்மூர்த்தி வர்மம் மூன்றும் அறியலாம் இந்த ஒன்பது வர்மமும் செய்யக்கூடாது செய் தால் கங்கைக்கரையில் காராம் பசுவைக் கொன்ற பாபமுண்டு அகத்தில் சந்தெலும்பு சதையெலும்பு கீழ்படை காலு வெள்ளைகண்ணு சரிந்துவிட்டு வரும் அந்தநூலை இரண்டாக மடக்கினால் வரும் இடம் முரிந்தால் பிளையாது.

13 அதின் மேல்பக்கம் ஒருவர்மம் கீழ்பக்கம் ஒரு வர்மமும் அங்கே உண்டு அதை ரெண்டாக மடக்கினால் சரி யாய் முரிந்த ஸ்தலம் தொண்ணூறு கழியிவ்வண்டும் அதில் அகதாரையும் புறதாரையும் இரண்டு வர்மங்கள் உண்டு நடு அளவிலிருந்து மேல்பக்கம் அளவைப் பார்த்தால் அகதாரை

Digitized By Roja Muthiah Research Library

யும் புறதாரையும் இரண்டு வர்மங்கள் உண்டு அடித்தூடை மொளியுள்பட அகநரம்பு விசையுள்பட.

14. கீழ்பாகம் கீழ்நோக்கியும் மேல்நோக்கியும் வந்த வர்மம் எட்டும் நரம்பு முரிந்தாலும் பிசகினாலும் குற்றம் நிராது முட்டுச்சிரட்டையுள்பட சுற்றளவெடுத்துப் பார்த்தால் சிரட்டை பிசகியிருப்பதை அறியலாம் அதை மூன்றுய் மடக்கினால் வலதுபக்கம் பதைப்புவர்மம் அறியலாம் அதிலிருந்து ஒரு சுற்றுவிட்டு மிச்சம் அளவெடுத்தால் மொளி பொருத்துவர்மம் அறியலாம் முட்டுக்கண்ணு வருமத்திலிருந்து காண்டைக்கண்ணு அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் மேல்பக்கம் குதிரை முகமும் கீழ்பக்கம் நுனிநாக்கும் முரிந்தால் பிளையாது.

15. நுனிநாக்கு வர்மத்திலிருந்து கீழ்பக்கம் அதை இரண்டாக மடக்கினால் வயறாதி வர்மமும் மேல்பக்கம் தும்மிக்கால வர்மமும் தெண்ணூறு கழியவேண்டும் கபில் கண்ணும் பெருவிரல் நுனியும் அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் பாதசக்கர வர்மம் அறியலாம் முரிந்தால் பிளையாது பாதசக்கர வர்மத்தில் மேல்பக்கம் பார்த்தால் மொளிப் பொருத்து வர்மம் அறியலாம் மறுபுரத்தில் கண்ணுவர்மம் அறியலாம்.

16. அதை இரண்டாய் மடக்கினால் கண்ணு வர்மத்திலிருந்து குதிங்கால் வர்மம் அதை இரண்டாய் மடக்கினால் நரம்பு நடுக்கு முடிச்சிவர்மம் அறியலாம் அங்கே முரிந்தால் பிளையாது இதுபோலமறுபக்கங்களிலும் உண்டு மேல்பாகம் கையில் கழுக்குழி பொருத்திலிருந்தும் முளங்கை வெள்ளை மொளியிலிருந்தும் அளவெடுத்து இரண்டாய் மடக்கினால் நடுக்கு வர்மத்திலிருந்து மேல்பக்கம் பார்த்தால் அங்கே முரிந்தால் பிளையாது அந்த அளவை இரண்டாய் மடக்கினால் நடுக்குவர்மத்திலிருந்து மேல்பக்கம் பார்த்தால் அங்கே முறிந்தாலும் அங்கே முறிந்தால் பிளையாது நாற்பத்தொன்று கழியவேண்டும்.

Digitized By Roja Muthiah Research Library

17. புறங்கை மொளியிலும் முன்சொன்ன அகத்து வெள்ளையிலும் அளவெடுத்து இரண்டாய் மடக்கி நடுவி லிருந்து கீழே அளந்வைப் பாகத்தால் நாடிசுத்தி வர்மம் அதிலும் முரிந்தால் பிளையாது முட்டின் சுற்றளவெடுத்து இரண்டாய் மடக்கிப்பார்த்தால் மேல்பக்கம் கைமண்ண வர்மமும் கீழ்பக்கம் மொழிப்பொருத்து வர்மமும் அறியலாம் அதை இரண்டாய் மடக்கினால் முடிப்பதப்பு வர்மமும் புற தாளை பிளைநரம்பு வர்மமும் அறியலாம் கையில் பெருவிரல் விட்டு சுற்றளவெடுத்து இரண்டாய் மடக்கினால்.

18. அகதாளை புறதாளை சக்கரைக்கை வர்மம் அறி யலாம் அதை இரண்டாய் மடக்கினால் மொளிப்பொருத்து வர்மம் புறதாளை அறியலாம் நாலுவிரலில் மொளி சுற்றள வெடுத்து சிறுவிரல் மொளியிலிருந்து மேல்பக்கம் சொர்ண வெற்றிலைக்காலம் மூன்றுமறியலாம் சொர்ண வெற்றிலைக் காலத்திலிருந்து அந்த நரம்பின் மேல்பாகம் நெருக்கு வர்மம் மூன்றும் அறியலாம்.

19. பெருவிரலிலிருந்து கைமணிக்கட்டு வரைக்கும் உள்பட நேர் அளவெடுத்து இரண்டாய் மடக்கி அதை இரண் டாய் மடக்கினால் கவளிகாலம் அறியலாம் கோழிக்கழுத்து வர்மம் சுற்றளவெடுத்து இரண்டாய் மடக்கினால் கோழிக் கழுத்து அகதாளை அறியலாம் பிரதாளை பிரந்தல்வர்மம் அறியலாம் இதுபோல் இடத்தும் வலத்தும் கண்ணுவவறும் இரண்டும் கண்டுகொள்க அவ்விடம் முரிந்தால் குற்றம் தீராது.

20. பிளைக்கும் மேலெழுதிய வர்மங்களுக்கு மற்று முள்ள பிரமாணங்கள் பார்க்கவும் முன்னே எழுதியுள்ள வர்மங்களுக்கு அறிந்தவர்க்கும் இப்படித் தெரிந்தால் மாற் றுனை செய்துகொள்ள வேண்டும் இப்படி அறியாமல் செய்த பேர்கள் பதினெட்டு கொண்ட போகங்களில் நிச்சயம் ஒன் றில்பட்டு மரிப்பான் வர்மம் சகலமும் இளக்குவதற்கு அடங் கல் சொல்லுகிறேன் ஆராவது வர்மம் கொண்டால் சகல குருகடாட்சத்துடன் உள்பயந்து இளக்கவேண்டும் இளகுமா

Digitized By Roja Muthiah Research Library

இளகாதா என்றறிய சோதனை முகத்தில் அடக்காலம் பிடித்துப் பார்க்கவும்.

21. அடங்கல்காலம் அறிய இருசெவியும் பிடித்துக் கைகொண்டமர்த்தி நாசியிலும் வாயிலும் இருகைகொண்டும் கமர்த்திப்பார்த்தால் கொஞ்ச நேரத்தில் ஜீவன் இருந்தால் ஆள் அதகம் சுவாசம் முட்டி சஞ்சலப்படும் இப்படிப் பரீட்சித்ததான் சாரம் இல்லையானால் மூக்கு இரண்டிலும் வெற்றிலையும் நல்ல மிளகும் உப்பும் குடத்தும்பைப்பருவும் கல்லிப் பிளிந்து இரண்டு மூக்கிலும் இரண்டுசொட்டுச்சாறு விட்டால் ஜீவன் இருந்தால் கண்டத்தை எடுத்து அசைக்கும் அப்போது கொஞ்சம் ஜீவன் உண்டென்று அறிக இப்படிக் செய்தும் அசைவில்லாமலிருந்தால் வெற்றிலைச்சாற்றில் நல்லமிளகை உரைத்து கண்ணில் கருவிளியில் போடவும் ஜீவனுண்டானால் கண்ணில் நீர் வடியும் கண்ணிமை பொடு பொடுவென்று தட்டி விளிக்கிறதும் இருந்தால் ஜீவனுண்டென்று அறிந்துகொள்ளவும் அதிலும் சோதனை இல்லாவிட்டால் வேலிப்பருத்தியை பிளிந்து சாறெடுத்து இரண்டு சொட்டு நாசியில் நசியம் அடைக்கவேண்டும்.

22. ஜீவனிருந்தால் கண்டத்தை அசைக்கும் இதிலும் தெளிவில்லாவிட்டால் சரீரத்தில் நுள்ளிப்பிடிக்கவும் பிடிக்க இடம் குளிந்திருக்கும் அப்போது ஜீவனில்லை என்று கண்கடியத்த இடம் முன்போலானால் ஜீவனுண்டு அது மறுத்து தலையெடுத்து உயர்த்தினால் ஜடம் ஒன்றாக இளகும் ஜீவனிருந்தால் தலை குளிந்திருக்கும் முன்சொன்ன அடக்கக் காலத்தின் கீழ் சொன்ன பரீட்சை பிரகாரம் ஜீவனுண்டாகி இருந்தால் ஒன்றரை நாள் அதாவது தொண்ணூறு நாளிகை குள்பட்ட ஒரு அவதியை அவ்வப்போதுள்ள குருக்கு நிலைமைக்குத் தக்கதாக சொல்லி விலகிக்கொள்ளவும்.

23. இப்படியும் சமாதானம் சொல்லி கேட்காவிட்டால் உடையக்காரனின் சம்மதத்தின்படி நாம் அறிந்த பிரகாரம் அடங்கலில் கொண்டோ அதல்லாமல் அடிபட்ட இடத்தின் ஸ்தலம் திட்டப்படுத்தியோ மறுகாலங்கள் கை

Digitized By Roja Muthiah Research Library

யமர்த்தியோ இளக்கிப் பார்க்கவேண்டும் இதல்லாமல் அக தாரை தும்மிக்காலம் கீழ் கல்லிடைக்காலம்வரை கொண்டே வர்மங்களுக்கு மறுகாலம் கொண்டால் முன்பிறங்கை அமர்த் தாவது தவிரதட்டக்கூடாது.

24. இடதுபக்கம் விலாவுக்கு வலதுபக்கம் விலாவுக் கும் கொண்டிருந்தால் முன்சொன்னதுபோலே கையமத்தி விடவும் எடுத்து இருத்தி முன்சொன்னதுபோல் சுக்கு பொடித்து நாசியிலும் செவியிலும் ஊதி கைபொத்தி உச்சி பதைப்பில் சுக்கை சுவைத்து ஊதி உச்சியை கசக்கி பாக மாய் இடதுகை அடியிலும் வலதுகை மேலும் நாலுவிரல் உயரம் கையுயர்த்தி தட்டொன்று தட்டி இடத்தும் வலத் தும் இரண்டு கைகொண்டும் தடவி விலங்கு வர்மத்தில் கொண்டு கையமர்த்திக் கொள்க.

25. இரண்டாவது முன்புறம் தும்மிக்காலம் வரை பின்புறம் வளமுடிந்த வர்மம் வரை தடவிக் கையமர்த்திக் கொள்க இந்தப்பிரகாரம் கண்டத்தின்மேல் ஐந்திடங்களிலும் செய்துகொள்க அங்கேயிருந்து கண்டத்துக்கும் கீழ்தும்மிக் காலத்திலிருந்து கீழ்கல்லிடைக்காலம் வரை பிறதாரை வள முடிந்த காலத்திலிருந்து சறடப்பிறந்தகாலம்வரை கைநிறை பிணையாமல் முன்னும் பின்னும் ஒருப்போல்தடவி மூன் சொன்ன ஸ்தலம் இரண்டிலும் கையமர்த்திச்கொள்க இது போலே கழுத்துளிக்குள் இடத்தும் வலத்தும் கையிட்டு அச் சிக்காந்தாரி வரை தள்ளெலும்பில் கையமர்த்திக்கொள்க.

26. இது புறங்காரை எலும்பு நடுக்குவர்மத்திலிருந்து வலதுபுறம் புராதாரை தோள்புறம் உயர்ந்த ஸ்தலத்திலிருந்து கைநிறையோடே தடவி முண்டெலும்பு வர்மத்தில் பிடித்து கையமர்த்திகொள்ளவும் முன்புறம் சிறிய அத்திச்சுருக்கியில் தடவி அமர்த்திக்கொள்ளவும் இப்படி இருபக்கமும் கண்டு கொள்க கீழ்புறம் உந்திக்கும் கீள்முகம் சூர்த்திக்கும் மேல் ஒன்பது வர்மமும் கொண்டதாலல் முன்பிரமாணத்தின்படி செய்யவும்.

Digitized By Roja Muthiah Research Library

27. கைகால் நோவுமாஞல் கைச்குழியிலிருந்து ஒரு வீரல் மேலே கைநிறைய கடவி கோழிக்கழுத்து வர்மத்தில் கொண்டு கையமர்த்தி இதுபோலே மறுபுரத்தில் அக் கையிலும் அமர்த்தி கையை ஒன்றுதறி விரல்களை இழுத்து நிமிர்த்திவிடவும் இப்படி நாலு அடங்கலிலும் ஒரு கையில் செய்க அதுபோலே சாலில் அகம் உருக்கையிலும் பிறதாரை சிப்பியிலிருந்து கடவி காலின் கண்களில்கொண்டு நிறுத்தவும்.

28 இதுபோலே மறுகாலிலும் செய்யவும் விரல்களை எல்லாம் இழுத்துவிட்டு ஒன்று உதறிவிடவும் மேல் சொன்னகண்டத்தின் அடங்கல் ஐந்தும் செய்து நாடியைப் பிடித்தேந்தி பின்கலையையும் பிடித்து இடத்தும் வலத்தும் அசைத்துவிடவும் கண்டத்தின்கீழ் கையிரண்டும் முன் பக்கத்தில் கட்டி புறதாரைநின்று உப்புக்குத்தியில் சவட்டி கையிரண்டையும் நெஞ்சில் சேர்த்து அசைத்துப்பிடித்து நெஞ்சில் நெருக்கி விடவும் கால் இரண்டும் உதறிவிடவும்.

29. எந்த அடங்கல்செய்தாலும் நோயாளிக்கு நினைவு உணர்ச்சை எப்போ உண்டாகின்றதோ அப்போது உடனே தண்ணீர் கொடுக்க வேண்டும் எந்த வர்மத்திற்கும் கஞ்சி சுக்குப்பொடி போட்டுக் காய்த்துக்கொடுக்க வேண்டும் துர் மிக்காலத்திற்குக்கீழ் மூத்திரக்காலம் வரை பிரதாரை வள முடிந்த காலத்தின்கீழ் சடையாந்த காலம் வரை நிரப்பு சரி யிட்டுக் கையமர்த்திப்பார்த்தால் அலறி சுவாசம்விடும் சாதா ரணமாகிவிட்டால் இளகுவது நிச்சயம் இதுபோலே இடத் தும் வலத்தும் கீழ்ப்படவுலிய அத்திச்சுருக்கி வரை கைய மர்த்திப்பார்த்தால் சுவாசம் அலறும் சாதாரணமாய் விடுகி றதாயிருந்தால் பிழைக்க இதல்லாமல் வருமத்தில்கொண்டு முன் சொன்னபடி கையமர்த்தினால் அமரும் சுவாசம் அப் பிரகாரமே போனால் நாம் சொன்னபிரகாரம் கைபாகமாய் இளங்கிக்கொள்ளவேண்டும்.

30. இப்பிரகாரம் யாராகிலும் வர்மம் கொண்டதற்கு மொட்டைத்தலையோடே நடைபிடித்துவந்து அழைத்தால்

Digitized By Roja Muthiah Research Library

போகக்கூடாது உள்ளேயும் வெளியேயும் கால் வைத்தழைத் தால் போகக்கூடாது முற்றத்தின் உள்ளேவந்து காலைச்சுரண் டியும் சீதகத்தை செரிந்து அழைத்தாலும் போகக்கூடாது அல்லாமலும் பெண்கள் தலைகுலைந்து ஓடிவந்து முற்றத்தில் நின்றாலும் வெளியில் நின்றாலும் தலையில் கையை வைத்து அழுதுகொண்டு அழைத்தாலும் போகக்கூடாது வெளியில் இறங்கும்போது நாய் உதரலும் மொட்டைத்தலை காணிலும் மண்வெட்டி காணிலும் எங்கே என்று கேட்பினும் வலது காலிடறினாலும் இடதுகால் மடங்கினாலும் போகக்கூடாது சொன்னேன் இதுமுறைப்படி கண்டறிந்து கொள்ளவும்.

அளவு நூல்முறை முற்று.

குருவேதுணை.

Digitized By Roja Muthiah Research Library

பீரங்கித் திரவுகோல்.

1. பிண்ட சமாசரம் படைத்த அருளைப்போற்றி ஆனந்த பரமபரத்தின் அருளை வாழ்த்தி குண்டலிக்குள் அமர்ந்து நின்ற குகையைப்போற்றி குருபொருளை அனுதினமும் குறிப்பாய் போற்றி மண்டலத்தில் குருமுனிதான் மலர்தாள் போற்றி மாதவத்தோர் மாமறையை வாழ்த்திப்போற்றி கண்டகண்ட நூல்கள் பார்த்துக் கலங்கவேண்டாம் கைப்பொருளை காத்தில் வைத்து பூரணத்தில் நில்லே.

2. பூரணமாய் பீரங்கி நூற்றுக்குள்ளே பூட்டி வைத்தேன் வர்மத்தின் புதுமை எல்லாம் காரணமாய் சூஸ்திரமது ஐம்பதற்குள் கைகண்ட மருந்துவகை கருத்தாய்ச் சொன்னேன் தாரணியில் மெய்ப்பதற்காய் திரவுகோலை சாற்றினேன் பதினரில் அடக்கமாக ஆரணத்தின் உட்பொருளை அடவாய் நின்ற அனுதியருள் இறைவா காப்புத்தானே.

3. காப்பதற்குப் பொரிபட்டு மயங்கினோரை கருத்துடனே பார்பதற்குக் குறியைக்கேளு பார்பது கண்வட்டம் பாரு சுற்றிடும் பார்த்திடுமாம் மலஜல மூர்ச்சை நாலுமுண்டு ஏற்பதுவே இக்குறிகள் நாலும் கண்டால் என்மக்காள் இளகிடாது அடுத்திடாதே.

4. சாவதுபோய் பிழைபதற்குக் குறிகள் நாலுண்டு சாக்கரியும் நாடிநிலை சரியாய் பாரே பாரப்பா நால்குறியும் சத்தத்தோடு சாற்றுகின்ற நால்குறியும் சரியாய் கண்டால் சீரப்பா பிழைப்பதற்கு ஐயம் வேண்டாம் திடமனதாய் குருபாதம் சிரசில் வைத்து அரைவீட்டில் மறைந்திருந்து ஆள்தனை இடங்காலில் அணைத்திருத்தி கூறப்பா கூம்பின் கைப்புரத்து முட்டையுமே கொடுத்துப்பிடி கீழ்நாடி கையாலேந்தே.

5. எந்தியே முட்டதனை அணைத்துக்கொண்டால் எங்கியே சுவாசம்தது நேரே போகும் கரந்தனையே வலமார்பு முதல் தடவிக்கொண்டு இடதெல்லில் கோறிக்கொள்ளு சாந்த

Digitized By Roja Muthiah Research Library

முடன் இடமார்பும் அதுபோலப்பா தப்பாமல் இரை யொன்றி இரக்கிக்கொண்டு ஆள்தனையும் மும்மூன்று வளையும் செய்து அப்பனே நேரே தான் தடவு மூன்றே.

மூன்றென்ற நேரே கைமுறைதானப்பா முன்னும் கத்தரிக்கோல் மாறலாக சான்றோர்கள் கைமுறையாய் காண வேணும் சண்டாளர் தடவுமுறை தடவொண்ணாது ஆன்றோர் கள் அளவுதப்பி நடக்கவேண்டாம் அதுகடந்தால் கீழ்நாடி இறையொன்றுக்குள் ஊன்றடா நடுவிரலால் இரையே ஒன்று ஊன்றிடவே கண்விளிப்பான் உண்மைதானே.

7. உண்மையுடன் இளக்காவிட்டால் உருதிகளை ஊன்றடா கடவாயில் விரல் நாலுக்குள்ளே வண்மையுடன் பெருவிரலால் ஊன்றிக்கொண்டு பார்த்திருப்பான் கண்பார்த் துக்கொள்ளை வண்மையுடன் அதற்குமேல் வலதுகையை தாக்கடா பிரங்காலில் புரத்தே தண்டில் கண் வட்டமாய் பாம்பு விரலால் இரையே ஒன்று பற்றியே இருகரத்தும் வந்தித்துக்கே.

8. தூக்கையிலே கண்விளித்து எழுந்திருப்பான் தூரிதமுள்ள சர்வாங்கம் இதுதானப்பா ஆக்கையிலே சுக் கிட்டு சாமையன்னம் அருமையுடன் கொடுத்துவிடு அவள்தா மாகும் பார்க்கையிலே கடவாயில் புரத்தே நோக்கி பாலகனே விரல் பத்தும் வந்திக்கொள்ளை நோக்கு முன்னே எழுந்திருப் பான் துள்ளிபமாய் நூல்பார்த்துக் கைமுறையாய் அறிந்து கொள்ளே.

9. கொள்ளுதற்கு வர்மத்தால் சன்னிவெட்டுகொண்ட தென்றால் பெருவிரலிடையே தன்னில் விள்ளுமே ஓரிரை தான் தள்ளிமெள்ள வெட்டிப் பிடித்திடுவாய் சன்னிபோகும் கள்ளமில்லை வர்மமுடன் மயக்கம் தீரும் கைகண்ட காலடங் கல் முறைதானப்பா உள்ளபடி கைக்குழியில் ஓரிரைதான் உத்தமனே கொடுத்தூன்றித் தூக்குவாயே.

Digitized By Roja Muthiah Research Library

10. வாய் மொளிவாய் வளுவிலாச் சொல்லிவிட்டேன் சுவயகத்தோர் பிளைப்பதற்கு வகைதானப்பா தாய்மொளி யாய் நெற்றி முடிகன்னில் நின்று தப்பாமல் பதிமூருவ ஷிர லில்தானே காய் பழுத்த கனிபோலே கடுகளவு வீதி கை காட்டி குருமுறையாய் தலத்தைக்கண்டால் நாய்போலே அலைவானேன் ஜீவன்போக நல்மணிபோல் தமமொன்று நன் ருய்க் காணே

11. நன்ருகக் காணவென்ருல் ஜீவன்போனுல் நலமாக காணுமடா துவாரப் ஒன்று குன்ருதே ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் குருமுறையாய் குருதாட்டுக்காட்டவேண்டும் மன்ருடி மான்போல மருகுவாரோ வாய்க்காத முறை யுண்டோ வையகத்தில் தன் பெருமை கொள்ளாதே தவ ரிடாதே சத்தியத்தை மாவாதே தயவாய் நில்லே.

12. நில்லென்று சொல்லிவிட்டேன் நிலத்துள்ளோர்க்கு நிலைகுலைந்து மாத்திரையில் மீறினுக்கால் வல்லவனே வாம மது இளகிடாது மதிமயங்கிக் கண் சிவந்து காணும் அல்ல லில்ல அதுசமயம் மருந்தும் கையும் அமர்த்திவைத்தே தன் அன்புள்ளோர் அறிந்து கொள்வார் தொல்லையில்லை வேலி தனைப்பிளிந்து சாற்று சுருக்காகப் பாதம்முதல் உச்சிமட்டும்.

13. மட்டாகத் தாளியிட்டுத் தேய்த்துக் கொண்டு வளமாக பேன்குழி விரலாலுன்றி திட்டமுடன் மாத்திரை தான் இஞ்சியொன்று சுகமாகத் தாக்கிவிட்டு மறுகாதில் ஊதி சட்டமதாய் உச்சியிலோர் அடியடித்து நடவிவிடு குருக்கதிலும் தயவுதாக விடுகிறதாயுள்ளவற்கு எய்து மெய் யும் மெய்முறையாய் தலமொன்று விளம்பக்கேளுர்.

14. விளம்புவேன் ஆசாடக்காலம் ஒன்று வீராபின் ஜீவன்வரும் மேன்மையுண்டாம் கலங்கமில்லா அடக்க மொன்று சொல்லக்கேளுர் காதில் முன் குருத்தின் கீழ் இறையில் தானே வழக்கமுடன் நெல்போலே ஊறிதானென்று வளமாக அரைவிரல்தான் ஊன்றித்தாக்கே இளகியே மயக்கம்

Digitized By Roja Muthiah Research Library

விடும் ஜீவனுண்டாம் விள்ளாதே ஒருவருக்கும் மேன்மை பேராச்சே.

15. போச்சென்று நினையாதே பிலன்கொள்ளாதே பொய்யொன்றும் சொல்லாதே பொருளதாச்சே ஆச்சப்பா அடங்கல்முறை அடக்கிச்சொன்னேன் ஆசானை அடுத்து வைத்து அறிந்துகொண்டால் மூச்சப்பா விடுமுன்னே ஜீவன் வந்து மூன்றுக்குள் எழுந்திருப்பான் மூற்றும் சொன்னேன் ஆச்சப்பா அடங்கல் முறை அசாத்தியம் கண்டால் வாங்கி விடு நில்லாதே மாண்டுபோமே.

16. போகுமுன்னே கெடுவதிலே இளக்கிக்கொள் வாய்பூட்டெல்லாம் திறந்துவிட்டேன் புதையாக ஆக்க மிந்த புத்தியுனக்கிருந்ததாலல் அஞ்சாதே அசையாதே அடுத்துப்பாரு வற்கையிலே இறைவனை தியானம்செய்து என்குருவே தஞ்சமென்று எழுந்துபோவாய் யோகான ஐந் தெழுத்தை ஓதிப்போடு வளமான திரவு பதினறும் முற்ற்று.

பீரங்கீத் திரவுகோல் முற்றிற்று.

குருவே துணை.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA.

Digitized By Roja Muthiah Research Library

கேர்ப்பிணிகள் வர்ம இளக்குமுறை.

1. சதமுடனே மயக்கம் உள்ள தையலர்க்கு கூந்தல் தனைக்குலைத்து விதமான நாலுபங்காய் வகுத்துப்போட்டு நினைவாக குருபரன் இருத்திப்போற்றி போற்றியே நீ கிளைருகை அசக்கயாலே புண்ணியனே பதைபதைத்து முன்பதைப்பு மட்டும் ஆற்றியே தடவிப்பின் நாபியிலும் அப்படனே அப்பு சிப்பி அரையின்கீழ் கழுத்துமட்டும் போற்றியே நால்வசமும் கசக்கிறுவி முதுப்புறமேதான் தடவி அமர்த்திவைத்து சாற்றியே மேலடங்கல் தனனில் சாற்றி சார்பாக மேலடங்கல் செய்துகொள்ளே.

2. கொள்ளப்பா இப்படியே செய்துகொண்டு கோர் வாக மேல் சங்குதிரியில்தானும் நாளப்பா இருவசமும் திரிச் சுற்றி நாயகமே தோளிரண்டும் அமர்த்திப்போடு போடப்பா உச்சியின்மேல் கையை வைத்து விதமாக மூன்று தட்டு லேசாய் தட்டி தட்டியே முறைப்படியே செய்தாயானால் ஜீவ னது வந்துவிடும் மீண்டுதானே மீளவே சுக்கு வெண்ணீர் குடிக்கச் சொல்லே.

3. சொல்லவே மயக்கமென்றால் நீக்கிப்பார்த்து சுருக் காக கலசத்தில் தண்ணீர்கொண்டு பரப்பிரம்மத்தை சிவம் என்று சேவித்து போற்றியே விசிகாணவே முகத்தெளிப் பாய்மயக்கம் தீரும்.


4. நலமான கஞ்சிமுறை விளம்பக்கேளு நாயகமே உளுந்தினை குருந்தட்டி வில்வ வில்வயொடு சீரகமும்மதுரம் ஏலம் வகையான வெந்தயத் தேதாடனமாகும் வகையாக களஞ்சியொன்று நிறுத்துக்கொண்டு வண்ணமாய் சனைத்து இருகிளியாய்க்கட்டி மணமாகத்தான் காச்சி கிளியைநீக்கி அன்னப்பாலது அருந்தி பத்தியம் காத்து தினகயாக இப்படியே செட்டிப்பாக சூட்சமாய் அருந்திடில் வர்மம் போச்சே.

Digitized By Roja Muthiah Research Library

5. போகவே சொழுத்து நரம்பு தெற்றல்கண்டால் ஆவின்நெய் சீனி சிங்கன்பழம் ஓரிலையுமாகும் சமமாக எடுத்துக்கொண்டு நிச்சயமாய் குழியப்மிதன்னில்வைத்து வெந்நீரால் மைமீபோலாட்டி வண்மையாய் கெர்பிணியின் வயர் விலாக்கள் வள்ளிசாய் முதுகுடம்றும் இடத்தில்பூசே எண்ணமாய் கொளுத்மீதாடு நரம்புத்தெற்று உளைச்சல்களுநம் ஓடிப்மீபாகும் சூட்டம் சூட்சம் சூட்சமென்ற அமிர்தநிலை தெளிவாய் சொன்னேன் ஐயடா இத்தலங்கள் தெளிந்து கொள்ளே தெளிந்துகொண்டு தையலற்கு இளக்கம் செய்தால் ஜெயமாகும் குறைவில்லை சூட்சம்முற்றே.

கெற்பிணிகள் வர்ம இளக்குமுறை முற்றிற்று.

குருவேதுணை.



பங்கஜம் பிரஸ், போடிநாயக்கனூர்:-3-38.

Digitized By Roja Muthiah Research Library

பிழை திருத்தம்.

பக்த நீர்.	வரி நீர்.	பிழை.	திருத்தம்.
8	3	முதுவருயில்	முதுவரியில்
9	20	பார்த்தென்ன	பார்த்தென்ன
13	26	கோவென்ற	கோனென்ற
14	13	சுருக்கியுன்	சுருக்கியின்
,,	28	நீர	நீரது
15	9	அண்டைக்காலம்	அண்டக்காலம்
,,	26	மாட்டை	மாட்டே
16	15	பிரியக்காலம்	உயிர் பிரியக்காலம்
,,	24	செய்யாவிட்டால்	(பதிலாக) தீருமடா
,,	25	போட்டு	போட
17	5	சுருக்கு	சுளுக்கு
,,	6	சுருக்கிக்	சுளுக்கிக்
19	3	ஹூல்	ஹூல்
,,	19	பர்நொடி	நொடி
,,	29	தைலமிட்ல்	தைலமிட்டால்
20	5	பரத்தின்	பராபரத்தின்
,,	16	நைபப்பா	நையப்பா
21	14	கடிமைடா	கடினமடா
24	5	மொழியாணும்	மொழியானும்
,,	5	கேட்டேனே	கேட்டேன்
,,	17	குங்குப்பூ	குங்குமப்பூ
,,	25	சுட்டிடவே	எடு
,,	26	தாட்டிடுமே	எடு
25	2	வாங்கே (அடுத்து)	வாங்கியே (சேர்க்க)
27	25	மேனதான	மேலான
,,	28	தண்டிடத்தான்	கண்டித்தான்
29	26	பனி	பளி
30	8	பூருன	பூணன
31	29	கடிமை	கடினம
34	19	குரும்	குருகும்
,,	27	கடின்மையப்பா	கடுமையப்பா

Digitized By Roja Muthiah Research Library

பக்க	வரி	பிழை.	திருத்தம்.
35	12	சுமத்திடுகல்	சுமைத்திடுகில்
36	1	முள்ளாக்கரங்காலதுவும்	முள்ளாகிகரங்காலதுவும்
,,	17	அதிகாரமுண்டாம்	அதிசாரமுண்டாம்
39	7	ஆட்டம்	ஆட்டமப்பா
,,	,,	பாதிடமாக	திடமாக
43	13	கையான	வகையான
45	8	தீருமெபன்று	தீருமென்று
46	9	சிறப்பிடனே	சிறப்புடனே
57	9	கெற்றி	தெற்றி
62	27	ஜன்னி	சென்னி
64	12	பம்பரச்சுடர	பம்பரச்சுடர்
,,	26	கொண்டையின்	தொண்டையின்
73	2	மொருத்தாகும்	பொருத்தாகும்
79	2	திரிமிர்ந்து	திமிர்ந்து
,,	12	சரியாநங்கை	சிறியாநங்கை
93	16	எணப்படி	எண்ணப்படி
,,	19	சீழ்	கீழ்
96	12	மதருக்கு	மனிதருக்கு
,,	30	தவம்போடவும்	தவளம் போடவும்
101	22	மடங்கும்	மடக்கும்
102	23	சேர்ந்த	சேர்ந்து
103	15	படியாக்கு	படியாக்கி
,,	26	தைவளை	தைவேளை
105	24	ஃபத்திற்கு	கபத்திற்கும்
,,	26	முதங்காய்	முத்தங்காய்
111	25	குடிதானே	குடிதானேரி
,,	26	நல்தரமாய்	நல்லரமாய்
116	12	அசலநில்லி	அகலநில்லு
117	3	வலிவிலகி	வளிவிலகி
118	9	சரிபாய்	சரியாப்
124	2	குறைந்தாலே	குறைந்து

Digitized By Roja Muthiah Research Library

பக்க நிரை	வரி நிரை.	பிழை.	திருத்தம்.
125	21	ப'க்கத்துன்ளூர	பக்கத்துள்ளூர
128	30	காலவது	காலமது
130	7	குடலிப்பற்று	குடலிப்படற்றி
,,	11	செய்யாகே	செய்யாதே
131	16	கூம்மெலும்பின்	கூம்பெலும்பின்
,,	17	பித்தக்காய்	பித்துக்காய்
132	1	சனிவேகம்	சன்னிவேகம்
,,	6	கவருமாகில்	தவருமாகில்
,,	19	சரற்றூர்	சரமற்றூர்
,,	24	சற்றேகெளூ	சாற்றேகளூ
139	4	மறுபண்டம்	மறுபாண்டம்
,,	14	நாளியால்	நாளியாய்
,,	20 & 21	செம்மரியின் கிழங்கின் சாகம் வகையான	(தள்ளுபடி செய்யவும்)
141	1	கல்—டையும்	கல்சடையும்
,,	2	மீரைசேர	மீரைசேரவே
,,	8	அசைவுறிக்	அசைவுறிவுக்
,,	8	மென்றதனை	மென்றதனை
143	24	நீர்பபூலா	நீர்பூலா
146	2	ஆங்குமெற	ஆங்குபெற
151	12	காகக்லமும்	காக்கலமும்
,,	24	நீர்துள்ளி	நீர்முள்ளி
,,	24	விராலிச்சாகப்	விராலிச்சாகம்
152	31	தானேடுபாங்கி	தானேபொங்கி
153	9	மேனிமறிந்து	மேனிஅறிந்து
155	4	அணலை	அனலை
,,	22	கோணுமே	தோணுமே
156	1	கததாரியோடே	கத்தரியோடே
157	10	பதமூடி	பாதமூடி
160	15	இரண்மொன்ருய்	இரண்டுமொன்ருய்

Digitized By Roja Muthiah Research Library

புக்க நீர்.	வரி நீர்.	பிழை.	திருத்தம்.
161	1	பரமனுந்நுணை	பரமனிந்நுணை
163	7	விள்ளுவே	விள்ளவே வேர்
,,	19	அணலெரித்து	அனலெரித்து
167	5	பலாதாளி	பூலாதாளி
,,	11	சோளம்	சோலம்
,,	18	பல்லுபதம்	கல்லுபதம்
168	28	சோளம்	சோலம்
172	1	குருவைம்போற்றி	குருவைப்போற்றி
,,	4	திறவுகேல்	திறவுகோல்
173	13	சரருடனே	சரமுடனே
174	21	வட்டமில்லா	வாட்டமில்லா
,,	24	வட்டும்	மட்டும்
176	2	மதுதன்னிய்	மதுதன்னில்

Digitized By Roja Muthiah Research Library